
# ஈழத்தின் தமிழிசை

## அரங்கேற்று விழாச் சிறப்பு மலர்



21.04.2019,
இலங்கைவேந்தன் கலைக் கல்லூரி,
யாழ்ப்பாணம்

# ஈழத்துத் தமிழிசையின் கவிராயர்கள்



சுவாமி விபுலாநந்தர் | ஆறுமுக நாவலர் | யோக சுவாமிகள் | வினாசித்தம்பிப் புலவர் | வீரமணி ஐயர்

கல்லடி வேலுப்பிள்ளை | சோமசுந்தரப் புலவர் | கிருஷ்ணபிள்ளை | உருத்திரமூர்த்தி | நீலாவணன் | முருகையன்

க.சொக்கன் | பொ.சிவகுருநாதன் | ஏ.கே.ஏரம்பமூர்த்தி | ம.திலகநாயகம்போல் | ச.யாசிங்கம் | சிற்பி சரவணபவன்

மு.கணபதிப்பிள்ளை | முழக்கர் முருகப்பா | சிவநேசன் வே. கந்தையா | மூளாயூர் தி.தவம் | அகத்தியர் அடிகள் | நீ.மரியசேவியர்அடிகள்

சோ.பத்மநாபன் | செ.சிவசுப்பிரமணியம் | அகளங்கன் | பொன்.ஸ்ரீவாமதேவன் | க.ப.சின்னராசா | மா.சிதம்பரநாதன்

கண.எதிர்வீரசிங்கம் | க.மயில்வாகனம் | பா.மோகனா | கா.மணிமேகலாதேவி | வசாவிளான் தவமைந்தன்

**உலகின் முதலிசை தமிழிசை... உயரிசை எங்கள் உயிரிசை**

# காணிக்கை...

ஈழ தேசத்தில் கலைப்பணியாற்றி
மறைந்த அனைத்துக் கலைஞர்களுக்கும்...

**அரங்கின் தலைவர்**

**திரு. தவநாதன் றொபேட்,**

(முதுநிலை விரிவுரையாளர், இசைத்துறை , யாழ்.பல்கலைக்கழகம்)

**முதன்மை விருந்தினர்**

*தமிழிசை வாக்கேயக்காரர்*

**சங்கீத வித்துவான் திரு. பொன். ஸ்ரீவாமதேவன்,**

(ஓய்வுநிலை இசை ஆசிரியர், முன்னாள் விரிவுரையாளர்,
யாழ்.பல்கலைக்ககழகம்)

**சிறப்பு விருந்தினர்**

**கலைஞர் திரு. வேல். ஆனந்தன்,**

(ஓய்வுநிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர்,
அழகியற்கல்வி, வட கிழக்கு மாகாணம்)

**ஆசி வழங்குவோர்**

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்,**

(ஆதீன குரு முதல்வர், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம், யாழ்ப்பாணம்)

**கலைத்தூது வண. நீ. மரியசேவியர் அடிகள்,**

(நிறுவுநர், திருமறைக் கலாமன்றம், யாழ்ப்பாணம்)

**அகத்தியர் அடிகள்,**

(குரு முதல்வர், தென்கயிலை ஆதீனம், திருகோணமலை)

**நிகழ்வின் தொகுப்பாளர்கள்**

**நுண்கலைமாணி திரு. லி. ரதீஸ்**

(ஆசிரியர், பரி.யோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்)

**திருமதி. மாதங்கி வர்ஜிகன்**

(மாணவி, நடனத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

# ஆசிச் செய்தி



சிவபூமி என்று போற்றப்படும் ஈழத் திருநாட்டிலே தமிழும் சைவமும் கலைகளும் தொன்று தொட்டு வளர்ந்து வருவதை நாம் அனைவரும் அறிவோம். சகலவிதமான கலைகளிலும் ஈழத் தமிழர்கள் புகழ் பெற்று வந்துள்ளனர். அந்த வகையில் தமிழ் மொழியிலும் தமிழ் இசையிலும் நாங்கள் தனித்துவமானவர்கள் என்பதை இந்த உலகமே அறியும்.

எமது அன்புக்குரிய கலைஞர் தவமைந்தனின் முயற்சியில் ஈழத்தின் நூறு பாடல்கள் தெரிவு செய்யப்பட்டு ஒரே நாளில் அரங்கேற்றம் செய்யப்படுவது வரலாற்றுச் சாதனை ஆகும். இவ்வாறான செயற்பாடுகளில் ஏனைய கலைஞர்களும் ஈடுபட்டு எமக்கென்று தனித்துவமான இசைப் பண்பாட்டை உருவாக்க முயற்சிக்க வேண்டும்.

இந்த விழா சிறப்பாக நடைபெற நல்லை முருகனின் பாதம் பணிந்து அனைத்துக் கலைஞர்களையும் வாழ்த்துகின்றேன்.

**என்றும் வேண்டும் இன்ப அன்பு**

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**
*(இரண்டாவது குருமஹாசந்நிதானம்)*
குரு முதல்வர்,
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்,
நல்லூர், யாழ்ப்பாணம்.

# தெய்வீக சிந்தனை....



தமிழிசை விழா - நுண்கலைகளின் தாயகம் உளம் கொண்டு தெள்ளித் தெளிக்கும் உன்னத விழா. ஈழத்து எழுத்தாளரின் நூறு பாடல்கள் இசையுருப் பெற்று அரங்கில் பொழியப் பெறுகிறது. இசை அறிஞர் திருவாளர் தவநாதன் றொபேட் அவர்களின் தெய்வீக சிந்தனையின் வெளிப்பாடாய் இந்த இசையருவி காற்றிடை கலந்து செவி வழி மனக்கடலில் சங்கமிக்கப் போகிறது. நல்லோர் செயல் என்றும் நலம் தரும்.

**வாழ்க தமிழ். வளர்க தமிழிசை**

**அகத்தியர் அடிகள்**
தென்கைலை ஆதீனம்,
திருகோணமலை.

# வாழ்த்தி நிற்கின்றேன்



சங்ககால இலக்கியப் படைப்புக்களாகிய அகநானூறு, புறநானூறு அடங்கலான எட்டுத் தொகை, முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு அடங்கலான பத்துப்பாட்டு, நாலடியார், இன்னா நாற்பது, இனியவை நாற்பது, கார் நாற்பது அடங்கலான பதினெண் கீழ்க்கணக்கு போன்ற எண் வரிசை ஒப்ப, இரண்டு ஆண்டுப் பயிற்சி, பத்துப் பாடகர்கள், ஐயைந்து பாடல் ஆசிரியர்கள், புதிதாக இசையமைக்கப்பட்ட தொண்ணூறுக்கும் அதிகமான பாடல்கள் அடங்கலாக நூறு பாடல் கள், ஆயிரம் அழைப்புக்கள் என்னும் எண் சிறப்பைக் கொண்ட, ஈழத்து செந்நெறித் தமிழ் இசையின் அரங்கேற்றம் என்று கருதக் கூடிய, இந் நிகழ்ச்சியின் மூலைக்கல்லாக விளங்குபவர், யாழ்ப்பாண பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளரான திரு.தவநாதன் றொபேட் அவர்கள் ஆவர்.

இவர் ஒரு கலைப்பரம்பரையில் பிறந்து சிறிய வயதில் இருந்தே கலையோடு வாழ்ந்து, கிராமிய இசையில் தேறித் தெளிந்து, பின் சாஸ்திரிய இசையை முறையான கல்வியினூடாக கற்று அதில் தன்னிகரற்று விளங்குபவர். அதுமட்டுமன்றி, குரல் வளத்தாலும், செதுக்கப்பட்ட இசைப்பட்டறிவினாலும் புலமை நிறைந்து விளங்குவதுடன், விரலிசையிலும் (ஹார்மோனியம்) வல்லவராக விளங்குகின்றார். இசையுடன் இணைந்த நாடகத்துறை, வில்லிசைத்துறை என தனது பணிகளை அகலப்படுத்தி வரும் இவர், தனக்குப் பின்னரான ஒரு மாணவப் பரம்பரையினரை நேர்த்தியாக வளர்த்து வருகின்றார் திருமறைக்கலாமன்றத் துடன் கால் நூற்றாண்டுக்கு மேற்பட்ட உறவுள்ள வளவாளராகிய இவர், நாம் நடத்திய பல இசைக் கச்சேரிகள், நடன அளிக்கைள், அரங்கேற்றங்கள், நடன நாடக நிகழ்ச்சிகள், இசை ஆவணமாக்கல்கள் என பல செயற்பாடுகளுடன் இணைந்து நின்று அவற்றை சிறப்படைய வைத்த பெருமைக்குரியவர்.

நாம், தமிழ் நாட்டுடன் மிக நெருக்கமான தொப்புள்கொடி உறவினைக் கொண்ட வர்கள். எமது கலை மரபுகளின் தொடக்கங்கள் அங்கிருந்தாலும், ஒவ்வொரு துறையிலும், நாம் நமக்கான தனித்துவத்துடன் விளங்க வேண்டியவர்கள். காரணம், நமது மண்ணுக்கு, ஒரு புறம் இறைவனையே இசையால் கவர்ந்த இராவணேஸ்வரனுடைய பூமி என்ற ஓர் ஐதிகம் உள்ளதாலும், மறுபுறம், நாம் வாழும் நிலம், யாழ் பாடி என்னும் இசைவாணனின் பெயரைத்தாங்கி நிற்பதாலும், இசைத்துறையில் நமக்கு இசைவான இசைப் பாரம்பரியத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணக்கரு எழுவது இயல்பு. இதனை, ஆழமாக சிந்தித்த நமது தலைமைத்துவங்களையெல்லாம் முள்ளிவாய்க்காலுடன் இழந்து நிற்கும் இன்றைய சூழலில், அத்தகைய நமது மண் சார்ந்த சிந்தனையை தனக்குள் கொண்டு செயலாற்றும் திரு.தவநாதன் றொபேட் அவர்களை மனமாரப் போற்றி வாழ்த்த வேண்டியது நமது கடமை யாகும்.

"**நாமும் நமக்கோர் நலியாக்கலையுடையோம்** என்ற மஹாகவியின் கூற்றுக்குத் தலை சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கும் இவ் இசை விருந்து சிறப்படைய இறைவனை வேண்டுவதுடன், இதில் ஈடுபடும் அனைத்து கலைஞர்களையும் வாழ்த்தி நிற்கின்றேன்.

**நீ.மரியசேவியர் அடிகள்,**
இயக்குநர், திருமறைக்கலாமன்றம், யாழ்ப்பாணம்,

## அனைத்துத் தமிழரையும் அணைத்துக் கொண்டோடும்

# அழகிய பிரவாகம் ஈழத்தின் தமிழிசை



ஈழத்தின் தமிழிசை (ஆற்றுகை நிகழ்வு)இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி மண்டபத்தில் 21.04.2019 அன்று இடம்பெறுகிறது. ஈழத்துக் கவிஞர்களாலும் இசைப் பாடகர்களாலும் இயற்றப்பட்ட பாடல்கள் தெரிவு செய்யப்பட்டு இரண்டு ஆண்டுகள் விசேட பயிற்சியளிக்கப்பட்டு, தவமைந்தன் றொபேர்ட்டினாலும் அவரது ஒன்பது மாணவர்களா லும் 100 பாடல்களை அன்றையதினம் இசைக்க இருப்பதாக அறிந்து பெருமகிழ்வடைகிறேன். 25 இற்கும் மேற்பட்ட ஈழத்துக் கவிஞர் களின் பாடல்கள் இந்நிகழ்விற்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் . தானவர்ணம், பதவர்ணம், கீர்த்தனை, சௌக்க காலக் கிருதி, பதம், துதிப்பாடல்கள், தில்லானா, காவடிச்சிந்து, திருப்புகழ் போன்ற இசைப்பாடல் வகைகள் இந் நிகழ்வில் இடம்பெற உள்ளதாகவும் அறிகிறேன்.இவற்றுள் தொண்ணூறுக்கும் அதிகமான பாடல்கள் புதிதாக தவமைந்தன் றொபேட்டினால் இசை வடிவம் கொடுக்கப்பட்டுப் பயிற்சி யளிக்கப்பட்டுள்ளன இது ஓர் பெரு முயற்சி.சாதனை எனினும் பொருந்தும் இவ்வாண்டில் இது ஓர் முக்கிய நிகழ்ச்சியாக எனக்குத் தெரிகிறது ஈழத்தமிழருக்கான ஒரு தனி மரபு இலக்கியம் நாடகம் இசை ஓவியம் . கூத்து நடனம் வாழ்க்கை முறை என அனைத்திலும் உண்டு.

இப் பண்பாட்டுத் தனித்துவத்தை ஆறுமுகநாவலர், தொடக்கம் சுவாமி விபுலானந்தர் ஊடாக பேராசிரியர்களான கணபதிப்பிள்ளை, கைலாசபதி, வித்தியானந்தன், சிவத்தம்பி மற்றும் தளையசிங்கம் ஏ.ஜே கனகரத்தினா ஊடாக இன்று இசைவாணர் தவமைந்தன் றொபேர்ட் வரை அனைத்து அறிஞர்களும் கலைஞர்களும் அழுத்திக் கூறி வந்துள்ளனர் தமிழகப் பண்பாட்டின் தொப்புழ்க்கொடியுடன் பிணைக்கப்பட்டிருக்கும் நாம் அப்பெருமரபின் வாரிசு எனக் கர்வம் கொள்ளும் அதே வேளை தொப்புழ்க் கொடியிலிருந்து பிரிந்தமையி னால் நாமும் நமக்கோர் நலியாக கலையுடையோம் என்ற சுயகௌரவமும் செருக்கும் கொண்டுள்ளோம்.

இவ்வகையில் நாமும் நமக்கோர் இசைப் பாரம்பரியம் கொண்டுள்ளோம் இதற்காக தம் வாழ்வை அர்ப்பணித்த இசை வாணர்களைக் கொண்டது எமது தேசம் ஈழத்தில் கர்நாடக கீர்த்தனைகள் பதங்கள் இசைப்பாடல்கள் பாடியோர் அதிகம் எமது செந்நெறி, இசை மரபில் 2000க்கும் அதிகமான கீர்த்தனைகள் உள்ளன என அறிகிறோம் ஈழத்து மெல்லிசை என ஒன்று உருவாகி இன்று அது பல பரிமாணங்களையும் பெற்றுள்ளது பல்நூற்றுக்கணக்கான மெல்லிசைப் பாடல்கள் எம்மிடமுள பல்லாயிரக்கணக்கான மக்கள் இசைப்பாடல்கள் இங்குண்டு. இறைவன், இயற்கை, காதல், சமுகம், விளையாட்டு, வேடிக்கை தொழில் சடங்கு, கோபம், தாபம் என அதன் உட்பொருள் விரியும். அப்பாடல்கள் பல சொற்சுவையும் பொருட்சுவையும் மிக்கவை. அப்பாடல்களில் சிலவற்றைத் தெரிந்தெடுத்து இசையமைத்து நமது செந்நெறி இசைமரபை ஈழத்தின் தமிழிசை என அரங்கேற்றுகின்றார் தவமைந்தன். இதற்கு இசையில் ஆழமான புலமை மாத்திரமன்றி அசாத்திய துணிவும் தேவை. இவை இரண்டும் ஒருங்கே அமைந்தவர் றொபேர்ட் மிகுந்த கற்பனை வளமுள்ள கலைஞன் அவர் வாய்ப்பாட்டிலும் வாத்தியம் இசைப்பதிலும் வல்லவர். ஈழத்துச் செந்நெறித் தமிழிசை யின் அரங்கேற்றம் நிகழ்த்தும் தவமைந்தனையும் அவரது அணிசேர் இசைக் கலைஞர் களையும் வாழ்த்தும் அதேவேளை. ஈழத்தின் செந்நெறிசாராத செழுமையான மக்களிசை

மரபொன்றும் உண்டு என்பதை இங்கு கூற விரும்புகின்றோம் இசை வல்லுனரான தவமைந்தனுக்கு இது தெரியாததொன்றல்ல.

முதல் பாகமாக இதனைச் செய்யும் இவர் அடுத்த பாகமாக அதனையும் செய்து அதன் பின் இரண்டையும் இணைத்து மூன்றாம் பாகமாக ஒரு முழு ஈழத் தமிழிசை ஒன்றை எமக்கு அளிப்பார் என எதிர்பார்ப்போம்.

அவரால் அது முடியும் தமிழிசை என்பது ஒரு பெரும் பேராறு அது காலத்துக்கும் சூழலுக்கும் ஏற்ப தன்னைத் தகவமைத்துப் பிரவகித்தபடி ஓடிக்கொண்டிருக்கிறது தமிழிசை என்பது அனைத்தையும் இணைத்த அனைத்துத் தமிழர்களையும் பிணைத்துக் கொண்டோடும் அழகிய பிரவாகம் அந்தப் பிரவாகம் கரை புரண்டோடி அனைவரையும் நனைக்கட்டும் இசையால் இணைவோம் இசையால் இணைவோமே இசையால் இணைவோமே-தமிழ் இசையால் இணைவோம் இசையால் இணைவோம் இசையால் இணைவோமே.

**பேராசிரியர் சி.மௌனகுரு**

## ஈழத்துக் கவிராயர்களின்
# ஆத்ம திருப்தியாக இது அமையும்



இலங்கைவேந்தன் கலைக் கல்லூரி மண்டபத்தில் 21.04.2019 இல் நடைபெற இருக்கும் ஈழத்தின் தமிழிசை - அரங்கேற்று விழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

காலத்தின் தேவையையொட்டி பேசப்பட்டு வரும் நம் தமிழிசைப் பாடல்களைத் தேடியும் இயற்றியும் அதற்கு இசைவடிவம் கொடுக்கும் திரு தவநாதன் றொபேட் அவர்களின் முயற்சி பாராட்டப்பட வேண்டிய தொன்றாகும். அதற்கு வேண்டிய பாடல்களை ஒழுங்குபடுத்தி அவரிடம் பயிலும் மாணவர்களுடன் தமிழிசை அரங்கேற்றம் காண இருக்கின்றது. மேலும் நமது ஈழத்துக் கவிராயர்களாலும் இசையாளர்களாலும் இயற்றப்பட்ட பாடல்கள் இங்கு தெரிவு செய்யப்பட்டிருப்பதாக அறிகிறேன். எனவே அவர்களின் ஆத்ம திருப்தியாகவும் இது அமையும்.

தமிழ்நாட்டில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தை ஸ்தாபித்த சேர் ராஜா அண்ணா மலைச் செட்டியார் அவர்கள் தமிழிசைப் பாடல்களுக்கு ஒரு விழிப்புணர்ச்சியைத் தோற்று வித்தது போல நம் மண்ணிலும் சமூக மட்டத்திலும் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதே இந்நிகழ்வின் நோக்கம் எனக் கருதுகிறேன். "முயற்சி திருவினையாக்கும்" எனும் சான்றோர் வாக்குக்கிணங்க இந்நிகழ்வு சிறப்பாக அமைய எல்லாம் வல்ல இறையருள் கிடைக்க வேண்டி வாழ்த்தி அமைகின்றேன்.

*"வாழ்க கலை*
*வளர்க நம் சமூகப் பணி"*

**கலாஜோதி திருமதி. சாந்தினி சிவநேசன்**
கலா பவனம்,
கொக்குவில்.

# வாழ்க நிரந்தரம்



இன்று இங்கு நடக்க இருப்பது ஆற்றுகையொன்று. அவ்வாற்றுகை இசையாற்றுகையாக இருக்கப்போகிறது. அவ்விசையாற்றுகையோ தமிழிசை ஆற்றுகையாக இருக்கப் போகிறது. அத்தமிழிசை ஆற்றுகை யோவெனில் "ஈழத்தின் தமிழிசை ஆற்றுகையாக இருக்கப்போகிறது. இதுவே இவ்வாற்றுகையின் அதிசிறப்பியல்பாக அமைகிறது. அதன் காரணமாகவே, இப்பெரும்பணி "நிரந்தரம் வாழ்க" என வாழ்த்தத் தோன்றியது.

ஈழத்தமிழ்ப் பெருமக்கள் சிலரால் இயற்றப்பட்ட கவிதைகள், பாடல்கள் சிலவற்றைத் தெரிந்தெடுத்துப் பாட இருக்கிறார்கள். இவ்வாற்றுகையில் 100 பாடல்களைப் பாடத்திட்ட மிட்டுள்ளார்கள். பாடுகின்றவர்களது எண்ணிக்கை பத்தாக இருக்கப்போகிறது. பாடல்கள் நூறு, பாடுபவர் பத்து - எனவே இது பத்தாது எனச் சொல்ல இடமிராது: காலை முதல் மாலை வரை செவியார விருந்து, மதியம் வயிறார விருந்து.

இங்கு பாடப்படும் பாடல்கள் யாவற்றினதும் இசையானது, தென்னிந்திய மொழிகளின் செந்நெறி தொல்சீர் இசையாக அமைந்துள்ள "கர்நாடக இசை"யில் அமைக்கப்பட்டுள்ளது. தென்னிந்திய மொழிகளின் பொது இசையாக கர்நாடக இசை இருப்பதால் அது தமிழ்மொழி யின் இசையாகவும் அமைந்து விடுகிறது.

இன்றைய இவ்வாற்றுகையில் தானவர்ணம், பதவர்ணம், கீர்த்தனை, சௌக்ககாலக் கிருதி, பதம், துதிப்பாடல்கள், தில்லானா, காவடிச்சிந்து, திருப்புகழ் போன்ற இசைப்பாடல்கள் இடம்பெறவுள்ளன. இங்கு பாடப்பட இருக்கும் 100 பாடல்களில் தொண்ணூறுக்கும் மேலான பாடல்களுக்குத் திரு.தவநாதன் றொபேட் அவர்களால் புதிதாக இசை அமைக்கப்பட்டுள்ளது.

இந்த இசை நிகழ்வில் திரு.றொபேட்டுடன் இணைந்து அவரிடம் இசைபயின்று வரும் ஒன்பது மாணவ மாணவியர் பாட இருக்கிறார்கள். இவர்கள் தமது குருவிடம் இப்பாடல்கள் சார்ந்த பயிற்சியில் இரண்டாண்டுகள் விசேடபயிற்சி பெற்று வந்துள்ளனர்; தொடர்ந்தும் பயின்று கொண்டிருக்கின்றனர்.

இச்செயற்பாடானது றொபேட் அவர்களது நீண்டநாள் கனவுகளில் ஒன்றாக உள்ளது என்பதை அவரை அறிந்தவர் அறிவர். இது இப்போது கைகூடுகிறது என்பதையிட்டு நாம் மனமகிழ்வு கொள்ளலாம். இந்த முயற்சியானது, நானறிந்தவரையில், யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்படுகின்ற இரண்டாவது முயற்சியாக உள்ளது. முன்னம் சிதம்பரம் அண்ணா மலைப் பல்கலைக் கழகத்தில் சங்கீதம் பயின்று "சங்கீத பூஷணம்" பட்டம் பெற்று வந்து, இங்கு இசையாசிரியர்களாக இருந்து வந்த திரு.நமசிவாயம், திரு.பாலசிங்கம் போன்ற

வர்கள், இன்னும் சிலரோடு இணைந்து, இங்கும் "தமிழிசை இயக்கத்தினை" ஆரம்பித்து நடத்தும் உயரிய நோக்கோடு "அண்ணாமலை இசைத்தமிழ் மன்றம்" எனும் பெயரொடு இசை மன்றமொன்றினை நிறுவி இசை வகுப்புக்களையும் இசை விழாக்களையும் நிகழ்த்தி வந்தனர். எனினும் இன்று நடைபெறும் தமிழிசை அரங்கேற்ற நிகழ்வானது தெளிவான சிந்தனையின் அடிப்படையில் ஈழத்தின் தமிழிசைக்கு உயிர் கொடுக்கும் ஒன்றாக ஏனைய முயற்சிகளில் இருந்து தனித்துவத்தோடு வேறுபட்டு நிற்கின்றது.

இன்று தவநாதன் றொபேட் அவர்கள், தமிழின் பாலும் இசையின் பாலும் கொண்டுள்ள ஆழ்ந்த ஈடுபாட்டாலும் பற்றினாலும் கருத்துத் தெளிவினாலும் மன உறுதியினாலும் உறுதி யோடு நின்று இம்முயற்சியைத் தொடங்குகிறார். எந்தவொரு முயற்சிக்கும் சிந்தனைக்கும் மூலவர் ஒருவர்தான். அவரோடு பலர் இணைவர், இணைந்து செயற்படுவர், சிலசமயம் சிலர் பிரிவர், புதியவர் இணைவர் என்றவாறு அவ்வியக்கமும், அதன் பணியும் தொடரும்; எது எந்தவாறிருப்பினும் அது காலத்தோடு நின்று தொடர்ந்து பயணிப்பது இன்றியமையாத ஒன்றாகும்.

நான் அறிந்த வரையில் இசைத்துறையில் இத்தகையதொரு முயற்சியினை மேற்கொள்வதற்குத் தேவைப்படுகின்ற அறிவும், ஞானமும், ஆழ்ந்த அனுபவமும், தொடர்ச்சியான செயல்முறையனுபவமும்; இயல், இசை, நடனம், நாடகம் எனும் துறைகள் யாவற்றிலுமுள்ள நீண்டகாலச் செயற்பாட்டனுபவமும் றொபேட்டிடத்தில் நிறையவே இருக்கிறது - இது உண்மை வெறும் புகழ்ச்சியில்லை.

றொபேட் இதுவரை வந்தவாற்றினைச் சிறிது நோக்குவோமானால்: இவரது தந்தைவழிப் பேரனார் வரகவி மூளாயூர் மு.திருச்செல்வம் அவர்கள், இசை நாடக நடிகராகவும், ஆசிரியராகவும் செயற்பட்டவர். இசை நாடகப் பாரம்பரியத்தில் வழுவாது நின்று சீதனக் காணியை விற்று இசைநாடகம் நிகழ்த்தியவர் என்ற பெருமைக்குரியவர்.

றொபேட்டின் தந்தையார் மூளாயூர் தி.தவம் அவர்கள் நாடகம், கவிதை போன்றதுறை களில் ஈடுபாடு கொண்டிருந்தவர். 1990 களில் தேசவிடுதலை சார்ந்த கவிதைகள், பாடல்கள் என நூற்றுக்கணக்கில் எழுதியவர். அக்கவிதைகள், பாடல்களை அழகாக எழுதிக்கொடுப்பது றொபேட்டின் பணியாக இருந்து வந்துள்ளது. றொபேட்டுக்கு நல்லிசையும் நற்றமிழும், நற்கவிதையும் இயல்பாக வந்தமைந்து விட்டதற்கான ஊற்றுக்கண்களை இங்கு காண்கிறோம்.

மேலும், இவர் 1992 ஆம் ஆண்டில் வில்லிசைப் புலவர் திரு.சின்னமணி அவர்களின் வில்லிசைக்குழுவில் ஹார்மோனியக் கலைஞராக இணைகிறார். தொடர்ந்து இருபதாண்டு கள் அவரோடு இணைந்து பணியாற்றியுள்ளார். மேலும் சின்னமணி அவர்கள் மிகச்சிறந்த இசைநாடக நடிகராகவும், நவீன நாடக நடிகராகவும் இருந்து பல வருடங்களாகப் பல நாடகங் களில் நடித்துவந்தவர். இதன் மூலம் றொபேட் மேலும் இசையிலும் நாடகத்திலும் அனுபவம் பெறுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டதைக் காணக் கூடியதாகவுள்ளது.

வில்லுப்பாட்டு நிகழ்வில் மட்டுமல்லாது, இசை நாடகங்கள், கூத்துக்கள் என்பவற்றிலும் ஹார்மோனியம் வாசிக்கும் வாய்ப்புகள் இவருக்கு நிறையவே கிடைத்துள்ளன. இவரது வாசிப்பினால் இசை நாடகங்களும் கூத்துக்களும் மெருகேற்றப்பட்டதோடு, அவற்றில் நடித்த

கலைஞர்களும் உற்சாகம் பெற்றுத் தமது பணியினைச் சிறப்புறச் செய்து முடிக்கக் கூடியதாகவும் இருந்தது.

தமிழோடிணைந்த பாரம்பரியக் கலைகளான நாட்டார் கலைகளிலும் செந்நெறி இசையான கர்நாடக இசையிலும் இளம் வயதுமுதல் பரிச்சயம் கொண்டிருந்த றொபேட் பரதநாட்டிய அரங்கேற்றங்களோடும், நாட்டிய நாடகங்களோடும் நெருக்கமான உறவு கொண்டு, பலப்பலநிகழ்வுகளில் தனது பெறுமதி மிக்க பங்களிப்பினைச் செய்துவந்துள்ளார். அந்த வகையில், நாட்டிய நாடகத்துக்கு அவர் இசையமைக்கும் பாங்கினை அறிந்து கொள்வது பயனுடையதாக அமையும். உதாரணமாக திருமதி சாந்தினி சிவநேசனின் நெறியாள்கையில் மேடையேற்றப்பட்ட "ஆர்கொலோ சதுரர்" எனும் நாட்டிய நாடகத்தினை நோக்குவோமானால், அந்தப் படைப்பு அபிமன்யுவின் கதையைக் கூறுகிறது. அப் படைப்பின் படிமுறையில், முதற்கண், நாட்டிய நாடகமாக அது அமைவதற்கு வேண்டிய முறையில் அதன் உருவரை (Out Line ) எழுதப்பட்டது; உருவரையாக அமைந்த போதிலும், முழுமையான நாடகவடிவம் அதில் உருப்பெறுமாறு வரையப்பட்டது. இதனை வைத்து, கவிஞர் முருகை யனைக் கொண்டு உரிய இடங்களில், கவிதையாக / பாடலாக அவற்றை எழுதிக் கொள்வது எனத் திட்டமிடப்பட்டிருந்தது. கவிஞரிடம் கொடுப்பதற்கு முன்னம், உரையாடல்களாகவும் விபரிப்புக்களாகவும் வரும் இடங்களில், அவ்வவற்றிற்கு வேண்டிய உணர்வுகள், நடை வேகம் (Tempo) பாத்திரப்பண்பு போன்ற பல்வேறு நாடக உத்திகளைக் கருத்திற்கொண்டு இசை அமைக்கப்பட்டது. இசையமைக்கும் பொறுப்பினை றொபேட் ஏற்றுக் கொண்டார்; அவருக்கு உணர்வையும் உற்சாகத்தையும் அளிக்கும் பொறுப்பினை உளமருத்துவ நிபுணர் சா.சிவயோகன் அவர்கள் ஏற்றுக்கொண்டார். (இந்தவாறு பல சந்தர்ப்பங்களில், பலவகை யான படைப்புக்களில் இவ்விருவரும் பலகாலமாக இத்தகைய பணியினை மேற்கொண்டு வருகின்றனர்.) இசை அமைக்கப்பட்டு, அதன் ஒலிப்பதிவும், நாடக எழுத்துருவின் பிரதியும் முருகையனிடம் கையளிக்கப்பட்டு, உரிய விளக்கங்களும் கொடுக்கப்பட்டன. ஒரு சில பாடல்களை முருகையனுடனிருந்து றொபேட் எழுதுவித்துக்கொண்டார். ஏறக்குறைய இரண்டு வாரங்களுக்குள் முருகையன், பாடல் வடிவில் எழுத்துருவைக் கொடுத்தார். அவ்வெழுத்துருவையும் மூல எழுத்துருவையும் வைத்துக்கொண்டு, "ஆர்கொலோ சதுரர்" நாட்டிய நாடகம் தனது எழுத்துரு வடிவத்தினைப் பெற்றுக் கொண்டது.

"ஆர்கொலோ சதுரர்" நாட்டிய நாடகத்துக்கான இசையமைப்புப்பற்றி தவநாதன் றொபேட் கூறுகையில் பின்வருமாறு கூறகின்றார்: ""ஆர்கொலோ சதுரர்" எனும் படைப்பு மிகவும் புதுமையானது. காட்சிகளுக்கான தலைப்புக்கள் மட்டுமே எழுதப்பட்ட பிரதியை வைத்து இசையமைக்க வேண்டியிருந்தது. இம்முயற்சியில் என்னை வழிநடத்தியவர் வைத்தியக் கலாநிதி சா.சிவயோகன். தலைப்புக்கள் மட்டும் குறிப்பிடப்பட்டிருந்த காட்சிகளைத் தன்வார்த்தைகளால் என் கண்முன் காட்சிப்படுத்த அவரால் முடிந்தது. "ஆர்கொலோ சதுரர்" இசையமைப்பின் வெற்றி அவரையே சாரும்." இங்கு நாம் இணைந்து பணிபுரியும் இவரது பண்பின் மேன்மையைத் தரிசிக்கின்றோம்.

அத்தோடு, அவுஸ்திரேலியாவிலுள்ள நடன ஆசிரியை ராதிகா மகாதேவன் அவர்கள் உளமருத்துவர் சிவயோகனிடம் கேட்டுக் கொண்டதற்கிணங்க றொபேட், சிவயோகன் இருவரும் சிவசிதம்பரத்தோடிணைந்து, முன்னம் கூறிய முறைமையில் "ஆடிக்கொண்டார்"

எனும் நாட்டிய நாடகத்தைப் படைத்துக் கொண்டனர். அந்நாட்டிய நாடகத்தின் எழுத்துரு வையும், அதன் பாடல்கள் இசைக்கோலங்கள் என யாவற்றையும் உள்ளடக்கிய ஒலிப் பதிவையும் அனுப்பிவைத்தனர் - அவ்விறுவட்டின் துணையோடு நாட்டிய நாடகத்தை நடத்திமுடிக்கக் கூடியவகையில் அது அமைக்கப்பட்டிருந்தது.

மேற்கண்ட நாட்டிய நாடகங்களுக்கு இசையமைத்த முறைமையிருந்து வேறுபட்ட முறைமையில் "அளப்பருங்கருணை" எனும் நாட்டிய நாடக எழுத்துருவிற்குரிய இசையமைப் பினை றொபேட் - சிவயோகன் எனும் "இணை" மேற்கொண்டது. "இந்த நாடகத்தை உரைநடை நாடகமாகவும், இசைநாடகமாகவும், நடன நாடகமாகவும் மேடையேற்றலாம்" என எழுத்துருவில் குறிப்பிடப்பட்டிருந்தது. அவ்வாறிருப்பினும், உரிய ஒவ்வொரு சந்தர்ப் பத்திலும்,"பின்வரும் பகுதி பாடலாக எழுதப்படவேண்டும்" எனவும் தவறாது குறிப்பிடப்பட் டிருந்தது. அவ்வாறிருந்தும் அவர்கள் உரைநடையில் அமைந்திருந்த உரையாடல்களையே மெட்டமைத்துப்பாடிவிட்டார்கள். இந்நாடகத்தினையும் திருமதி. சாந்தினி சிவநேசன் நெறியாள்கை செய்திருந்தார்; றொபேட் இசையமைத்ததோடு, தனது மாணவ மாணவியரில் சிலரோடிணைந்து பாடியுமிருந்தார். "இழுக்குடைய பாட்டுக்கு இசை நன்று" என்றார் ஔவை; உரைநடைக்கும் இசை நன்று என்று எவருமே சொல்லவில்லையே. என்ன இருந்தாலும், உரை நடைக்கே மெட்டமைத்துப் பாடியவரால், ஈழத்தின் பாடல்கள், கவிதைகளுக்கு மெட்டமைத்துப் பாடுவதும் பாடவைப்பதும் கஷ்டமாகவா இருக்கப்போகிறது.

இத்தகைய நாட்டிய நாடகங்களுக்கு இசையமைத்த நடைமுறையிலிருந்து சற்று வேறுபட்ட முறைமையில் சுனாமி நிகழ்ந்த காலப்பகுதியில் இக்குழுவினர் கவிஞர் நாக.சிவசிதம்பரத்தை உடனிருத்தி வைத்து, உரிய விளக்கங்களைக் கொடுத்து, இராக இசை யினை இசைத்தும் பாடியும் காட்டி, சுனாமி சம்பந்தமானதொரு உருக்கமான இசை இறுவட்டுக்கான பாடல்களை எழுதிப் பெற்றனர்.

தவநாதன் றொபேட்டுடன் சேர்ந்து பணியாற்றிய அனுபவம் பற்றி உளமருத்துவ நிபுணர் சா.சிவயோகன் எம்முடன் பகிர்ந்து கொண்ட கருத்துக்கள் சில இதோ உங்கள் பார்வைக்கு "றொபேட் சிறுவயது முதல் வித்தியாசமான கீழைத்தேய இசைப்பாரம்பரியங் களுக்கூடாக வளர்ந்து வந்திருக்கிறார். அவரது கர்நாடக இசையறிவானது, முறைசார் இசைப்பயில்விற்குச் சாதகமாக இல்லாத ஒரு சூழலிலே, பெரும்பாலும் சுயதேடலுக்கூடாகவே வளர்ந்திருக்கின்றது என்பதுதான் எனது அவதானம். அதனால்தானோ என்னவோ, அவர் இசையமைக்கும் பொழுது கர்நாடக இசையின் பாரம்பரியமான விதிகளை (அதிகம்) மீறா தவாறு நடந்து கொள்வதனை நான் அவதானித்திருக்கிறேன்.

றொபேட்டுடன் இசையமைப்பிற்காக இணைந்து பணியாற்றுவது என்பது ஒரு சுகானுபவம். எனக்கு அதற்கான வாய்ப்புக் கிடைத்தது. நான் நீண்ட காலமாக றொபேட்டிடம் இருந்து எனது விருப்புக்குரிய இசைக்கோலங்களை வகைவகையாகப் பெற்றிருக்கிறேன். அந்த வேளைகளில் எல்லாம் றொபேட்டிடம் இருந்த பொறுமையையும், இசை ஆழத்தையும் கண்டு வியந்திருக்கிறேன். இசையமைப்பின் பொழுது அவரது இசையை மணிக்கணக்காக அருகிருந்து இரசிக்கும் வாய்ப்பும் எனக்குக் கிட்டியது. பல வேளைகளில் அவ்வாய்ப்பு எனது குடும்பத்தினருக்கும் கிட்டியது. அவரில் வெளிப்பார்வைக்குத் தெரியாமல் கிடக்கும் இசை தொடர்பான ஒரு புள்ளியைத் தட்டிவிட்டால் போதும். பின்பு நாம் வேண்டும் இசை அவரிட

மிருந்து ஊற்றெடுத்துப் பாயும். "தொட்டனைத்தூறும் மணற்கேணி" எனும் குறள் இங்கு சாலப் பொருந்தும்.

றொபேட் தனது சிறுவயதில் கடந்து வந்த பல்வேறு இசைப்பாரம்பரியங்கள், பின்னாளில் அவர் பல்வேறு வகைப்பட்ட இசைக் கோலங்களை உருவாக்குவதில் மிகவும் உதவி செய்திருக்கின்றது. வாழ்வின் மகிழ்ச்சியை, சோகத்தை, காதலை, வெறுப்பை, பயத்தை, பக்தியை, வில்லங்கத்தை, விரக்தியை என மனித மனங்களின் பலவிதமான உணர்வுகளுக்கும் பொருந்தும் அல்லது அவற்றை வெளிக்காட்டும் பாடல்களை நான் றொபேட்டின் இசையூடாகப் பெற்றிருக்கிறேன். அதுபோல் இசையமைப்பிற்காக எழுதப்பட்ட பாடல்கள் தவிர பொதுவாக எழுதப்பட்ட கவிதைகள், வசனங்கள் என்பவற்றையும், வெவ்வேறு மொழியற்ற உணர்வுகளையும் றொபேட் இசைக்கோலங்களாக்கித் தந்திருக் கின்றார்.

றொபேட்டில் நான் வியந்து இரசிப்பது அவர் இசைக்குக் கொடுக்கும் நேர்மை. அவர் தனது சொந்த வாழ்வில் தாங்க முடியாத அவலங்கள் வந்திருந்த வேளைகளிலும், இசை யமைக்கும் பொழுதும், அதனை இசைக்கும் பொழுதும் தனது இசையுடன் சமரசஞ் செய்து கொள்ளாது அதனை முழுமையாக அளிப்பதனை நான் அவதானித்திருக்கிறேன். அவரது இன்னுமொரு பலமாக நான் பார்ப்பது அவர் பாடும்பொழுது உச்சரிப்புக்கும், குறிப்பாக, அப்பாடல்களுக்குரிய பொருத்தமான பாவங்களுக்கும் கொடுக்கும் முக்கியத்துவம்.

றொபேட் வகைவகையான இசைப் பாரம்பரியங்களில் கொண்டிருக்கும் ஆளுமையும், அவற்றை அவர் வெளிப்படுத்தும் முறையும் இசை வல்லுனர்களால் ஆராயப்பட வேண்டியது. "உன் கையில் பிள்ளை"யின் திருவாசகப் பாடல்களுக்காக றொபேட்டின் இசைவெளிப்பாடும், "அளப்பருங் கருணை" யில் தாகூரின் உணர்வுகளுக்கான இசைக் கோலமும் அந்தந்தப் படைப்புகள் கடந்து, காலங்கள் கடந்து நிலைத்து வாழும் என்பது எனது நம்பிக்கை.

றொபேட் இன்னமும் வளர வேண்டும். இசை என்ற அற்புதத்தினை "குறுகிய சுதேசச் சுவர்களுக்குள் அடக்கிவிடாது", அவர் மேலும் மேலும் தனது இசைத்தேடலை விரிவாக்கி, அதன்மூலம் பெறும் அனுபவங்களை, எமக்குப் பொருந்திவரக்கூடிய புதிய இசைக்கோலங் களாக அளிக்கை செய்ய வேண்டும். இதுவே எனது அவாவும் வேண்டுதலும்."

"தொட்டனைத்தூறும் மணற்கேணியாக" விளங்கும் றொபேட் "இசையமைக்கும் பொழுதும் அதனை இசைக்கும் பொழுதும் தனது இசையுடன் சமரசஞ் செய்து கொள்ளாது அதனை முழுமையாக அளிப்பதனை" அவதானித்துள்ள சிவயோகன் எத்துணை ஈடுபாட்டோ டும் நம்பிக்கையோடும் றொபேட்டுடன் இணைந்து பணி புரிந்திருக்கின்றார் என்பதை இங்கு அவதானிக்க முடிகிறது. நாடகம் ஒரு கூட்டுக்கலை எனப்படுகிறது. இத்துறையில் ஈடுபடுபவர் கள் இணைந்து, இசைந்து பணிபுரிந்தால் தான் இசைபட வாழமுடியும்.

வில்லுப்பாட்டு, இசைநாடகம் ஆகியவற்றுக்கு இசையமைத்தும் பாடியும் ஹார்மோனி யம் வாசித்தும் வந்த றொபேட், நவீன நாடகங்கள் சார்ந்தும் இப்பணியினை மிகுந்த ஈடுபாட்டோடும் சிறப்போடும் மேற்கொண்டுவந்தார். இந்தவகையில் 1997இல் "இடுக்கண் வருங்கால்" என்னும் எனது நாடகத்திற்கு முதல் முதலாக இசையமைக்கத் தொடங்கி, கலாநிதி க.ரதிதரனது "மலநீக்கம்" எனும் நாடகத்துக்கும் திரு.தே.தேவானந் அவர்களது பல

நாடகங்களுக்கும் எனது ஏனைய நாடகங்கள் பலவற்றுக்கும் இசையமைத்ததோடு பாடியும் "கீபோட்" மற்றும் ஹார்மோனியம் வாசித்தும், நாடகத்தின் முழுமைக்குப் பேருதவி புரிந்துள்ளார். இந்த நவீன நாடகங்கள், சிறுவர் நாடகங்கள், பாடசாலை நாடகங்கள், வளர்ந்தோருக்கான நாடகங்கள் என்ற வகையிலும், மோடிமை என்ற வகையில் பல்வகைப்பட்டவையாகவும் இருந்தன. அவை எவ்வகையினவாக, எத்தன்மையினவாக இருந்த போதிலும் அவற்றின் பாடல்கள், பின்னணி இசைகள் யாவும் எமது செந்நெறி இசையான கர்நாடக இசை வழி நின்று வழுவாத வண்ணமே வகுத்தமைக்கப்பட்டன. செந்நெறி இசைவழி நின்று இசையமைத்தல், பாடுதல் என்பது றொபேட் அவர்களது மதிப்புக்கும் மரியாதைக்கும் நயப்பிற்குமுரிய "பிடிவாதங்களில்" ஒன்றாகவுள்ளது. இந்த வகையில் தமிழர் தம் செவ்வியல் இசையிலும், பாரம்பரியக்கலைகளிலும் றொபேட்டின் பங்களிப்பு முக்கியத்துவம் பெற்றிருப்பதோடு, நவீன கலையாக்க வடிவங்களிலும் அவரது பங்கும் பணியும் நிச்சயமாக முக்கியத்துவம் பெறுகிறது.

றொபேட் இதுவரையில் இருபத்தைந்துக்கும் மேற்பட்ட நவீன நாடகங்களுக்கு இசையமைத்துள்ளார். முன்னர் சொல்லப்பட்டது போல் இந்த நாடகங்கள் பலவகைப்பட்டவையாக, பலமோடிகளில் அமைந்தவையாக இருந்தன. இந்த நாடகங்களுக்கு இசையமைத்துக் கருவியிசைமீட்டியதோடு, பலமாணவர்களையும், வளர்ந்தவர்களையும் பாடவைத்துத் தானும் பாடும் பணியினை மகிழ்வோடு ஏற்றுத் தனது இசை அனுபவத்தைப் பரந்துபட்டதாக ஆக்கிக்கொண்டதோடு, பலவகையான நவீன நாடகங்களின் தயாரிப்பு அனுபவத்தையும் பெற்றுக்கொண்டார். இவை அவரது இசையாற்றலை விரிவுபடுத்தியதோடு பரந்துபட்ட கலையனுபவத்தையும் தந்து நின்றது.

இன்று (21.04.2019) இங்கு இவர் ஆரம்பித்துள்ள ஈழத்துச் செந்நெறித் தமிழிசை இயக்கத்தின் செயற்பாட்டின் ஆரம்பம் போல எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் (2011 ஆம் ஆண்டு தைப்பொங்கல் தினத்தன்று) ஈழத்து இசை நாடகத்தைச் செம்மைப்படுத்துவதற்கான முயற்சியை றொபேட் மேற்கொண்டார். இசைநாடகப்பாடல்கள் பாடப்படும் முறைமையில் பல குறைபாடுகள் இருப்பதாக அவர் பலகாலமாகப் பல இடங்களிலும் முறையிட்டுவந்ததோடு, கருத்தரங்குகளிலும் வாதிட்டுவந்தார். அவர் கூறுவதில் நியாயம் இருப்பதாகச் சிலரும், நியாயம் இல்லையெனச் சிலரும் கருதிவந்தனர். இசை பற்றிய அரிச்சுவடியே அறியாத என்னிடமும் அதுபற்றிப் பல தடவைகள் கதைத்துவந்தார். "கர்நாடக இசையிலும், இசை நாடகம் உட்படப் பாரம்பரிய நாடகங்கள் கூத்துக்களிலும், வில்லுப்பாட்டிலும் அனுபவமும் ஆற்றலும் உள்ள நீர் இசை நாடகமொன்றைத் தெரிவு செய்து. இசை நாடகத்தில் அனுபவமும் ஆர்வமும் உள்ளவர்களையும், பாடும் திறமுள்ளஏனையோரையும் இணைத்து, உமக்குத் திருப்தி தரக்கூடிய முறையில் மேடையேற்றினால் நன்றாக இருக்குமே" என்று துணிவை வரவழைத்துக் கொண்டு கூறினேன். இந்தவாறு பல தடவைகள் கதைத்த பின்னர் அவர் தனது இசைவைத் தெரிவித்தார். இதற்கிடையில் இரண்டு ஆண்டுகளுக்குமேல் சென்று மறைந்துவிட்டன. இறுதியாக, இசைநாடகப் பயில்வை ஆரம்பிக்க உறுதியோடு இசைந்தார். அருணாசலக் கவிராயரின் "இராம நாடகத்தை" அடிப்படையாகக் கொண்டு அதன் ஒரு பகுதியை நாடகமாக அமைத்து மேடையேற்றலாம் என்ற முடிவுக்கு வந்தார். நாடகமாக்கும் பணியினை என்னிடம் தந்தார். ("பொல்லுக்கொடுத்து அடிவேண்டுவது" என்ற நாட்டார் வழக்குக் கூற்றின் பொருளினை அன்றுதான் கசடறப்புரிந்துகொண்டேன்.) அடுத்தநாள்

அருணாசலக் கவிராயரின் "இராம நாடக" நூலினைக் கொணர்ந்து தந்தார். நாடக எழுத்துருவாக்கத்துக்கு ஏறக்குறைய ஒரு மாதத்துக்குமேல் எடுத்தது.

அதனையடுத்து ஆற்றுகையாளரைத் தேடிப் பிடிக்கும் முயற்சிமூலம் ஆர்வமுள்ள சிலர் வந்திணைந்தனர். அவர்களுள் இரண்டொருரர் மட்டுமே செவ்வியல் இசை கற்றவர்களாக இருந்தனர். ஏனையோருள் சிலர் ஏலவே இசைநாடகங்களில் நடித்து வந்தவர்களாகவும் மற்றவர்கள் நடிக்கும் ஆர்வத்தோடு வந்தவர்களாகவும் இருந்தனர். முதலாவது சந்திப்பு 2011 ஆம் ஆண்டு தைப்பொங்கல் தினத்தன்று இடம் பெற்றது. அன்று இசைப்பயில்வு ஆரம்பமானது. றொபேட் அவர்கள் ஒவ்வொரு பாடலுக்கும் புதிதாக மெட்டமைத்துப் பாடல் பயிற்சியை மேற்கொண்டார். முதல் 80 சந்திப்புக்களில் பாடல் பயிற்சிகளே இடம் பெற்றன. அதனை அடுத்து வந்த 55 சந்திப்புக்களில் நடிப்பு ஒத்திகைகளோடு பாடல் பயிற்சியும் தொடர்ந்து இடம்பெற்றன. முதல் மேடையேற்றம் 27.05.2012ல் இடம்பெற்றது. ஒரு வருட மூன்று மாதகாலப் பகுதிக்குள் 135 சந்திப்புக்களின் பெறுபேறாக "கண்டனன் சீதையை" இசை நாடகம் அரங்கேறியது. றொபேட் அவர்கள் ஹார்மோனியம் வாசித்தார்; திரு.முருகையா அவர்கள் மிருதங்கம் வாசித்தார். இந்த நாடகம் ஆறு தடவைகள் மேடையேற்றப்பட்டது. பார்வையாளர்களது பாராட்டையும் பெற்றுக்கொண்டது.

இந்நாடகத்தில் நடிகர்களாகப் பங்கு கொண்ட பல கலைஞர்கள், இது தமக்குக் கிடைத்த பெரும் பேறு எனக் கருதுகின்றனர். தாங்கள் நிறையவே அறிந்து கொண்டதாக மனம் விட்டுக் கூறுகின்றனர். தொடர்ந்து இத்தகைய கூட்டுமுயற்சிகளில் பங்குகொள்ள அவாவிநிற்கின்றனர். இந்நாடகத்தில் பங்குகொள்ளத் தவறிய சிலர், இனிவரும் காலங்களில் பங்கு கொள்ளக்காத்திருக்கின்றனர். கர்நாடக சங்கீதக் கச்சேரி வேறு, இசைநாடகப்பாடல்கள் வேறு என்று சிலர் கூறினர். இப்படி ஒரு கருத்திருக்கிறதே இதுபற்றி என்ன கூறுவீர்கள் என நான் றொபேட்டிடம் கேட்டேன். அவர் எதுவும் பேசாது, ஒரு பாடலின் சில வரிகளைப் பாடினார்; பாடி விட்டு, "சங்கீதக்கச்சேரியில் இப்படிப்பாடுவேன்; இனி இதேபாட்டை இன்னொருமுறை பாடுகிறேன், கேளுங்கோ," என்று விட்டுப்பாடினார்; பாடி முடித்துவிட்டு "இசைநாடகத்துக்கெண்டா இப்பிடித்தான் பாடுவன், விளங்கிச்சுதோ?" என்றார். எனக்கெங்கே விளங்கப்போகிறது சங்கீதம்?! இருப்பினும் உரத்து "ஓமோம்!" என்றேன். சிறிது காலத்தின் பின்னர், றொபேட் இசைநாடக ஆய்வின் மீது தனக்கிருந்த மிகுந்த ஆர்வம் காரணமாக, சங்கரதாஸ் சுவாமிகளின் இசைநாடகப் பாடல்களை, இசைநாடகத்தில் ஈடுபட்டுவருகின்றவர்களுக்கும், அதனைக் கற்க ஆர்வமாக உள்ளவர்களுக்கும் முறைப்படி பாடப் பழக்கும் நோக்கோடு வகுப்புக்களை ஆரம்பித்தார். அந்த வகுப்புக்களுக்கு,"கர்நாடக சங்கீதக் கச்சேரி வேறு, இசை நாடகத்தில் பாடுவது வேறு" என்று முன்னம் கூறியவர்களும் வந்தனர். அது கண்டு எனக்கு அவர்கள் பாலிருந்த மதிப்பும் மரியாதையும் பன்மடங்கு அதிகரித்தது. நேரப்பிரச்சினை காரணமாக அவ்வகுப்புக்களைத் தொடரமுடியாது போய்விட்டது. எப்பாடுபட்டேனும் அம் முயற்சியினைத் தொடர்வது மிகவும் அவசியமான, பயனுடைய பணியாக நிச்சயம் இருக்கும். றொபேட் இதனை நிச்சயம் தொடர வேண்டும். தனது ஆத்ம திருப்திக்காகவும், இசை நாடகத்தின் செழுமைமிக்க வளர்ச்சிக்காகவும், சந்ததிக் கையளிப்புக்காகவும்.

"றொபேட் கோபக்காரன்", என்பது ஊரறிந்த உண்மை. இசைபயிற்றுவிக்கும் ஆசான் என்ற நிலையில் இருக்கின்ற வேளைகளில், அவர் பொறுமையின் இமையமென நிற்பதை

நான் பலசந்தர்ப்பங்களில் பார்த்திருக்கிறேன். மேலும் "கண்டனன் சீதையை" நாடகத்தின் பாடல் பயில்வின் போதும் நாடக ஒத்திகையின் போதும் (15 மாதங்கள், 135 சந்திப்புக்கள், 400 மணித்தியாலங்கள்) அவர் ஒரு கணமேனும், சீறிப்பாய்ந்ததையோ, சிறிதேனும் சினந்ததையோ நான் கண்டதில்லை. இசைமீதுள்ள பற்றும் ஈடுபாடும், தொல்சீர் இசையின் பாலுள்ள பக்தியும் விசுவாசமும் பரம்பரை பரம்பரையாக வருகின்ற மக்கள் கலைகளிடத்துள்ள அன்பும் நேசமும் தொப்புழ் கொடி உறவும், படைப்பாக்கச் செயற்பாட்டில் ஈடுபட்டிருக்கும் வேளைகளில் தன்னுள் புகுந்து விடுகின்ற மெய்மறந்த உணர்வும், படைப்பாளியான றொபேட்டினை உயர்த்தி வேறொருதளத்தில் இருத்தி விடுகிறது. அது ஆசாபாசம், கோபதாபம், விருப்பு வெறுப்பு எனும் சாதாரண உணர்வுகளைக் கடந்து, அப்பாலாய் நிற்கின்ற மற்றுமொரு பேரின்ப நிலையென அமைந்துவிடுகிறது. இது உண்மை வெறும் புகழ்ச்சி யில்லை; உடனிருந்து அவதானித்த உண்மை. இந்த உணர்வுநிலையில் அவர் தொடர்ந்து இருப்பரேல், இசையுலகும் கலையுலகும் மட்டுமல்லாது மானிடமே அவர் கைவசமாகும். இது சாத்தியம், இது சத்தியம்.

தனது இளவயதிலேயே இசை, வில்லுப்பாட்டு, இசைநாடகம் காத்தவராயன், கூத்து எனப் பலதிலும் நேரடியாகவே ஈடுபட ஆரம்பித்த றொபேட், தனது முறைசார்ந்த கல்வியைக் கைவிட இல்லை. பெரும்பாலும் நிகழ்ச்சிகளில் பங்குகொண்ட பின்னர் பொழுது நள்ளிரவை நாடிச் செல்கின்ற வேளையிலேயே வீடுசெல்வார். சென்று சோர்ந்துறங்காது, தனது கல்வியில் கவனம் செலுத்தினார். புத்திக் கூர்மையும் நெஞ்சுரமும் பிடிவாதமும் மிக்க அவரிடத்தில், நினைவாற்றல் என்பது நினைத்துப் பார்க்க முடியாத அளவில் நிறைந்திருந்தது. கற்றவை யாவும் சிலையிலெழுத் தெனப் பதிந்து கிடந்தன. பரீட்சைகளில் அவை சித்தித்தன. விசேட சித்திகளைப் பெற்றுக்கொடுத்தன.

அவர் தனது கலாநிதிப் பட்டத்துக்காகச் சங்கரதாஸ் சுவாமிகளின் எழுத்துருவை அடிப்படையாகக் கொண்டு "ஈழத்திலும் தமிழகத்திலும் நிகழ்த்தப்பட்டுவரும் இசை நாடகங் களின் ஒப்பீடு" எனும் தலைப்பிலேயே மேற்கொண்டார். ஆய்வுக்கட்டுரை எழுதி முடிக்கப்பட்டு மேற்பார்வையாளராக இருந்த பேராசிரியையின் அங்கீகாரத்தையும் பெற்றுவிட்டது. அவர் தனது இசையமைப்பு சார்ந்த அனுபவத்தை மீள நினைந்து பார்க்கையில், "ஆர்கொலோ சதுரர்", "அளப்பருங்கருணை", "கண்டனன் சீதையை" போன்ற படைப்புக்கள் புதிய இசை யாக்கத்திற்குச் சவால்கள் நிறைந்தவைகளாக அமைந்தன எனக் கூறுகிறார். "கண்டனன் சீதையை" நாடகத்தில் அருணாசலக் கவிராயரது பாடல்களைப் புதியமெட்டுக்களில் அமைத் துப் பாடினார். இசையமைத்தல், ஸ்வரக்குறிப்புக்களை எழுதுதல் போன்ற திறனை வளர்த்துக் கொள்ள ஹார்மோனியம் வாசிக்கும் அனுபவம் இவருக்குப் பெரிதும் துணை புரிந்தது. ஹார்மோனியத்தில் திறனை வளர்க்க வில்லுப்பாட்டு இவருக்குப் பெரிதும் உதவியுள்ளது. இந்தவாறு கலைகளிலும் கல்வியிலும் தொட்டது துலங்க நிற்கும் றொபேட் தன்னிடம் இசை பயில்கின்றவர்களையும் துலங்கவைக்கும் நல்லாசானாகவும் இருந்து வருகிறார்.

பொதுவாகத் தமிழ்க் கலைகள் யாவற்றையும் வளர்ப்பதிலும் பேணிப்பாதுகாப்பதிலும் உலகளாவிய நிலையில் பரப்புவதிலும், தனது இயக்குநர் அருட்தந்தை நீ.மரியசேவியர் அடிகளாரின் தலைமையிலும் வழிகாட்டலிலும் அரும்பணியாற்றி வரும் திருமறைக் கலாமன்றம், கூத்துக்கள் பலவற்றையும், இசைநாடகம் பலதையும் மேடையேற்றி வந்துள்

ளது. அத்தோடு நில்லாது பல அண்ணாவிமார்களையும் ஒன்றிணைத்து, "யாழ்ப்பாணத்தில் மரபுவழியாகப் பேணப்பட்டுவரும் தென்மோடி (கத்தோலிக்க) கூத்து மரபுப் பாடல்களுக்கான மூலமெட்டுக்களை" ஆய்ந்தெடுத்து, அம்மெட்டுக்கள் சார்ந்த பாடல்களைக் கொண்டதொரு நூலினையும், அப்பாடல்களைக் கொண்ட இறுவட்டுக்களையும் 2007ம் ஆண்டில் வெளியிட்டுள்ளனர். இதேபோன்று அவர்கள் "ஈழத்தில் வழக்கிலுள்ள இசைநாடக (பார்சி மரபு, ஸ்பெஷல் நாடக) மரபுவழிப்பாடல் மெட்டுக்களின் தொகுப்பு" ஒன்றினையும் நூலாகவும் இறுவட்டாகவும் வெளியிட்டுள்ளனர்.

மேற்கண்ட பணிகள் இரண்டிலும் பல கலைஞர்களோடும் துறைசார் அறிஞர்களோடும் றொபேட்டும் இணைந்து செயலாற்றியுள்ளார். மேற்கண்ட முயற்சியின்பெறுபேறாக வெளியிடப்பட்ட, "யாழ்ப்பாணத் தென்மோடி கூத்து மரபு இசை மெட்டுக்கள்" எனுமந்த நூலின் தொகுப்புரையின் இறுதியில் நன்றி தெரிவிக்கும் பகுதியில் றொபேட் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கையில் "ஹார்மோனியம் வாசித்ததுடன், இராக - தாள ஆய்வைச் செய்தும், ஆலோசனைகளைத் தந்தும் இம் முயற்சியின் பக்கபலமாக நின்ற விரிவுரையாளர் தவநாதன் றொபேட் அவர்கள் எமது நன்றிக்குரியவர்" எனத் தங்களது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துள்ளார் திரு.யோ.யோன்சன் ராஜ்குமார் அவர்கள். அந்தவாறே "இசைநாடகப் பாடல் மெட்டுக்கள்" எனும் நூலின் பதிப்புரையில், "கடந்த வருடம் யாழ்ப்பாணத் தென்மோடி நாட்டுக்கூத்தின் 153 பாடல் மெட்டுக்களை ஆவணமாக்கி வெளியிட்டோம். அம்முயற்சியைத் தொடர்ந்து இசை நாடக மெட்டுக்களையும் ஆவணமாக்க வேண்டும் என்று அன்றைய வெளியீட்டு நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளர் த.றொபேட் அவர்கள் வேண்டுகோள் விடுத்தார்கள். அவரது வேண்டுகோளும் எமது இயக்குநர் தந்தை நீ.மரியசேவியர் அடிகளின் நீண்டநாள் ஆவலும், ஊக்கமும் இவ்வெளியீட்டினைத் துரிதப் படுத்தியுள்ளது." என யோன்சன் பதிவுசெய்துள்ளதோடு, மற்றுமோரிடத்தில், "இவ் ஆவண உருவாக்கத்தின் தூண்டிகளாகவும் துணையாளர்களாகவும் நின்றவர்களுள் யாழ். பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளர் த.றொபேட் அவர்களும் ஒருவர்" என எழுதியுள்ளார். மேலும் அந்நூலின் தொகுப்புரையில், "இம்முயற்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் பக்கபலமாக நின்று ஹார்மோனியம் இசைத்தும், இராகதாளங்களைக் குறிப்பிட்டும், ஆலோசனைகளையும் தந்த யாழ்.பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளர் த.றொபேட் அவர்களுக்கு நன்றிகள்" என எழுதியுள்ளார் திரு.தைரியநாதன் யஸ்ரின் அவர்கள். கூத்து மற்றும் இசை நாடகத்தின் தூய்மையையும் செழுமையையும் பேணிப்பாதுகாப்பதில் எத்துணை அக்கறையோடு றொபேட் செயற்படுகிறார் என்பதை இங்குநாம் கண்கூடாகக் காணக் கூடியதாகவுள்ளது. இத்தகைய பொறுமையோடும் பொறுப்போடும் இப்பணி தொடர இடம், பொருள், ஏவல் மற்றும் இறையருள் அவருக்குக் கிட்டட்டும்.

பாரம்பரிய இசைக்குடும்பத்தில் பிறந்து, இசையும் நாடகமும், கவிதையோடு தமிழும் தாய்ப்பாலெனத் தந்தைவழிப்பாட்டன் முதலானவர்களிடமிருந்து வழிவழியாக ஊட்டப்பட்டு, கருவிலே திருவுடைய பிள்ளையாக வந்துதித்த இவரிடத்து சிறுவயதிலிருந்தே கவிதை எழுதும் ஆர்வம் இயல்பாக இருந்து வந்தது. சிறுபராயம் முதல் இசைகற்றமையால், அக் கவிதைகளை இசை உருப்படிகளாக எழுத இவரைத் தூண்டியது. நூற்றுக்கும் அதிகமான இசை உருப்படிகளை இதுவரையில் றொபேட் எழுதியுள்ளார். வில்லிசையில் கேட்ட புராண இதிகாசக் கதைகள் இவரது பாடலாக்கத்துக்குப் பெரிதும் உதவியுள்ளது.

இசைக்கு மொழியில்லை என்பது உண்மையாயினும் பாடலுக்கு மொழி இருந்தே ஆகவேண்டும். அதனால் இசைப்பாடலுக்கு மொழி அவசியமல்லவா? பிள்ளை முதலில் பருகும் பால் தாய்ப்பாலல்லவா? பிள்ளைக்குக் கட்டாயம் தாய்ப்பாலைக் கொடுங்கள் என்று தானே வைத்தியம் வல்லார் கூறுகின்றனர். பிள்ளையின் கல்வியைப் பொறுத்தவரையிலும் தாய்மொழியில் அமைந்த கல்வியே சிறந்த தென்கின்றார்கள் கல்விவல்லார். எனவே, இசைக் கல்வி இதற்கு விதிவிலக்காக அமைய முடியாது. செந்நெறி இசையினைக் கற்கின்ற வேளையிலும், தாய் மொழிப்பாடல்களில் கற்றலை ஆரம்பித்து, "தமிழோடிசை பாடி", தமிழ் அறிவினையும் இசையறிவினையும் ஒருசேரப்பயின்று, இரண்டினதும் சங்கமத்தால் விளையும் பேரின்பப் பெற்றியினைத்துய்த்தல் என்பது பெறற்கரும் பேறு அல்லவா. தன்தாய் மொழியோடு இசையினைப்பயின்று அடிப்படைத்தேர்ச்சியினை இரண்டிலும்பெற்று, அதற்கு அடுத்தபடியாகப் பரந்துபட்ட தேடலை நோக்கி, செவ்வியல் மொழியைத் தன் தாய் மொழியால் வளர்த்த பிற மொழிப் பாடல்களைப் பயில்வது "துடக்கு" என எவரும் கூறமாட்டார்கள். தன் தாயை நேசித்தல் என்பது பிறர்தாயை வெறுத்தலென ஆகாது. தன் மதத்தைப் போற்றுதல் என்பது பிறமதத்தை வெறுத்தல் என ஆகிவிடக்கூடாது. தெய்வீகத்தோடிணைந்த மதங்களை யும் தாய்மையோடிணைந்த மொழிகளையும் சேனைகள் அமைத்துக் காக்க முயல்வது பேதமை.

தமிழ் மீது பற்றுக்கொண்டவர் றொபேட். அத்தோடு மதநம்பிக்கையோடு கூடிய இறைபக்தி கொண்டவர். பொதுப் போக்காகப் பார்க்கின்றபோது அவர் மத நம்பிக்கையற்ற வரோ என எண்ணத்தோன்றும். தான் பிறந்த மதத்தை எத்துணை பயபக்தியோடு நேசிக்கின் றாரோ அத்துணை மரியாதையோடவர் மற்றைய மதங்களையும் மதித்துப் போற்றுகின்ற வராக உள்ளார். சின்னமணி அவர்களது வில்லுப்பாட்டுக் குழுவில் தொடர்ச்சியாக இருபது வருடங்கள் பணி புரிந்தமையாலும் இசைநாடகங்கள், கூத்துக்கள், காத்தவராயன் நாடகம் ஆகியவற்றில் தொடர்பு கொண்டிருந்தமையாலும் அவருக்குச் சமயங்கள் சார்ந்த கதை களைக் கேட்டறியவும், பாடல்கள் கவிதைகளில் பரிச்சயம் கொள்ளவும் வாய்ப்புக் கிட்டியது. கிறிஸ்தவ மதப்பாடல்கள் மற்றும் சைவசமயப்பாடல்கள் தமிழில் பாடப்பட்டிருந்ததாலும், அவற்றைப்பாடும் வாய்ப்பு இவருக்கு நிறையவே கிடைத்ததாலும், சமரச சன்மார்க்க நிலையில் நின்று சமயங்களைப்பார்க்கும் மனப்பக்குவம் இயல்பாகவே இளவயதிலேயே அவரிடத்தில் ஏற்பட்டுவிட்டது. இதற்கான சான்றுகள் சிலவற்றை இங்குநோக்குவது றொபேட்டை முழுமையாகப் புரிந்து கொள்ள உதவும்.

இளவயதிலிருந்தே இதிகாச புராணப்பாடல்களையும் இராமநாடகப் பாடல்களையும் நந்தனார் சரித்திரக்கதைகளையும் இன்னும் பலப்பலவற்றையும் கேட்டும் படித்தும் பாடியும் வந்த றொபேட்டின் ஞாபகசக்தி நூறுவீதமாக இருப்பதை நாம் கண்டுள்ளோம். ஒரு தடவை படித்ததும் பாடல்கள் நினைவில் பதிந்து விடும். இந்தவகையில் நந்தனார் சரித்திரக் கீர்த் தனைகளும் அவரது உள்ளத்தின் உள்ளே புகுந்து அவரது ஆத்மாவைத் தொட்டு விட்டிருந்தது. இதனால் இந்தியாவுக்குச் சென்றிருந்த காலை, "தில்லை" எனப்படும் சிதம்பரத் தைக் காணச் சென்றுள்ளார். சென்றவர் தில்லைத் தலத்தை அடைந்து, கோபுரங்கண்டு, கோபுரவாயிலினுள்ள வெள்ளிப்படித்தட்டில் காலை வைத்த அந்தக் கணத்தில், கோயிற் கோபுரத்திலிருந்த ஒலிபெருக்கியில், "இதுதானோ தில்லைத்தலம்" எனும் நந்தனார் சரித்திரக் கீர்த்தனை கணீரென ஒலித்தது. நந்தனார் சரித்திரக் கீர்த்தனையில் திளைத்து, "சிதம்பரம்

போகாமல் இருப்பேனோ.." என நந்தனாரின் கீர்த்தனை வழிபற்றி வந்தவரென வந்த றொபேட் திகைத்தார், சிலகணம் ஸ்தம்பித்தார், புரிந்துகொள்ள முடியாத ஒன்றினை உள்ளத்தின் உள்ளே உணர்ந்து கொண்டார். இச்சம்பவத்தை அவர் உணர்வுபூர்வமாக நின்று உரைத்தவேளை செவிமடுத்தவர் கண்கள் பனித்தன; பனித்த கண்களினூடே, நந்தனின் தில்லைத் தரிசனம் தெரிந்தது.

மேலும் யோகசுவாமிகளின் பாடலொன்றினை அவர் பாடிக்காட்டியபோது மெய்யா கவே மெய்யுருகிற்று. சுவாமிகளது ஆன்மீக பலம் அவர்களது பாடலில் தெரிகிறது என்கிறார் றொபேட், மேலும் அவருக்கு இசைஞானம் இருக்கிறது; அது இல்லாது இப்படி எழுத முடியாது என்கிறார். இதேபோன்று அளவெட்டி விநாசித்தம்பிப் புலவர் பாடல்பற்றிக் கூறும்போது, அவருக்கிருந்த ஆத்மீக பலம் பற்றிக் கூறியதோடு, அவருக்கு சங்கீதஞானம் இருந்ததென் பதையும் எடுத்து விளக்கினார். மேலும் நாமறிந்த "சோ.ப" வினது "திருப்புகழ்" சந்தத்தில் அமைந்த பாடலொன்றில் முருகனைக் கிழவனெனக் கூறுமிடத்தில் காணப்படும் கவி நயத்தையும் இசைநயத்தையும் எடுத்துக் காட்டினார்.

"திருவாசகத்துக் குருகாதார் ஒருவாசகத்திற்கும் உருகார்" என ஒரு கூற்று இருக்கின் றது. திருவாசகப் பாடல்களைக் கொண்டு "உன்கையில் பிள்ளை" என்னும் இசை நிகழ்ச்சி யொன்றினை றொபேட் சில ஆண்டுகளுக்கு முன்னர் நிகழ்த்தியிருந்தார். அப்பாடல்களுக் கான இசையமைப்பினை அவர் வைத்திய நிபுணர் சிவயோகனுடன் சேர்ந்து செய்திருந்தார். றொபேட்டின் இசையமைப்பு வல்லமையின் உச்சங்களில் ஒன்று இதுவென சிவயோகன் அதனைக் கூறுவார்.

றொபேட், இப்போ "உன்கையில் பிள்ளையாக", ஈழத்துச் செந்நெறித் தமிழிசையை நீர் இருகைகளிலும் ஏந்தி நிற்கிறீர். முன்னம் பாண்டிநாட்டின் மதுரையில் புலவர் தமைக்கூட்டித் தமிழ்ச்சங்கம் அமைத்துப் பெருமை பெற்றான் பாண்டியன். புலவர் பெருமக்களோ, நல்ல படைப்புக்களை ஆய்ந்தறிந்து, நல்லவற்றைப் "பலகை" ஏற்றி அங்கீகரித்தனர். அந்தவாறே இங்கும் உமது தமிழிசை இயக்கம் சங்கமொன்றாக அமைந்து பலர் கூடிப் "பலகை" ஏந்தி"த் தமிழோடிசை பாடும் "கூடலாக" அமையட்டும். இதோ! உமது செயல்கண்டுதரியாது, பாட்டுக்கொரு புலவன் பாரதியே வருகிறான், உமை வாழ்த்த! வாழ்த்தட்டும்.

"உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின்
வாக்கினிலே ஒளியுண் டாகும்
வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்,
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்
தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக்கண்டார்"

வாழ்க நிரந்தரம்!

**குழந்தை.ம.சண்முகலிங்கம்,**
இயக்குநர்,
நாடக அரங்கக் கல்லூரி,
தாயகம், திருநெல்வேலி.

# செந்நெறித் தமிழிசை
# ஈழத்தில் செழிக்கட்டும்



"ஈழத்தின் தமிழிசை" ஆற்றுகை நிகழ்வு ஒன்று இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியிலே 21.04.2019இல் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வினை ஏற்ற ஏற்பாடுகளுடன் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக இராமநாதன் நுண்கலைக்கழக இசைத்துறை முதுநிலை விரிவுரை யாளர் கலைஞர் திரு.தவநாதன் றொபேர்ட் அருட்சேகரன் அவர்கள் வழங்கவுள்ளார்கள். அவர் உட்படப் பத்துப் பாடகர்கள் ஈழத்துப் புலவர்களாலும் இசைவல்லாளர்களாலும் இயற்றப்பட்ட நூறு பாடல்களை இசைத்து வழங்கவுள்ளனர். தான வர்ணம், பதவர்ணம், கீர்த்தனை, சௌக்கய காலக்கிருதி, பதம், போற்றுதற் பாடல்கள், தில்லானா, காவடிச்சிந்து, திருப்புகழ் முதலாய இசைப்பாடல் வகைகள் தவநாதனால் இசைவடிவம் கொடுக்கப்பட்டு 9 மாணவர்களுக்கு சிறப்பாகப் பயிற்சியளிக் கப்பட்டு ஈழத்துச் செந்நெறித் தமிழிசை அரங்கேற்றமாக 21.04.2019 அன்று வழங்கப் படவுள்ளன.

செம்மொழியாம் தமிழ் மொழிக்கு எப்படி ஒரு செவ்வியல் தமிழும் மக்கள் மொழியான பேச்சுத் தமிழும் இருக்கின்றனவோ அதே போல ஒரு செவ்வியல் இசையும் மக்கள் இசையும் இருக்கின்றன. இவை வேத்தியலாகவும் பொதுவியலாகவும் தமிழரிடையே பண்டுதொட்டு இருந்துவருகிறது. இடைக்காலத்தில் நம்மவர்கள் பிறமொழி மயக்கிலே மறந்துபோய் விட்டார் கள். அதனை நம்முடைய அறிவுடைக் கலைஞர்கள் சிலர் மீட்டெடுத்தனர். அதனுடைய உயிர்ப்பினை நம் கலைஞர்கள் தம் பேணதகு முயற்சிகளினால் செழுமைப்படுத்த வேண் டும். இத்தகைய ஒரு முயற்சியினையே மக்கள் இச்செந்நெறித் தமிழிசையின் அரங்கேற்றம் ஊடாக காணவுள்ளனர்.

சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம் என்பர். பழக்கம் பயற்சிக்கு இட்டுச் செல்லும். பயிற்சி திடநிலையினையும் வலுவினையும் வழங்கும். இரண்டு ஆண்டுகள் செம்மையான பயிற்சியின் பின்னரே றொபேட் தவநாதனுடன் அவருடைய மாணவர்கள் இச்செந்நெறித் தமிழிசை அரங்கேற்றத்திலே பங்கேற்கவுள்ளனர். செவ்வியல் தமிழிசையில் அவர்கள் திடநிலையுடனும் வலுவுடனும் இருக்கிறார்களா என்பதை நீங்கள் மதிப்பிட இந்த அரங்கு உங்களுக்கு நல்ல வாய்ப்பினைத் தரவுள்ளது.

இந்த ஈழத்துச் செந்நெறித் தமிழிசையின் அரங்கேற்றம் மிகவும் சிறப்பாகவும் தமிழிசைக்குத் தன்னுடைய பங்களிப்பினை உயர்வாகவும் வழங்க இறை ஆசியினை வேண்டுகிறேன். கலைஞர்களுக்கு என்னுடைய பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் கூறி இந்த வாழ்த்துரையை நிறைவு செய்கிறேன்.

*தகைசார் பேராசிரியர்*
**முனைவர் அ. சண்முகதாஸ்**
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

# தமிழர் செவ்வியல் இசை வளர்ச்சியில் முகிழ்த்தெழும் புதிய நீட்சி



தமிழர் செவ்வியல் இசை வளர்ச்சியில் ஒரு புதிய மேலெழுகை தவநாதன் தவமைந்தனால் உருவாக்கம் பெற்றுள்ளது. ஒரு புதிய பரிமாணம் நிலை நிறுத்தப்பட்டுள்ளது. தமிழகத்து ஆய்வாளர் களோடும் கலைஞர்களோடும் ஒப்பிடுகையில் நம்மவர் சளைத்தவர் களாக இருக்கவில்லை என்பதை ஈழத்து அறிஞரும் கலைஞரும் நிறுவிவந்த நீண்ட வரலாற்றுச் சுவடு உண்டு.

தமிழர் செவ்வியல் இசை வளர்ச்சியில் ஈழத்தவரின் பங்கு எத்துணை சிறப்பானது என்பதை இருபெரும் ஆளுமையினர் மேற்கொண்ட நிறுவல் முக்கியப்படுத்துகின்றது. தஞ்சை நால்வரின் செவ்வியல் ஆடலுக்கு நட்டு வாங்கம் செய்தவர் யாழ்ப்பாணத்துக் குமாரசாமி என்பவராவர். (தகவல் : ஜெ.அரங்கராஜ், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம், அவரின் பங்களிப்பு எழுதாமறையாகிவிட்டது. பல கீர்த்தனைகளும் அவரால் எழுதப்பட்ட செய்தி உண்டு)

தமிழர் இசை ஆய்வில் தனித்துவமான தடம் பதித்தவர் சுவாமி விபுலானந்த அடிகள். யாழ்வழி இன்னிசை என்னும் தமிழிசை விளக்கம் அவரால் உயிர்ப்புப் பெற்றது. ஆறுமுக நாவலர், சி.வை.தாமோதரம்பிள்ளை, பேராசிரியர் க.கைலாசபதி முதலிய பெரும் அறிவாற்றல் ஆளுமையினரின் வாரிசுகள் நாம் என்பதை மறந்தும் தவில் மேதை வி.தெட்சணாமூர்த்தி, நாகசுரமேதை என்.கே.பத்மநாதன், நடிப்பு மேதை நடிகமணி வி.வி.வைரமுத்து வாரிசுகள் நாம் என்பதை உணராமலும் "நமது ஆற்றல் தாழ்ந்தது" என்ற தாழ்வுச் சிக்கலால் வாடும் நம்நாட்டுக் கலைஞர்களுக்கு அறைகூவல் விடுப்பதாக தவமைந்தனின் செவ்வியல் இசைச் செயற்பாடுகள் எழுகோலம் பெற்றுள்ளன.

தமிழர் செவ்வியல் இசை வளர்ச்சிக்கு விசை கொண்ட பங்களிப்பைச் செய்யும் ஈழத்து வாக்கேயக்காரரின் உருப்படிகளைத் தெரிந்தெடுத்திருத்தலும் ஆற்றல்மிக்க மாணவர்களை ஆற்றுகையில் ஈடுபடுத்தியிருத்தலும் குறிப்பிடத்தக்கவை. தமிழகத்தில் ஒப்பிடுகையில் நாம் பின்னடைந்தவர்கள் என்ற தாழ்வுச் சிக்கலை உடைத்து தகர்த்தெறியும் செயற்பாட்டை மேற்கொள்ளும் தவமைந்தனின் பணி இசை வரலாற்றுப் பதிவுக்குரியது.

தமிழர் செவ்வியல் இசைக்கு அணி சேர்க்கும் அளிக்கை உருப்படிகளைத் தந்த ஈழத்தவரின் பட்டியல் நீண்டது. யாழ்ப்பாணம் குமாரசாமி (தஞ்சை நால்வர் காலத்தவர்) சுவாமி விபுலாநந்தர், ஆறுமுகநாவலர், ந.வீரமணி ஐயர், அருட்கவி விநாசித்தம்பிப் புலவர், யோக சுவாமிகள், பொன்னாலை சிவகுருநாதன், இணுவை வடிவேலர், மீசாலை ஏ.கே.ஏரம்பமூர்த்தி பொன்னாலை கிருஸ்ணபிள்ளை, கல்லடி வேலுப்பிள்ளை, பாவலர் துரையப்பாபிள்ளை, சங்கீதபூசணம் திலகநாயகம் போல், இசைவல்லுநர் பொன்.

ஸ்ரீவாமதேவன், இ.முருகையன், இசைவித்துவான் குலசீலநாதன், கவிஞர் சோ.பத்தம நாதன், தவமைந்தன், என்றவாறு செவ்வியல் இசை வாக்கேயக்காரரின் பட்டியல் நீண்டு செல்லும்.

“ஏராளமான தமிழிசைப் பாடல்கள் ஈழத்தில் தோன்றியிருப்பினும் அவை இசையரங்கு களில் பயன்படுத்தப்படுவது அரிதாகவே காணப்படுகின்றது. ஈழத்து இசையாளர்களின் மனோ நிலை, இரசிகர்களின் எதிர்பார்ப்புக்கள், ஈழத்து இசை கற்பித்தல் முறைமை போன்ற காரணங்களே ஈழத்து இசை வளச்சியடையாமைக்குரிய முதன்மையான காரணங்கள் (தவமைந்தன், 2018, தமிழிசைச் சிறப்பு மலர், கொழும்புத் தமிழச் சங்கம்)

தமிழிசை இயக்கம் என்பது செவ்வியல் இசை தொடர்பான தமிழரின் தமிழரின் தாழ்வுச் சிக்கலை உடைத்துத் தகர்த்தெறியும் ஓர் உளவியல் செயற்பாடாக அமைந்தது. செவ்வியல் இசைக்கும் (கர்நாடக இசைக்கும்) தமிழ் மொழிக்கும் உள்ள நீண்ட வரலாற்றுத் தொடர்பு மீளளிக்கை செய்யப்பட்டது சுயமரியாதை இயக்கம், தமிழ்த் தேசிய இயக்கம், முதலானவை தமிழிசை இயக்கத்துக்கும் ஆக்கவலுவூட்டின.

தமிழ் அரசியல் உரையாடல் தமிழ் மொழிக் கல்வியின் வளர்ச்சி தமிழ் இதழியலின் வளர்ச்சி தமிழ் வானொலியின் வளர்ச்சி உயர் கல்வியில் தமிழின் இருப்பு, முதலாம் ஈழத்து நிகழ்ச்சிகளும் தமிழகத்திலே தோற்றம் பெற்ற தமிழிசை இயக்கத்துக்கு வலுவூட்டின. செவ்வியல் இசைக் கச்சேரிகளில் தமிழ் உருப்படிகளுக்கே முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்ற ஆணையை அக்காலத்தில் இலங்கை ஒலிபரப்புத் துறை அமைச்சராக இருந்த அரர் சு.நடேசபிள்ளை அவர்கள் முன்வைத்தார். மக்கள் விளங்கும் மொழியில் செவ்வியல் இசை அமைய வேண்டும் என்பது அவரது கருத்தாக அமைந்தது. அவரே இராமநாதன் இசைக் கல்லூரியை (நுண்கலைக் கழகத்தை) நிறுவியவரும் ஆவர்.

தமிழிசை இயக்கம் என்பது தமிழகத்தில் மேலாதிக்கம் செலுத்திய மேட்டுக் குடியின ருக்கு எதிரான ஒரு செயற்பாடாயிற்று. தமிழரின் செவ்வியல் இசை அடையாளங்களை அழிப் புச் செய்தோரின் செயற்பாடுகளுக்கு எதிரான முனைப்புடன் அந்த இயக்கம் மேற்கிளம்ப லுற்றது.

தமிழ்ச் சூழலில் தமிழரின் செவ்வியல் இசை தொடர்பான மீள் தேடல் அதனால் ஊக்குவிக்கப்பட்டது. தொல்காப்பியம் குறிப்பிடும் அகவற்பா, வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா, பரிப்பா, முதலியவை இசைப்பா வடிவங்கள் என்ற தொன்மை எடுத்தியம்பப்பட்டது.

இசையின் உயிர்ப்போடு தொடர்புடையதாக தொல்காப்பியம் குறிப்பிடும் இருபது வண்ணங்களும் மீள நோக்கப்பட்டன.

சிலம்பு குறிப்பிடும் ஆற்று வரி, அம்மானைவரி, ஊசல் வரி, ஊர் சூழ்வரி, கந்துக வரி, சாயல் வரி, சார்த்து வரி, திணைநிலை வரி, முகமில் வரி, முரி வரி, வாழ்த்து வரி, வேட்டுவ வரி, ஆச்சியர் குரவை, குன்றக் குரவை, மங்கல வாழ்த்துப்பாட்டு, வள்ளைப் பாட்டு, முதலிய வற்றுக்கும், தமிழர் செவ்வியல் இசைக்கும் உள்ள தொடர்புகள் மீட்டுருவாக்கம் செய்யப் பட்டன.

கீர்த்தனை வடிவத்தின் ஆரம்பமாக தேவாரங்கள் அமைந்த அடிநிலை ஆதாரம் எடுத்தியம்பப்பட்டது. திருவாசகத்துள் அடங்கும் திருஅம்மானை, திருவுந்தியார்,

திருவம்பாவை, திருக்கோத்தும்பி, திருதெள்ளேனம், திருப்படையாட்சி, திருப்பள்ளி எழுச்சி, திருப்பொன்னூஞ்சல், முதலியவை தமிழர் செவ்வியல் இசை வடிவத்தோடு இணைந்தவை என்பது நிறுவப்பட்டது. அவ்வாறே ஆழ்வார்களின் இசை நுணுக்கங்களும் விரித்துரைக்கப் பட்டன.

செவ்வியல் இசையின் தமிழ் அடையாளங்கள் வெளிப்படுத்தப்பட்டன. அவற்றின் தொடர்ச்சியும் நீட்சியுமாக ஆய்வாளர் ந.மம்மது அவர்களின் தமிழிசை அகர முதலியும் தோற்றம் பெற்றுள்ளது. தமிழர் செவ்வியல் இசையின் மீட்பு நடவடிக்கைகள் உயர் நிலை யான ஆய்வுகளுக்கும் இட்டுச் சென்றன. ஆபிரகாம் பண்டிதர் சுவாமி விபுலாநந்தர், இரா.இளங்குமரன், ஏ.என்.பெருமாள், எம்.எம்.தண்டபாணி தேசிகர், முனைவர் அரமளம் சு.பத்மநாபன், பேராசிரியர் எஸ்.வையாபுரிப்பிள்ளை, பேராசிரியர் சாரதா, நம்பி ஆரூரன், பேராசிரியர் கே.ஏ.குணசேகரன், மயிலை சீனி.வெங்கடேசன், பேராசிரியர் ஞானா குலேந்திரன், பேராசிரியர் பிரமிளா குருமூர்த்தி, முனைவர் கௌசல்யா சுப்பிரமணியன் முதலாம் ஆய்வாளர்களின் தமிழர் செவ்வியல் இசை ஆய்வுகள் மேற்கிளம்பலுற்றன.

தமிழிசை இயக்கம் என்பது வேறெந்த மொழிகளுக்கும் எதிரான குறுகிய நோக்கம் கொண்ட தன்று. தமிழர் செவ்வியல் இசையின் நீண்ட வேர்களைத் தேடுதலும் சாமானியரும் பொருள் விளங்கி இசையைச் சுவைக்கச் செய்தலும் அந்த இயக்கத்தின் முன்னெடுப்புக்களாக அமைந்தன.

இசை வல்லுனர்கள், ஆய்வாளர்கள், நடிகர்கள், இதழாசிரியர்கள் மட்டுமன்றி பொதுமக்களும் பங்குபற்றிய பேரியக்கமாக அது எழுச்சி கொண்டது. அதேவேளை அதற்கு எதிரான கருத்துக்களை ஆங்கில நாழிதழாகிய "இந்து" வெளியிட்டு வந்தமை மேட்டுக் குடியினரது மேலாதிக்க உளப்பாங்கை வெளிப்படுத்தியது.

தமிழிசை என்றால் என்ன என்ற வினா எழுப்பப்பட்ட வேளை பேராசிரியர் இ.அங்கயற் கண்ணி கொடுத்த விளக்கம் வருமாறு. தமிழிசை என்பதை தமிழ் மொழியாகிய உடம்பில் இயங்குகின்ற இசையாகிய உயிர் என்று பொருள் கொள்ளலாம். தமிழிசை என்பதை தமிழ் மொழியில் அமைந்த பாடல்களின் இனிய இசை என்ற பொருள்கொள்ளலாம். தமிழிசையே தற்போது கர்நாடக இசையாக மருவியுள்ளது. (அங்கயற்கண்ணி இ, 2019, தமிழிசைச் சிறப்பு மலர், கொழும்புத் தமிழ்ச் சங்கம்)

பெரும் தமிழிசைப் புலத்தில் புதியதொரு நீட்சி தவமைந்தனால் முன்னெடுக்கப்பட்டுள் ளது. அறிகை நிலை, புலமைநிலை, நிகழ்த்துகை நிலை முதலிய தளங்களில் அது எழுகோலம் பெறுகிறது.

**பேராசிரியர் சபா.ஜெயராசா**
கொழும்புத் தமிழ்ச் சங்கம்,
கொழும்பு.

# பெரு முயற்சிக்கு வாழ்த்து



ஆதியில், பாட்டும் இசையும் கூத்தும் இணைந்தே இருந்தன, வளர்ந்தன. காலப் போக்கில் கூத்துப் பிரிந்து பிறகு இசை பிரிய கவிதை தனித்து நிற்கிறது. இன்று புதுக்கவிதை பிரபலமாகி உள்ள நிலையில் கவிதையை இசையோடு பாடும் வழக்கம் அருகி வருகின்றது. இப் போக்குக்கு அப்பால் இசைப்பா வடிவங்கள் கற்றாரையும் மற்றாரை யும் கவர்ந்து வந்துள்ளன. சங்க காலத்திலும் பக்தி இயக்க காலத்தி லும் குறிஞ்சிப் பண் செவ்வழிப் பண் முதலியவை விரும்பிக் கேட்கப்பட்டன.

பண்ணொன்றை இசை பாடும் அடியவர்கள் பற்றியெல்லாம் பக்தி இலக்கியங்கள் பேசுகின்றன. செந்நெறிப் பா வடிவங்களைப் பயன்படுத்திய தேவார ஆசிரியர்கள் கூட தம் காலத்தில் வழங்கிய நாட்டார் பாடல் மெட்டுக்களில் கவி பாடியுள்ளனர். படித்தவர்கள் தான் பாடினார்கள் என்றில்லை. சிந்து, தெம்மாங்கு, கிளிக்கண்ணி முதலிய நாட்டார் பா வடிவங்கள் செவி வழியாக மக்களிடையே புழங்கி வந்தன.

18 - 19 ஆம் நூற்றாண்டுகளில் இசையை முதன்மைப்படுத்தும் கீர்த்தனைகள், கிருதிகள், வர்ண மெட்டுக்கள், பதங்கள், தில்லானா, காவடிச்சிந்து முதலியவை யாக்கப்பட்டன. அவை இசைக் கச்சேரி, கதாப் பிரசங்கம், வில்லிசை, இசைநாடகம் மூலம் பிரபலமாயின.

அருணாசலக் கவிராயர், முத்துத்தாண்டவர், கோபாலகிருஷ்ண பாரதியார் முதலியோர் தமிழ் நாட்டின் முன்னோடி சாகித்திய கர்த்தாக்கள் ஆக அறியப்படும் அதே வேளை ஈழ நாட்டிலும் சைவபக்தி இலக்கியங்கள் மூலமும் கிறீஸ்தவ நாடகங்கள் மூலமும் இசைப் பாக்கள் பிரபல மாகி வளர்ந்து வந்துள்ளன.

எமது இசை மரபைப் பேணி வளர்ப்பதில் ஆர்வம் உள்ள கலைஞர்கள் ஈழத்துக் கவிஞர்கள், இசை வாணர்கள் யாத்த உருப்படிகளுக்கு இசையமைத்து கச்சேரிகள் மற்றும் விழாக்கள் மூலம் வாழ்வளிக்கும் இப் பெருமுயற்சியை முன்னெடுக்கும் இளம் இசைவாணர் தவநாதன் றொபேட் அவர்களை வாழ்த்துகிறேன்.

**கவிஞர் சோ.பத்மநாதன்**
"ஏரகம்" பொற்பதி வீதி,
கொக்குவில்.

## ஈழத்தின் கவிதை மரபு
# இசையோடு கலக்கட்டும்



ஈழ நாட்டிற்கென்று தனித்துவமான கலையம்சங்களும் பண்பாட்டுக் கூறுகளும் உள. ஈழத்துக்கலை இலக்கியங்கள் நீண்ட நெடும் வரலாற்றைக் கொண்டவை. எனினும் ஈழத்து அரசியல் பண்பாட்டு, சமூக பொருளாதார சூழல்களாலும் இயற்கையின் தாக்கங்களினாலும் அவற்றைச் சான்றுகளுடனே நிறுவ முடியாமல் உள்ளது.

சிறப்பானதோர் கவிதைப் பாரம்பரியம் ஈழத்திலே நிலவியமைக்கான சான்றுகள் உள. ஈழத்துப் பூதந்தேவனார் தொடக்கம் இன்றைய கவிஞர்கள் வரை சிறப்பான பல கவிதை களைப் பாடி உள்ளமையை ஆய்வாளர் அறிவர்.

பல்வேறு யாப்பு வடிவங்களையும் கையாண்டு கவிதை எழுதிய ஈழத்துக் கவிஞர்கள் அவ்வப்போது கீர்த்தனைகளும் பாடியுள்ளனர். இங்கு தோன்றிய கீர்த்தனைகள் பெரும் பாலும் சமயச் சார்புடையவையாகவே காணப்படுகின்றன. ஆனால் சமயச் சார்பின் ஊடாக வும் சமூகச் செய்தியைச் சொன்ன கீர்த்தனைப் பாரம்பரியம் ஒன்று நமது ஈழ நாட்டிலே தோன்றி யமை குறிப்பிடக் கூடிய அம்சமாகும்.

நாம் அறிந்த வரையிலே ஒல்லாந்தர் காலப் பகுதியைச் சேர்ந்த வல்லிபட்டி குமார சுவாமி முதலியார் பாடிய சமயச் சார்பான கீர்த்தனைகளிலே சமூகச் செய்திகளும் இடம் பெற்றுள்ளன. குறிப்பாக, அக்காலத்திலே ஈழத்தில் பரவிய "கொலரா" எனும் வாந்திபேதியின் கொடுமை பற்றிக் குறிப்பிட்டவற்றைச் சுட்டிக் காட்டலாம். ஏறத்தாள நூறு கீர்த்தனைகள் இந் நூலில் இடம்பெற்றிருந்தன. இன்று இந்நூல் கிடைக்குமாறில்லை.

இப்போது ஈழத்துப் புலவர்களின் கீர்த்தனைகளை இசைப்பாடல்களை குரலோசை - நுண்கலைகளின் தாயகம் என்னும் அமைப்பினர் அரங்காற்றுகை செய்ய முன்வந்திருப்பது மகிழ்ச்சிக்குரியது. இந்த அமைப்பின் சூத்திரதாரியான றொபேட் இந்த நிகழ்வை முன்னின்று நடத்துகிறார். இனிமையான குரல் வளம் மிக்க றொபேட் எமது மாணவர் என்பதிலே நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். அவரது பணிகள் யாவும் நிறைவு பெற இறைவனை இறைஞ்சி வாழ்த்துகிறேன்.

**பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா**
யாழ்ப்பாணம்.

# ஏன் தமிழிசை



1956 முதல் 1966 ஈறாக புதுடில்லியிலும் கேரளத்திலும் ஆடல் கலை கற்கை மாணவனாக நான் இருந்த காலம். விடுமுறைக் காலத்தில் நாட்டிற்கு வரும் வேளைகளில் ஆடல் ஆற்றுகைச் செயற்பாடுகளிலும் ஈடு பட்டிருந்த அந்தக் காலம் முதல் 1988 - 1990 அதை ஒட்டிய சிறிது பிற்காலம் வரை யாழ்ப்பாணத்தில் ஓர் ஆரோக்கியமான கலையுலகம் இயல்பாகச் செயற்பட்டுக் கொண்டிருந்த காலம் அது.

யாழ்.பெருமாள் கோயிலடி இரசிக ரஞ்சன சபா இசைவிழா, அது முடிவில் நல்லூர் அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தின் இசை விழா அதன் பின்னர் திருநெல்வேலி மும்மூர்த்திகள் மன்ற இசைவிழா, அதனைத் தொடர்ந்து நல்லூர் இளங்கலைஞர் மன்ற இசைவிழா இவை முடிய வடமராட்சி இசை மன்றத்தின் இசைவிழா அதன் பின்னால் தென்மராட்சி இசைமன்ற இசைவிழா இப்படியாக ஆண்டு தோறும் ஒரு குறிப்பிட்ட காலம் இசைவிழாக் கோலமாக யாழ்ப்பாணக் குடாநாடு மூழ்கியிருந்த காலம் ஒன்று இருந்தது. அதே இசை விழா அரங்குகளில் ஆடல் அணங்குகளின் சதங்கை ஒலிகளுக்கும் குறைவிருக் காது. 1968 - 1996 காலம் வரை ஒரு செவ்வியல் முறையான ஆடல் அணியினை ஆரம்பித்து அரங்காற்றுகைச் செயற்பாடுகளில் முழுமையாக நானும் ஈடுபட்டிருந்த காலம் அது.

இசை விழா காலம் ஆரம்பித்தால் ஒவ்வொரு சபாக்களின் இசை விழாக்களையும் நான் தவற விடுவது மிகக் குறைவு. குறிப்பிட்ட இசை விழாக்காலம் நிறைவுபெற்றதும் என்னுள் ஒரு விமர்சன ஓட்டம் அதாவது ஒருவர் பாடிய அதே பாடலை அதே குறிப்பிட்ட மொழிப் பாடலையே மற்றவர்களும் பாடுகிறார்கள். இந்த இசை விழாக்களால் ஏற்படுத்தப்படும் பெறு பேறுகள் என்ன. அதற்குப் பின்னால் திருவாளர் பொது மகனுக்குக் கிடைக்கின்ற விளை பயன்கள் என்ன.

இத்தகைய சிந்தனை ஓட்டத்தின் நடுவே தமிழிசைப் பாடல்கள் தரும் செய்திகளும் அதனகத்துள்ள கருத்தடக்கங்களும் என் மனத்திரையில் மேலெழுந்த வண்ணம் இருக்கும்.

தமிழிசை என்று குறிப்பிடும் போது ஈழத்தமிழர் மத்தியில் யாழ்.நல்லூரை மையப் படுத்தியதாக இயங்கிய தமிழிசை இயக்கம், அது தான் அண்ணாமலை இசைத் தமிழ் மன்றம். அந்த மன்றத்தின் மூல விசையாக அதைச் சுமந்து செல்லும் வாகனமாக இருந்து செயற்பட்டவர் பல ஆண்டுகளுக்கு முன்பே காலமாகி விட்ட சங்கீதபூசணம் தமிழிசை நமசிவாயம் அவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அவருடன் இணைந்து செயற்பட்டவர்கள் அமரர்களான சங்கீதபூசணம் அரியாலை ச. பாலசிங்கம் அவர்களும் மற்றும் இசையாசிரியர் அரியாலை எஸ்.பரமசாமி ஆகியோர் என்பதும் இந்த இயக்கத்தின் வரலாறாகும்.

இசையால் பலர் வாழ்ந்த அந்தக் காலத்தில் இந்த மண்ணில் தமிழிசையை மக்கள் மயப்படுத்துவதற்காக வாழ்ந்து மடிந்தவர்கள் தான் நான் மேலே குறிப்பிட்ட தமிழிசைத்

தொண்டர்கள். இன்றைய இசை உலகால் அவர்கள் மறக்கப்பட்டு விட்டார்கள் என்பது தான் பெரும் சோகம். இது அவர்கள் பற்றிய மிகைப்படுத்தப்பட்ட எனது கூற்று அல்ல. மாறாக இதுவே எனது சாட்சியம். தமிழிசை இயக்கத்தின் முன்னெடுப்புக்கு ஆதரவு நல்கியவர்களில் ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் சங்கீதபூசணம் பொன்னாலை சு.கணபதிப்பிள்ளை அவர்களும் மற்றும் சங்கீதபூசணம் கல்வியங்காடு திரு வேலாயுதபிள்ளை அவர்களும் நினைவு கூரப்பட வேண்டியவர்கள்.

எடுத்ததற்கெல்லாம் இந்தியத் தமிழ் நாட்டின் இசை வழியையே தம்மோடு வரித்துக் கொண்டாடும் நம் நாட்டு உயர் கல்வி நிறுவனங்களும் இசை மேதைகளும் அந்நாட்டிலேயே தமிழிசைக் காப்பகமாக உருவாகியிருக்கும் சென்னை அண்ணாமலை இசைத் தமிழ்க் கழகத்தின் செயற்பாடுகளையும் அதன் முன் மாதிரிகளையும் ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கு அற்றவர்களாக இருப்பதுதான் நமது மண்ணின் தமிழிசை வெறுமைக்குக் காரணமோ? இத்தகைய இலக்கற்ற நகலத் தனமான மனப்பாங்கு இன்று நேற்றல்ல. அழகியல் கல்விப் பாடசாலைகளின் பாடவிதானத்தில் உள்வாங்கப்படுவதற்கு முந்தைய காலத்தில் இருந்தே இந்நிலை தொடருகிறது. அதற்கு ஆதார உதாரணமாக பின்வரும் செய்தி அமைகிறது.

1970இல் அழகியற் கல்வி அறிமுகமாகி இவற்றுக்கான பாட விதானத் தயாரிப்புக்கள் முன்னெடுக்கப்பட்ட போது இது சார்ந்த அதிகாரபூர்வமான இணைப்பாளராக கல்வி அமைச்சினால் நான் நியமிக்கப்பட்டிருந்தேன். அத்தோடு யாழ்ப்பாணக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் ஓர் ஆலோசனைக்குழுவும் அமைக்கப்பட்டிருந்தது. அந்த ஆலோசனைக் குழுவில் பாடசாலைகளில் பணியாற்றிய இசையாசிரியர்கள் சிலரும் இசையாசிரியர்களாகப் பணியாற்றாத அதே வேளை யாழ்ப்பாணத்து இசையுலகின் முதுசக் காரர்கள் தாங்களே என்று தங்களைத் தாங்களே பிரசித்தப்படுத்திக் கொண்ட சிலரும் இடம்பெற்றிருந்தார்கள். ஆடல் கல்விப் பகுதிக்கும் நானும் காலம் சென்ற ந.வீரமணிஐயர் அவர்களும் காலம் சென்ற திருமதி. கனகேஸ்வரி மயில்வாகனம் அவர்களும் இடம்பெற்றிருந்தோம். அத்தோடு உடற் கல்விக்கான கல்வி அதிகாரியாக அக்காலத்தில் கடமையாற்றியவரும் அழகியல் செயற் பாடுகளில் நல்ல ஈடுபாடு கொண்டவருமான காலம் சென்ற திரு எஸ்.சீவரத்தினம் அவர்கள் இந்த ஆலோசனைக் குழுவின் பொதுநோக்குநராக உள்வாங்கப்பட்டிருந்தார். தலைவர் பொது நோக்குநர் தவிர பதினொரு அங்கத்தவர்களைக் கொண்ட இந்த ஆலோசனைக் குழுவில் எட்டுப் பேர் இசைத்துறையைச் சார்ந்தவர்கள்.

சங்கீத, நடனப் பாடத்திட்ட ஆரம்பச் செயற்பாட்டிற்குரிய முதலாவது ஆலோசனைக் குழு யாழ்.கல்விப் பணி மனையில் கூடிய போது இன அடையாளத்துடன் ஒட்டியதான ஒரு முக்கிய முன் மொழிவை நான் சமர்ப்பித்தேன். அதாவது நாம் இலங்கையர் வரலாற்றின் வைகறையில் இருந்தே இந்த நாட்டின் வாழ்வுரித்துக்குரியவர்கள் என்று அறியப்பட்டவர்கள் எனினும் மக்கள் தொகையில் மக்கள் நாம் சிறுபான்மையினர் என்பதை கருத்தில் எடுத்து மொழி வழி மரபுரிமை ஊடாக எமக்குரித்தான கலைவடிவமாக இசைப் பகுதிக்கான பாடத்திட்டத்தை தமிழிசை / இசைத்தமிழ் என்ற மகுடத்தின் கீழும் அதேபோல் மொழி வழி உரித்துடன் கூடியதாக தமிழர் ஆடல் / ஆடல் தமிழ் போன்ற மகுடத்தின் கீழ் நடன பாடத் திட்டத்தையும் அறிமுகம் செய்தால் என்ன? அல்லது நான் குறிப்பிட்ட இந்தப் பாடவிதானத் தலைப்புக்களுக்கு அப்பால் ஏதேனும் ஒரு வகையில் ஈழத்தமிழர் அடையாளம் சார்ந்த மரபுரிமை எண்ணக்கருவுடன் கூடியதான ஒரு மகுடத்தின் கீழ் இந்தப் பாட அலகுகளை ஆக்குவது பற்றி நாம் சிந்தித்தால் என்ன? செயற்படுத்தினால் என்ன? எடுத்த எடுப்பில் இந்த முயற்சி பூரணமடையாது என்பதும் உண்மைதான். எனினும் எமது எதிர்கால இனத்துவ மரபுரிமை நோக்கி இதற்கான அரச அங்கிகாரத்துக்குரிய அத்திவாரமாக ஆரம்பித்து

வைத்தல் காலப்போக்கில் இந்த முன்னெடுப்பு காத்திரமான செழுமை நிலைக்கு வளர்ச்சி காணும் அல்லவா? இது தான் நான் சமர்ப்பித்த முன்மொழிவின் சாராம்சம்.

எனது இந்த ஆலோசனையை பாடசாலைகளில் பணியாற்றிய ஆசிரியர்களில் பலர் ஏற்றுக்கொண்டனர். மற்றையோரிடம் இருந்து ஏளனத் தொனிகளுடன் கூடிய மறுப்புரைகள் தான் வெளிவந்தன. அதற்கு அப்பால் அதென்ன தமிழிசை என்ற ஏளனத் தொனியுடன் கூடிய எதிர்மறையான கருத்துக்களே வெளிப்பட்டன. அது மட்டுமன்றி சாஸ்திரோக்தம், சம்பிரதாயம் என்பவற்றை விடுத்து தமிழர் நடனம், ஆடல் தமிழ் என்றால் என்ன, இது என்ன புதுக்கதை என்ற வினாக்களே மேலெழுந்தன. பாடசாலைகளில் சங்கீத ஆசிரியர்களாகப் பணியாற்றாத அதேவேளை யாழ்ப்பாணத்து இசையுலகின் ஆட்சியாளர்கள் நாமே என்ற வரட்டுத் தோரணையுடன் கூடிய சுயஞான சிரோன்மணிகளாவே அவர்கள் தமது தூரப்பார்வையற்ற ஆளுமையை வெளிப்படுத்தியிருந்தனர். இவர்களின் மறுப்புரைக்கு அந்நாளைய கல்விப் பணிப்பாளரும் தலையசைத்து ஆமோதித்தது தான் வேடிக்கை. இன்று அவர்கள் நம்மி டையே இல்லை. அப்படி அவர்கள் இருந்தாலும் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட இது சார்ந்த வரலாற்றுத் தவறுகளினால் இலங்கையின் தேசிய கல்வி நிறுவனத்தில் இடம்பெறும் ஆதிக்க மேலாண்மையை மரபுரிமையற்ற நிலையில் ஏனென்று இவர்களால் கேட்க முடியுமா. எனது முன்மொழிவை ஏற்றுக் கொண்டவர்களில் அமரர் அரியாலை பாலசிங்கம் அவர்களும் பொன்னாலை திரு. சு.கணபதிப்பிள்ளை ஆகியோர் உட்பட மேலும் சிலர் நினைவுகூரப்பட வேண்டியவர்கள்.

ஆடல் வடிவத்திற்கு அடித்தளமிடுவது இசைவடிவம். இவ்விசை வடிவம் மொழி வழி இனத்துவ அடையாளத்தை துல்லியப்படுத்தினால் தான் அவ்வாடல் வடிவம் நமது இனத்துவத்தை இனம் காட்டும். அவர்களே தான் உரித்தாளிகள் என்ற அங்கீகாரத்தையும் ஏற்படுத்த வழி பிறக்கும்.

ஆக ஈழத்தின் தமிழிசை மேலெழுந்தால் தான் ஈழத்தமிழரை அடையாளப்படுத்தும் ஆடல் வடிவத்தைப் பற்றிச் சிந்திக்கலாம். இது சார்பாக நாம் மேலே குறிப்பிட்டவைகளில் இருந்து வெளிவரும் யதார்த்தம் என்னவென்றால் அரச அங்கிகாரத்துக்கு உரியதாக 1970 தொடக்கம் பாடசாலைக் கல்வித் திட்டத்தில் இருந்து இவ்வரலாற்றுத் தேவை முன்னெடுக்கப் பட்டிருந்தால் இன்று தமிழிசைக்கான தேடலே ஈழத்தமிழர் அடையாளம் சார்ந்த ஆடல் வடிவத்தையோ தேடல் செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது.

இக்குறிப்பின் நிறைவாக குற்றுயிரும் குறை உயிருமாய் நொந்து பட்டு நோக்காடு தீர வழியின்றித் தள்ளாடிக் கொண்டிருக்கும் தமிழிசைக்கு இன்று செந்நெறித் தமிழிசை அரங்கேற்றம் செய்து மக்கள் மயப்படுத்த முனைந்து நிற்கும் நாடறிந்த இசையாளர் பல்கலைக் கழக முதுநிலை விரிவுரையாளர் தவநாதன் றொபேட் அவர்களின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இப்பெரும் பணிக்கு அசல் தமிழுலகம் கை கொடுத்து நிமிர்த்த வேண்டும். அவரால் ஆக்கப்பட்டு இசை வடிவம் பெற்று அரங்கிற்கு வரும் அத்தனை இசைத் துணுக்குகளும் ஈழத்தமிழர் அடையாளம் சார்ந்த ஆடற் துணுக்குகளிற்கு ஆதார தளமானவை என்பதும் கண்கூடு.

காலத்தின் தேவை அறிந்து முன்னெடுக்கப்படும் இப் பெரும் பணிக்கு நமது தமிழ் உலகம் கை கொடுக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

**கலைஞர் வேல். ஆனந்தன்**
ஓய்வு நிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
அழகியல், வட, கிழக்கு மாகாணம்.

# வரலாற்றுச் சாதனைக்கு வாழ்த்துகள்



நாடறிந்த இசைக் கலைஞர் திரு தவமைந்தன் அவர்களின் முயற்சியில் ஈழத்தின் தமிழிசை அரங்கேற்றப்படுவது மகிழ்ச்சிக்குரிய தாகும். ஈழத்தின் நூறு பாடல்கள் ஒரே நாளில் ஒரே இடத்தில் பாடப்படுவது வரலாற்றுச் சாதனை என்றே கூறலாம். இந்த நிகழ்வில் பங்கு கொள்ளும் அனைத்துக் கலைஞர்களையும் மனதார வாழ்த்து கின்றேன். ஈழத்தின் தமிழிசையை வளர்க்க அனைத்துக் கலைஞர் களும் தொடர்ந்தும் பாடுபடவேண்டும் என எல்லாம் வல்ல தில்லைக் கூத்தனின் பாதங்களைப் பணிந்து பிரார்த்திக்கின்றேன்.

நன்றி

**க. ப. சின்னராசா,**
மருதனார்மடம்.

## ஈழத்தின் தமிழிசை – அரங்கேற்று விழா

# தமிழர்களும் தமிழும் நிகழ்காலமும்



தொன்மையானதும் சமகாலத்தில் புழக்கத்தில் உள்ளதும் எதிர்கால இருப்புக்கு வாய்ப்புக்களையும் கொண்ட மொழியாக தமிழ் மொழி விளங்கி வருகின்றது. செம்மொழி யாகிய தமிழ்மொழியே என்று பாராட்டவும்படுகின்றது. இணையமொழியாகவும் தமிழ்மொழி வாழ்வு கொண்டுள்ளது.

ஆயினும் அன்றாடப் பாடப் பயில்வுகளில் தமிழ்மொழியின் நிலை கேள்விக்குரியதாகி வருகின்றமை மிகவும் வெளிப்படையானது. கல்வி வெளிகளிலும் வெகுசன ஊடக வெளிகளிலும் தமிழ்மொழி யின் பாவனை குறைவடைந்தும் திரிபடைந்தும் வருவதும் யதார்த்தமாக இருந்து வருகின்றது. மேலாக, தமிழில் வழிபட முடியாத கடவுளரைக் கொண்டவர்களாக தமிழர்கள் வாழ்ந்து வருகின்றார்கள். தமிழ்மொழியில் வழிபாடு நடத்த முடியாதவர்களாக தமிழ்த் தெய்வங்களும் மாற்றப்பட்டு வருகின்றார்கள்.

உயர்கலைகளைக் கொண்டாடும் தமிழர் சமூகம் தமிழில் பாட முடியாததாகவும் தமிழுக்கு ஆடமுடியாததாகவும் இருந்து வருகின்றது. இத்தகையதொரு சூழ்நிலையில் தமிழ் மொழியில் பாடவும் பயிலவும் பல இயக்கங்கள் தோன்றியும் துலங்கியும் வருவது வரலாறாக வும் நடைமுறையாகவும் இருந்து வருகின்றது.

ஆயினும் தமிழின் அழகியல் மரபுகள், தத்துவ மரபுகள், ஆய்வு ஆணுகுமுறை மரபுகள், அறிவியல் மரபுகள் என்பன பற்றிய தேடலும் உரையாடலும் தொன்மையின் தொடர் மறுக்கப்பட்டு அந்தரநிலைக்கு கொண்டு வரப்பட்டிருக்கின்றது.

தமிழும் தமிழ் அறிவு மரபுகளும், திறன்களும் அறிவுபூர்வமற்றதாகவும், விஞ்ஞான பூர்வமற்றதாகவும், நாகரிகமற்றதாகவும், பாமரத்தனமானதாகவும் நவீன அறிவுலகில் மிகவும் ஆழமாகப் பதிந்துவைக்கப்பட்டிருக்கின்றது. சட்டபூர்வமான எல்லைகளுக்குள் அனுமதிக்கப்பட முடியாதவையாகவும் வரையறை செய்யப்பட்டும் வரவிலக்கணப்படுத்தப்பட்டும் நடைமுறை ஆக்கப்பட்டிருக்கின்றது.

இத்தகையதொரு பின்னணியில் தமிழியல் அறிவு முறைகள், தமிழ் அறிவு முறைகள், தமிழ் ஆய்வு அணுகு முறைகள், தமிழ் அழகியல் மரபுகள் தத்துவ மரபுகள் தமிழர் இசை மரபுகள் இசைக்கருவி மரபுகள் ஆடல் மரபுகள் ஏனைய சிற்ப தொழில்நுட்ப மரபுகள், கைத்தொழில் மரபுகள் எனப் பலவகைப்பட்ட அறிவுதிறன் மரபுகள் பற்றிய உரையாடல்களும் முன்னெடுப்புக்களும் மீளவும் மெல்ல முளைவிடத் தொடங்கியுள்ளன.

இந்தவகையில் தவநாதன் றொபேட் அவர்களின் "ஈழத்தின் தமிழிசை அரங்கேற்ற விழா" முக்கியத்துவம் பெறுகின்றது. ஈழத்து பாவலர்கள் ஆக்கங்களைத் தேடித் தெரிந்து தொகுத்து இசையமைத்து ஆற்றுகைக்கு கொண்டுவரப்பட்டிருக்கின்றது. இது ஆய்வு அணுகு முறையும் படைப்பாக்கச் செயன்முறையும் இணைந்த ஆய்வு ஆற்றுகையாகவும் பரிணமித்து இருக்கின்றது.

ஆற்றுகைக்கலைப் பயில்வுகளதும் ஆய்வுகளதும் முன்னுதாரணமானதொரு முறைமையாகவும் "ஈழத்தின் தமிழிசை அரங்கேற்ற விழா" கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. தமிழிசை மரபுகளின் உருவாக்கத்திற்கு மூலாதாரமாக தென்மோடிக் கூத்திசை அமையும் என்பது பேராசிரியர் க.கணபதிப்பிள்ளையின் கருத்து இந்தச் சந்தர்ப்பத்தில் முக்கியத்துவம் உடையதாகின்றது

தமிழ்மொழி பேசுபவர்கள் உலகின் பல பாகங்களிலும் பரந்து வாழ்ந்து வருகின்றார்கள். பல்வேறு மொழிகளையும் அறிந்தவர்களாகவும் பாண்டித்தியம் பெற்றவர்களாகவும் வாழ்ந்தும் ஆக்கங்களை வழங்கியும் வருகிறார்கள். உலகின் பல்வேறுபாகங்களிலும் வாழ்பவர்களை தமிழால் இணைக்கும் தமிழிணையம் வலிமை கண்டு வருகிறது. ஆர்வலர்களின் உயிர்வாழ்வில் இந்த நன்மைகள் எல்லாம் நிகழ்ந்தேறி வருகின்றன.

இவற்றை எல்லாம் பொதுப் போக்காக மாற்றும் இலக்குடன் இயங்கும் அறிவியல் இயக்கங்கள் மேலோங்கும் வகை செய்யும் முன்னெடுப்புகள் வலிமை கொள்ளட்டும். வேகம் கொள்ளட்டும். ஈழத்தின் தமிழிசை அரங்கேற்றம் என்பது காலத்தை அறிந்துணர்ந்து தவநாதன் றொபேட் முன்னெடுக்கும் முக்கிய பணியாக அமைகிறது. இது இயக்கமாக பரிணமிக்கும் வகை செய்வது அறிவுடையோர் பணி.

**எங்களின் குரலில் எங்களின் மொழியில் நாங்கள் பாடுவோம்**
**எல்லா மொழிகளிலும் எங்கள் குரல்கள் இசை பாடட்டும்.**

**கலாநிதி சி.ஜெயசங்கர்**
பணிப்பாளர்,
சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்,
மட்டக்களப்பு.

### எங்கள் இசையாக

# ஈழத்தின் தமிழிசை மிளிரட்டும்



எமது ஈழமணித்திருநாட்டிலே, மிக ஆற்றல் வாய்ந்த இசைக் கலைஞர்களும் ஆற்றல் வாய்ந்த தமிழ்க் கவிஞர்களும் ஏராளமாக இருந்தனர், இருக்கின்றனர். இசையை இரசிப்பதற்கு இசை ஞானமும் மொழி ஞானமும் அத்தியாவசியமாகின்றன. இவை இரண்டும் ஒருங்கே கைகூடப்பெற்றால் மாத்திரமே அந்த இரசிகனால் இசையை முழுமையாக இரசித்து உணர முடிகிறது. எமது ஈழநாட்டிலே திறமை வாய்ந்த பல கவிஞர்களினாலே உருவாக்கப்பட்ட ஆயிரக்கணக்கான பாடல்கள் இருப்பினும் அவற்றை இசையுடன் கோர்த்து பாடக்கூடிய ஒரு சூழ்நிலை இருள் மயமாகவே காட்சியளிக்கின்றது. மாற்றான் வீட்டு மல்லிகைச் செடியின் மணத்திற்கு ஒப்பாகவே நாம் இந்தியத் தமிழ் கலைஞர்களின் உருப்படிகளைக் கையாளுகின்றோம். இந்தத் துரதிஸ்ரமான நிலையினைத் தனித்து நின்று போக்குவதற்குத் துணிந்து செயற்பாடுகளில் இறங்கி இன்று வெற்றியும் கண்டிருக்கின்றார் மதிப்பிற்குரிய தவநாதன் றொபேட் அவர்கள்.

கர்நாடக சங்கீதத்தில் இருக்கும் உருப்படிகள் யாவும் பொதுவாக ஆலயங்கள் சம்மந்தப்பட்டதாக, அதாவது இறைவன் சம்மந்தப்பட்டதாக காணப்படுகின்றன. இந்த வகையிலே இந்தியாவில் இருந்து நமக்குக் கிடைக்கும் கர்நாடக சங்கீதத் தமிழ் உருப்படிகளிலே இந்திய ஆலயங்களும் அவ்வாலயங்களில் எழுந்தருளியுள்ள இறைவன் பற்றியதாகவும் சாகித்தியங்கள் அமைந்துள்ளன. அவ்வாறான பாடல்களையே எமது நாட்டில் கச்சேரிகளிலும் ஆலயக் கச்சேரிகளிலும் நாம் பாடி வருகின்றோம். எனவே எமது நாட்டுக் கவிஞர்களினாலே எமது நாட்டு ஆலயங்களைப் பற்றியும் அவ்வாலயங்களில் உள்ள இறைவனின் புகழைப்பற்றியும் பாடிய ஆயிரக்கணக்கான பாடல்கள் இருந்தபோதிலும் அவற்றை இசை கோர்த்து இசை உலகிற்கு வழங்கும் கைங்கரியத்தை முதல் முதலாக திரு தவநாதன் றொபேட் அவர்கள் ஆரம்பித்துள்ளார். தனது கச்சேரிகளிலும் இவ்வாறான எமது நாட்டுக் கவிஞர்களுடைய சாகித்தியங்களைப் பாடிவரும் திரு தவநாதன் றொபேட் அவர்களின் இந்த முயற்சியானது நம் நாட்டிற்கோர் வரப்பிரசாதம் என்றே கூறலாம்.

தொடர்ந்தும் றொபேட் அவர்கள் இவ்வாறான புதிய ஆக்கச் செயற்பாடுகளில் ஈடுபட்டு அவ்வுருப்படிகளைச் சுர, தாளக் குறிப்புக்களோடு நூல் வடிவில் வெளிக்கொணர்ந்து எமது இசைக்கலைஞர்களுக்கும் மாணவர்களுக்கும் பயன்படும் வகையில் தர வேண்டும் என அன்புடன் கேட்டு இவ்விழா சிறப்புற இறைவன் அருள் வேண்டி அனைவருக்கும் எனது இதய பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சங்கீதவித்துவான் பொன்.ஸ்ரீவாதேவன்**
ஒய்வுநிலை இசையாசிரியர்,
இணுவில், யாழ்ப்பாணம்.

# ஈழத்தின் இசை வரலாற்றின் முக்கிய தடம் பதிக்கின்றது



ஈழத்துத் தமிழிசை செந்நெறி வடிவில் அரங்கேறுவது குறித்து மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். ஈழத்துத் தமிழிசையின் வளரச்சிப் போக்கைப் பின்னோக்கிப் பார்த்தால் ஆறுமுகநாவலர், யோக சுவாமிகள், ஏ.கே.ஏரம்ப மூர்த்தி, ந.வீரமணி ஐயர், சீ.விநாசித்தம்பிப் புலவர் எனப் பட்டியல் நீண்டு செல்கின்றது. இவற்றில் குறிப்பிட்ட சிலரின் படைப்புக்களே சுரப்படுத்தி வெளியிடப்பட்டுள்ளன. இவை களில் பல பாடல்களைத் தெரிந்தெடுத்து இரண்டு வருடங்களுக்கு மேலாக ஸ்வரப்படுத்தி மாணவர்களுக்குக் கற்பித்து அரங்கேற்ற இருக்கும் இந்நிகழ்வு ஈழத்துச் செந்நெறி இசையின் வரலாற்றில் முக்கியம் பெறுகின்றது.

எந்தவொரு படைப்பும் செந்நெறி வடிவம் கொடுத்த பின்பு தான் அது இசையுலகில் நிலைத்தும் அழியாமலும் இருக்கும் தகுதியைப் பெறுகின்றது.

அந்த விதத்தில் இந்நிகழ்வில் இடம்பெறவுள்ள நூறு பாடல்களை இயற்றியிருக்கும் ஈழத்துக் கவிராயர்கள் அனைவரும் போற்றப்பட வேண்டியவர்கள். அத்துடன் இவற்றை இசைக்கவிருக்கும் பத்துப் பாடகர்கள், பல பாடல்களுக்கு இசை வடிவம் கொடுத்த றொபேட் அருட்சேகரன் ஆகியோரை வாழ்த்துகிறேன்.

த.றொபேட் அருட்சேகரன் ஏற்கனவே தனது படைப்புக்களாக பதவர்ணங்கள், பதங்கள், கீர்த்தனைகள், தில்லானாக்கள், ஜதீஸ்வரங்கள், புஸ்பாஞ்சலிகள், நாட்டார் பாடல் கள் இயற்றிப் பல அரங்குகள் ஏறியுள்ளன. இப்படைப்புக்கள் ஸ்வரப்படுத்தலுடன் நூல் வடிவம் பெறவேண்டும்.

குரலோசை - நுண்கலைகளின் தாயகம் எனும் நிறுவனத்தினரின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்நிகழ்வு ஈழத்தின் இசை வரலாற்றின் செந்நெறி வடிவ வளர்ச்சிப் போக்கில் முக்கிய தடம் பதிக்கின்றது.

ஈழத்துக் கவிராயர்களதும் இசையாளர்களதும் படைப்புக்களுக்கு உயிர்ப்புக் கொடுத்த த.றொபேட் அருட்சேகரனின் இசைக் காற்றும் சேவை தொடர வேண்டும் என இறைவனைப் பிரார்த்தித்து இவற்றிற்குச் சிறப்புற உழைத்த அனைவருக்கும் வாழ்த்துக் கூறுவதில் பெருமிதம் அடைகின்றேன்.

**திருமதி கிருபாசக்தி கருணா**
தலைவர், இசைத்துறை,
யாழ். பல்கலைக் கழகம்.

# ஈழத்தமிழர்களுக்கான இசைமரபு வளரட்டும்



தமிழிசை தொடர்பான சிந்தனைகள் நீண்டகால வரலாற்றுப் பாரம்பரியம் கொண்ட ஒரு சிந்தனையாகும். இன்றைய காலகட்டத்தில் தமிழிசைச் சிந்தனைகள் தொடர்பாக அறிஞர்கள் மத்தியில் பலவிதமான கருத்து வேறுபாடுகளைக் காணமுடிகின்றது. தமிழிசை என்பது, செவ்விசை மரபா, நாட்டுப்புற இசையா, பண்ணிசையா என்பன போன்ற விவாதங்கள் இன்றுவரை சர்ச்சைகளை ஏற்படுத்தி வருகின்றது. அதேவேளை ஈழத்தைப் பொறுத்த மட்டில் தமிழிசை என்பது தமிழில் பாடுவது மாத்திரமன்றி மேற் கூறப்பட்ட இசை மரபுகளுடன் பக்தியிசை, சித்தர் பாடல்கள், மெல்லிசை, பொப்பிசை, சடங்கிசை, கூத்திசை மற்றும் எழுச்சிப் பாடல்கள் போன்றவைகளை உள்ளடக்கியதாகவும் நோக்கப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட இசை மரபுகள் பயன்பாட்டின் அடிப்படையில், சமூகங்களிடையே ஏற்றத் தாழ்வுகளையும் ஏற்படுத்துகின்றது. செவ்விசை மரபுகள் உயர்குலத்திற்குரிய அடையாளங்களாகவும் நாட்டுப்புற இசைமரபுகள் தாழ் நிலையிலுள்ள மக்களுக்கானதாகவும் அடையாளப் படுத்தப்படும் அதேவேளை, சமூகவியல் அடிப்படையில் நோக்குகையில் இந்நிலை ஸ்திரமற்ற நிலையினைக் கொண்டிருப்பதனையும் அவதானிக்க முடிகின்றது.

தமிழ்நாட்டு வரலாற்றில் தமிழர்களின் தனித்துவம் என்று பார்க்கின்றபொழுது, அம்மக்கள் பிற மாநிலங்களிலுள்ள மக்களைப் போன்று மொழி, கலை, கலாசார, சமய, இலக்கிய, பாரம்பரிய முறைகளில் தனித்துவப் பண்புகளைக் கொண்டு விளங்குகின்றனர். எனினும், இவை வெவ்வேறு காலப்பகுதிகளில் அரசியல் பொருளாதார காரணிகளினால் மாற்றத்தினையும் ஏற்படுத்தி நிற்கின்றது. இத்தகைய பண்புகள் ஈழத்திலும் செல்வாக்குச் செலுத்தியதை கடந்த கால வரலாறுகள் சான்று பகர்கின்றன. இதன் தொடர்ச்சியாக இசைத் தொடர்பு என்று பார்க்கின்றபோது சங்க இலக்கியத்திற்கு ஈழத்துப் பூந்தேவனார் எனும் புலவர் பாடல்கள் புனைந்துள்ளார் எனும் வரலாற்றுக் குறிப்பும் பக்திக் காலத்தில் ஈழத்துத் திருத்தலங்கள் மீது நாயன்மார்களால் பாடப்பட்ட பாடல்கள், 12 ஆம் நூற்றாண்டில் அருணகிரி நாதரால் ஈழத்துத் திருத்தலங்கள் மீது திருப்புகழ் பாடிய வரலாறுகள், 14 ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் சிலப்பதிகாரத்தைத் தழுவி ஈழத்தில் உருவாகிய கண்ணகி வழக்குரை, வேதநாயக சாஸ்திரியார் 1811 இல் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த காலப்பகுதியில் அவரால் இயற்றப்பட்ட பாடல்கள், 1947 இல் விபுலானந்தரால் இயற்றப்பட்ட யாழ்நூல் மற்றும் இசைப் பணிகள் போன்றவை ஈழத்து இசை மரபுகளின் தோற்றத்திற்கு அடித்தளமாக இருக்கின்ற சில குறிப்புக்களாகும்.

இன்று நாம் செவ்விசை மரபென்று பார்க்கின்ற போது, 15 ஆம் நூற்றாண்டுக்கு முன்னர்வரை தென்னிந்தியாவில் தமிழர்களிடம் தனித்துவமான பல தமிழிசை மரபுகள் பேணப்பட்டு இருந்திருக்கின்றன. குறிப்பாக தஞ்சாவூரினைத் தளமாகக் கொண்டு இராஜராஜ சோழன் காலம் முதல் ஆலயம் சார்ந்து இந்த இசைக்கலை சிறந்த முறையில் பேணப்பட்டு வந்திருப்பதை வரலாறுகள் உணர்த்துகின்றன. பின்னர், 15 ஆம் நூற்றாண்டில் மராட்டியர் காலத்தில் தமிழிசையானது, கர்நாடக இசை என்கின்ற பெயரில் தமிழ்மொழி மறைக்கப்பட்டு தெலுங்கிசையாக மாற்றமடைவதனைக் காணலாம். ஆனால் அவர்களால் பேணப்பட்ட இசை மரபிற்கு அடிப்படையாவிருந்தவை சங்க இலக்கியங்கள் முதல் பேணப்பட்டு வந்த பண்ணிசை மரபு என்பதனை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஈழத்தமிழர் மத்தியில் 18 ஆம் நூற்றாண்டளவில் தமிழிசை தொடர்பான சிந்தனைகள் மேலும் வளர ஆரம்பிக்கின்றது. தென்னிந்தியாவிலும் ஈழத்திலும் 18 ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் தமிழர்களுக்கான அடையாளங்களை உறுதி செய்ய வேண்டிய நிலைமை ஏற்படுகின்றது. அதில், இசை மற்றும் நாடக மரபுகளும் ஒரு அம்சமாக விளங்கின. தமிழ் நாட்டைப் பொறுத்தமட்டில் சமஸ்கிருத, தெலுங்கு மொழிகளுக்கு எதிராகப் போராடி, தமிழின் தொன்மையினை உறுதி செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டதனால் தமிழ்மொழி சார்ந்தும் பாடல்கள் தோன்ற ஆரம்பித்தன. இதற்கு முத்துத்தாண்டவர், மாரிமுத்தாப்பிள்ளை, அருணாசலக்கவிராயர், பாபநாசம் சிவன், தண்டபாணி தேசிகர் என பலர் முன்னோடிகளாக இருந்துள்ளனர். இவர்கள் பாடல்கள், கீர்த்தனை அமைப்பைக் கொண்டதாக விளங்கின. கீர்த்தனைகள் என்பவை இறைவன், அரசன், ஆண்டி, பொதுமகன், பொதுச் சிந்தனைகள் போன்ற கருப்பொருட்களை உள்ளடக்கியதாக விளங்கின. அவை பல்லவி, அனுபல்லவி, சரணம் என்கின்ற அமைப்புடன் இராக, தாள அம்சங்களைக் கொண்டு விளங்கின.

ஆரம்பகாலத்தில், இறைவன் புகழ்பாடுதல்தான் தமிழிசையாக அடையாளப்படுத்தப்பட்ட கீர்த்தனைகளாக விளங்கின. பின்னர் தமிழிசை இயக்கம், திராவிட இயக்கம், தனித்தமிழ் இயக்கம், சுயமரியாதை இயக்கம் என தமிழ்த் தேசிய உணர்வுகள் தோன்றிய பொழுது கீர்த்தனைகளின் கருப்பொருட்களும் மாற ஆரம்பித்தன. பாரதியார், தேவநேய பாவாணர், பாரதிதாசன், கருணாநிதி போன்றோர் தமிழ் உணர்வோடு பாடல்களை வெளிப்படுத்தினர். இதற்குச் சமாந்தரமாக ஈழத்தில் ச.வே.பஞ்சாட்சரம், கா.சி.ஆனந்தன், தில்லைச்சிவன், பண்டிதர் சச்சிதானந்தன், புதுவை இரத்தினதுரை போன்றவர்களின் பாடல்களையும் குறிப்பிட முடியும். ஈழத்தில் கீர்த்தனை மரபுகள் என்பவை, தென்னிந்திய இசைநாடக மரபுகளின் வருகையுடனும் கிறிஸ்தவ மதத்தின் செல்வாக்குக் காரணமாகவும் ஈழத்து அறிஞர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்குச் சென்று நாடு திரும்பிய பின்னர் தமிழிசை வளர்ப்பதற்கான முன்னெடுப்புக்கள் போன்றவை ஈழத்து இசைமரபில் சில மாற்றங்களை உருவாக்கின. அத்தோடு, வடஇலங்கைச் சங்கீத சபை, ஆசிரியர் கலாசாலை, இராமநாதன் நுண்கலைக்கழகம், மட்.விபுலானந்த இசை நடனக் கல்லூரி, கல்வியியற் கல்லூரிகள், மற்றும் பல இசைமன்றங்கள், சபாக்கள் போன்றவைகள் இசையினை வளர்ப்பதற்காக நிறுவன ரீதியாக தொழிற்பட்டு வந்தன.

இத்தகைய வரலாற்றின் பின்னணியில்தான், ஈழத்தில் இன்றைய தலைமுறையினர் தமிழிசை என்பது வெறுமனே இலக்கிய ரீதியிலான ஆய்வுகள் மற்றுமன்று, அது ஆற்றுகை ரீதியாகவும் வளர்த்தெடுக்கப்பட வேண்டும் எனும் நோக்கோடு செயற்பட்டு வருகின்றன.

கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகம் தமிழிசை யினை தனி அரங்க நிகழ்வாக கடந்த காலங்களில் நடாத்தி வந்ததோடு ஆய்வு மாநாடுகள், கலந்துரையாடல்கள் போன்றவற்றினையும் முன்னெடுத்து வந்திருக்கின்றது. அது மட்டு மன்று, 2018 ஆம் ஆண்டு தொடக்கம் தமிழிசைக்கான தனியான பட்டப்படிப்பிற்கான முன்னெடுப்புக்களைச் செய்து வருகின்றது. 2017ஆம் ஆண்டில் கலாநிதிப் பட்டத்திற்காக என்னால், "ஈழத்தமிழர் இசைமரபு" என்னும் தலைப்பிலும், அதுபோன்று செல்வி. சியாமளாங்கி கருணாகரன் அவர்களால், "இசை வடிவங்களின் வளர்ச்சியில் ஈழத்துக் கவி களின் பங்களிப்பு" என்னும் தலைப்பிலும் ஈழத்தமிழர் இசைமரபுகள் ஆய்வு ரீதியாக தற்காலத்தில் வெளிப்படுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இதன் தொடர்ச்சியாக, எனது நண்பரும் இளம் இசை விற்பன்னரும் ஆய்வாளரும் பல்துறை ஆளுமையும் கொண்ட சிரேஷ்ட விரிவுரையாளர் திருவாளர். தவநாதன் றொபேட் அவர்கள் ஈழத்தமிழர்களுக்கான இசை மரபினை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு ஆற்றுகை ரீதியாக வெளிப்படுத்த முனைந்துள்ளார். இன்றைய இசை ஆற்றுகையாளர்கள் தென்னிந்தியாவில் தோற்றம் பெற்ற இசையுருப்படிகளை பாடிக் கொண்டிருக்கின்றனரே தவிர, ஈழத்து இசைமரபுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமை என்பது ஒரு குறையாகவே இருந்து வருகின்றது. இத்தகைய நிலையில் திரு.தவநாதன் றொபேட் அவர்களின் முயற்சி யினால் ஈழத்துப் புலவர்கள் 34 பேரின் பாடல்களைத் தெரிவு செய்து, அதற்கு மெட்டமைத்து, அதனை அவர்களுடைய மாணவர்களுக்குக் கற்பித்து இசைவிழாவாக கொண்டாடவிருப்பது மிகுந்த பாராட்டிற்குரியதாகும். இது மாத்திரமின்றி, இந்நிகழ்வுக்கு பக்க வாத்தியக் கலைஞர் கள் அனைவரும் ஈழத்துக் கலைஞர்களாகவிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

எனவே, ஈழத்தில் இடம்பெறவிருக்கின்ற "தமிழிசை - அரங்கேற்று விழா" எனும் இப்பெருவிழா நிகழ்வானது, எதிர்வருகின்ற காலங்களில் ஈழத்தமிழர்களுக்கான இசை மரபினை வளர்த்தெடுப்பதற்கு பெரும் உறுதுணையாக அமையும். கடந்த காலப் போராட்டங் களால் தமிழர்கள் இழந்தவை உடைமைகள் மாத்திரமன்று, தம்முடைய கலைமரபுகளும் கூடவே! எனவே, இத்தகைய நிகழ்வுகளின் மூலமாக புதிய கீர்த்தனைகளைப் பிரபலமாக்கு தல், கலைஞர்களுடைய ஒன்றிணைவு, ஈழத்தமிழர்களுக்கான இசைச்சிந்தனைகளை வளர்த்தெடுத்தல், ஈழத்து இசைப்புலவர்களின் வரலாறுகளை அறிதல், சமூக ஒன்றிணைவு போன்றவற்றை இந்நிகழ்வு ஏற்படுத்துவதோடு, எதிர்கால தமிழிசை வளர்ச்சிக்கும் இளம் தலைமுறையினருக்கும் ஓர் முன்னுதாரணமாக இருக்கும் என்பதில் எவ்வித ஐயமு மில்லை.

**வாழ்க தமிழன்! வளர்க தமிழிசை!!**
**தொடர்க தங்கள் அரும்பணி!!!**

**கலாநிதி தெட்சணாமூர்த்தி பிரதீபன்**
தலைவர், இசைத்துறை,
சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
கல்லடி, மட்டக்களப்பு.

## தமிழ்க் குரலிசை
# அரங்க விழா வாழ்த்து



"குரலோசை - நுண்கலைகளின் தாயகம்" எனும் நிறுவனத்தினது செந்நெறித் தமிழிசை அரங்கேற்றமானது இலங்கையின் இசை வரலாற்றின் ஒரு திருப்பு முனையாக அமையும். நம்நாட்டின் இசையாளர் பலரின் பங்களிப்புக்கள் கண்டு கொள்ளப்படாமலிருந் தமையை தனது தமிழார்வம் காரணமாக அவதானித்த தவநாதன் றொபேட் அவர்கள் இந்த இசையாளர்களின் பாடல்களுக்கு இசையும் உணர்வும் ஊட்டியுள்ளார். இவரது இசைப் புலமையும் தமிழார்வமும் இலங்கையின் கவிராயர்களது படைப்புகள் மீதான ஈடுபாடும் இளந்தலைமுறையினருக்கு எடுத்துக்காட்டாக அமையும்.

ஒரே அரங்கில் நூறு தமிழிசைப் பாடல்களை இசைப்பதே சாதனை நிகழ்வாக அமையும் அதேவேளை அவற்றில் தொண்ணூறு பாடல்களுக்குத் தானே இசையமைத்து தனது மாணவர்களுக்குப் பயிற்சியளித்து அவர்களுடன் இணைந்து ஆற்றுகை செய்த லென்பது வரலாற்றுப் பெருமுயற்சியாகும். பலவிதமான இசைப்பாக்கள் இசையூட்டம் பெறுவது பரத நடனக்கலை சார்ந்தவர்களுக்கும் பயனளிக்கும். எந்தவொரு இசை உருப்படிக் கும் அதற்குப் பொருத்தமான ஆடல் வடிவமைப்பினைச் சேர்த்து வழங்கும்போது அக்கலை வடிவம் இன்னுமொருபடி உயர்ந்து சமூகத்திற்குச் சிறப்பாகச் சென்று சேரும். இவரால் உருவாக்கி இசைக்கோலம் அமைக்கப்பட்ட பல கீர்த்தனங்களுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நடனத்துறையினர் ஆடல் உருவாக்கம் செய்து அக்கீர்த்தனங்களின் கருப்பொருளின் உள்ளார்ந்த அர்த்தத்தினை பார்வையாளருக்கு சிறப்பாக எடுத்துச் சென்றமைக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா ஆற்றுகைகள் சில சான்றாக அமை கின்றன.

தமிழிசையின் சுவையானது அதனை இசைக்கும் பாடகரின் உச்சரிப்பு, சொற்களின் பொருளுணர்ந்து உரிய அழுத்தத்துடன் பாடுதல், தமிழுக்குரிய ஓசைநயம் துலங்கும் வகை யில் பாடுதல் போன்றவற்றிலும் தங்கியுள்ளது. இவற்றை உள்வாங்கிக்கொண்டு பாடும் கலைஞர்கள் குறைவாக உள்ள சூழலில் இந்த வித்தை கைவரப்பெற்ற றொபேட் அவர்களது முயற்சியின் பலனாக இளம் கலைஞர்களும் தமிழிசையில் ஈர்ப்பும் தேர்ச்சியும் பெற வேண்டும். இரண்டு வருடங்களாக அயராமல் உழைத்து இந்நிகழ்வைத் தயாரித்த றொபேட் அவர்களின் எண்ணம் உயர்வானது. ஆயினும் இந்நிகழ்வின் வெற்றியானது இதனைப் பின்தொடரும் நிகழ்வுகளாலேயே அறியப்படும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இசைத்துறையில் கர்நாடக சங்கீத முதுநிலை விரிவுரை யாளராக கடமையாற்றும் றொபேட் அவர்கள் தனது குரலோசை கலைமன்றத்தின் வழியாக தமிழிசைக்குத் தன்னை அர்ப்பணிப்பதுபோல இரட்டிப்பான அளவு அர்ப்பணிப்புடன் தான் பணிபுரியும் இசைத்துறையின் மாணவர்களை ஒருங்கிணைத்து இசைத்துறைக் கலைத்

திட்டத்திற்கு மேலதிகமாக இசையரங்கப் பயிற்சிகளை வழங்கி பாரிய கர்நாடக இசை அரங்க நிகழ்வொன்றை தயாரித்தளிப்பதன் மூலம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இசைத்துறை வரலாற்றிலும் பாரிய திருப்புமுனைகளை ஏற்படுத்துவதே அவரது முதற்கடமையாகும்.

இலங்கையில் தமிழிசையின் வரலாற்றுத் தேவைகளையும் தமிழின் சிறப்பியல்பு களையும் மனங்கொண்டு சுவையான சரியான இசைமணம் பரப்ப வேண்டிய வரலாற்றுப் பொறுப்பு றொபேட் அவர்களுக்கும் அவரது மாணவர்களுக்கும் உண்டு. இவர்கள் தமது கடமையைச் செவ்வனே செய்யவும் இசைவிழா சிறக்கவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நடனத்துறை விரிவுரையாளர்கள் மாணவர்கள் உத்தியோகத்தர்கள் அனைவரினதும் சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**செல்வி மைதிலி அருளையா**
நடனத்துறைத் தலைவர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# “தே மதுரத் தமிழோசை உலகெங்கும் பரவ நல்வழி செய்வோம்...



தமிழுண்டு தமிழ் மக்களுக்கு நாளும் தமிழ் செய்வோம். இதுவே நல்ல தொண்டு என்னும் புரட்சிக் கவிஞன் பாரதிதாசனின் வரி களுக்கு அமைய தமிழ் கூறும் நல் உலகில் வாழ்ந்த தமிழ்ப் பாவலர் களின் கவிதை ஊற்றுக்களை ஒன்றெனத் திரட்டி ஈழத்தின் தமிழிசை அரங்கேற்றுப் பெருவிழா காண்பதையிட்டு மனம் அளவில்லா ஆனந்தம் கொள்கிறது.

தமிழரின் வாழ்வே கலை மிகுந்த கவிநய அழகுறு வாழ்வாகும். அதிலும் ஈழத்துத் தமிழிசை என்றால் தனித்துவம்மிக்க தன்மானத் தமிழர்களின் நிலம், மொழி, உழவு, உணவு, உடை, அறிவியல், மருத்துவம், நுண்கலைகள், இலக்கியம், அணிகலன்கள், தமிழர் அளவியல் வானசாஸ்திரம் அர்த்த சாஸ்திரம் எனப் பல்வேறுபட்ட இறைஅம்சங்கள் ஒழுகும் அற்புதக் கலைகளுக்கு சொந்தக்காரர்களாக விளங்குகின்ற தனித்துவத்தை உலகறியச் செய்கின்ற புதிய முயற்சியாக ஈழத்துத் தமிழிசை அரங்கேற்று விழா இனிதே நடந்தேறி பெரும் வெற்றி காண கலைத்தாய் அருளோடு மனம் நிறைந்து வாயார வாழ்த்து கிறேன்.

**கலாநிதி ஷர்மிளா ரஞ்சித்குமார்**
முன்னாள் தலைவர்,
நடன, நாடகத்துறை
சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்
கிழக்குப் பல்கலைக்கழகம்.

# அனைவரும் பேராதரவு வழங்குவோம்



ஈழத்தின் பல அருளாளர்கள், கவிராயர்கள், இசையாளர்களால் எண்ணற்ற தமிழிசைப் பாடல்கள் இயற்றப்பட்டுள்ளன. ஆறுமுக நாவலர் பல கீர்த்தனைகளை இயற்றியுள்ளார். இவருக்கு முற்பட்ட காலத்திலிருந்து தமிழிசைப் பாடல்கள் இயற்றப்பட்டுள்ளதாகக் கூறப் படுகின்றது. அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவர், இயலிசைவாரிதி ந.வீரமணி ஐயர் போன்றவர்களால் தமிழிசைப் பாடல்கள் இயற்றப் பட்டுள்ளன. அவற்றுள் பல பாடல்கள் இசைக் கலைஞர்களால் இசைக் கச்சேரிகளில் பாடியதை நாம் கேட்டிருக்கின்றோம். சில நடன நிகழ்வு களில் ஈழத்துப் பாடல்களுக்கு அபிநயம் செய்தமையையும் நாம் பார்த்திருக்கின்றோம்.

ஈழத்தின் தமிழிசைப் பாடல்கள் நூல் வடிவில் ஆவணமாக இருப்பது மிக அரிதாகவே காணப்படுகின்றது. நூல் வடிவிலிருக்கின்ற சில பாடலாசிரியர்களின் பாடல்கள் ஸ்வர சாகித்திய அமைப்போடு இல்லாதமை பெருங்குறையாகவே காணப்படுகின்றது. அந்த வகையில் ஈழத்துப் பாடல்களை ஸ்வர சாகித்திய அமைப்போடு ஆவனப்படுத்துவதென்பது காலத்தின் தேவையென்பதோடு அது வரலாற்றுக் கடமையுமாகும்.

காலத்தின் தேவையறிந்து குரலோசை - நுண்கலைகளின் தாயகம் கலை நிறுவனம் 30 இற்கும் மேற்பட்ட ஈழத்துக் கவிராயர்களின் தானவர்ணம், பதவர்ணம், சௌக்ககால க்ருதி, கீர்த்தனை, பதம், தில்லானா, இறைதுதிப்பாடல்கள், காவடிச்சிந்து போன்ற 100 பாடல் களை தொகுத்து அரங்கேற்றுவது சிறந்த வரலாற்றுப்பதிவாக அமைகின்றது. இது தமிழிசை வரலாற்றில் பொன்னாளாகும்.

தற்காலத்தில் இசைக்கச்சேரிகளில் ஈழத்தின் தமிழிசைப் பாடல்களுக்கு உயிர் கொடுத்துப் பாடுவதில் யாழ் பல்கலைக்கழக சிரேஸ்ட இசை விரிவுரையாளரும் "குரலோசை - நுண்களைகளின் தாயகம்" கலை நிறுவன இயக்குனருமாகிய திரு.த. றொபேட் அவர்களும் அவரது மாணவர்களும் முன்னிற்பதோடு ஈழத்துக் கவிராயர்களின் பாடல்களை ஆவணப் படுத்தும் நோக்கில் "ஈழத்தின் தமிழிசை" அரங்கேற்ற நிகழ்வினை நடாத்தவுள்ளமை பாராட்டதக்க விடயமாகும். இந்நிகழ்விற்கு மூத்த இசை, நடனக் கலைஞர்கள் பேராதரவு வழங்க வேண்டும் என்பது எனது பெருவிருப்பமாகும். இசை, நடன இளங்கலைஞர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆற்றுகை நிகழ்வைக் கேட்டுப் பயன்பெற வேண்டும் என்பதும் எனது பெருவிருப்பமாகும்.

"ஈழத்தின் தமிழிசை" ஆற்றுகை நிகழ்வு சிறப்புற நடைபெறத் துண்டிப் பிள்ளையாரின் ஆசி வேண்டி வணங்கி நிகழ்வுகளை ஒழுங்கமைக்கும் அனைவரையும் பாராட்டி வாழ்த்துக் களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**"வாழ்க வளர்க தமிழிசை"**

திரு.சி.சிவசிவா
உதவிக் கல்விப் பணிப்பாளர்,
அழகியல்.
மாகாணக் கல்வித் திணைக்களம்,
வடக்கு மாகாணம்.

# கவியரசர்களின் வரிவடிவங்கள் இசைவடிவங்கள் ஆகின்றன



தமிழ் எங்கள் உயிர் என்று வாழ்ந்த, வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஈழத்துக் கவியரசர்களின் அற்புதக் கலைவடிவங்களை அழகுற அசைபோட ஆவணமாக்குகின்ற இந்த இனிய பொன்னாளை வாழ்த்தி வரவேற்பதில் பெருமகிழ்வடைகின்றேன். இசைக்கு இசை யாதோர் இவ்வுலகில் யாருளர். அந்த இசையே தமிழோடிசைந்த தாகும் போது அதனால் பெறும் ஆனந்தமே தனி. இத்தகையதொரு தமிழிசையானது ஈழத்தின் காத்திரமான படைப்பாளிகளின் பாடல் களைத் தாங்கி வரும் ஈழத்தின் தமிழிசை என்னும் ஆற்றுகை நிகழ்வாக அரங்கேறுகின்றமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். அந்த வகையில் இந்தக் கால கட்டத்தில் உணரப்படும் தேவையாக வருங்காலச் சந்ததியை வழிநடத்தும் பொறுப்பும் எமது அடையாளமாக விளங்கும் கலை பண்பாட்டு ஆவணங்களை பேணிப் பாதுகாக்கும் பொறுப்பும் ஈழத் தமிழர்கள் ஒவ்வொருவரதும் தலையாய கடமையாக விளங்குகின்றது. இக் கடமையை நிறைவேற்றும் வகையில் அரும் பெரும் செயற்பாடாக இங்கு அரங்கேறுகின்றது "ஈழத்தின் தமிழிசை" ஆவண வரலாற்று நிகழ்வு. இவ்வரிய கைங்கரியத்தை நெறிப்படுத்தும் அற்புதக் கலைஞர் திருவாளர் தவநாதன் றொபேட் அவர்களையும் அவருடன் இணைந்த கலைஞர்களையும் ஈழத்தமிழர் சார்பில் நன்றி கலந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமையடைகின்றேன்.

இந்த அரங்கேற்று நிகழ்வானது குரலோசை - நுண்கலைகளின் தாயகம் என்னும் கலை நிறுவனத்தின் ஊடான படைப்பாகும். இந்தக் கலை நிறுவனத்தின் இயக்குநரும் பல்துறைக் கலைஞருமான தவநாதன் றொபேட் பற்றி இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டேயாக வேண்டும்.

இவர் ஒரு இசைத்துறை முதுநிலை விரிவுரையாளர். உலகறிந்த இசைக்கலைஞர். இசை வாக்கேயக்காரர். பல இசை, நடன, மிருதங்க அரங்கேற்றங்களை அலங்கரிப்பவர் என்பவற்றுக்கெல்லாம் அப்பால் ஒரு கலைஞன் இறைவனால் படைக்கப்படுகின்றான் என்பதற்கு உதாரணமானவர். இசைஞானம், சுரஞானம், சுருதி ஞானம், லயஞானம் , கருவி ஞானம் புத்தாக்கம், புனைவாக்கம் போன்ற அனைத்து அம்சங்களையும் தன்னகத்தே கொண்ட "ஞானஸ்தன்" என்னும் சொல்லுக்கு இலக்கணமானவர். அதுமட்டுமல்லாமல் நல்லதொரு மாணவ சமுதாயத்தைச் செதுக்கிக் கொண்டிருக்கும் இளம் சிற்பி இவர்.

இவருடைய அரும் பணியால் எமது ஈழத்துக் கவியரசர்களின் வரிவடிவங்கள் இசைவடிவங்கள் ஆகின்றன. இந்த நிகழ்வு சாதனைக்குரிய நிகழ்வாக அமைய வேண்டும். இதன் பயணம் மேலும் மேலும் தொடர்ந்து ஈழத்தமிழர் வரலாற்றை உலகெங்கும் பறை சாற்ற வேண்டும். இவை பாடசாலை, பல்கலைக் கழக இசை நிறுவனங்களின் இசை, நடன பாடக் கலைத் திட்டங்களில் சேர்க்கப்பட வேண்டும் என அனைவர் சார்பிலும் கேட்டு, நிகழ்வு இனிதே சிறப்புற இறைவன் ஆசி வேண்டி மனம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஸ்ரீதேவி கண்ணதாசன்**
ஆசிரிய ஆலோசகர், (நடனம்)
வடமாகாணக் கல்வித் திணைக்களம்,
வட மாகாணம்.

# ஈழத்தின் கலை அடையாளங்கள் வெளிவரவேண்டும்



"உன்னை நான் ஒரு முறை பாடுவேன் கேள் பரம் பொருளே" எனப் பாடிய மாணிக்கவாசகர் பின்பு பல பாடல்களைப் பாமாலையாகத் தொடுத்துச் சென்ற காட்சி என் கண்முன்னே நினைவுக்கு வருகின்றது. இன்று காலத்தின் தேவையறிந்து இக்காலச் சமூக நிதர்சனங்களைத் தொகுத்து நூறு பாடல்களைப் பாடி, பாட வைத்து தயார் செய்து அதனைப் பல நூற்றுக் கணக்கான இரசிகர் சபையில் கலை காலத்தின் கண்ணாடி என்று காண்பிக்கும் முயற்சியில் சமூகத்தின் காலத் தேவையறிந்து செயற்படும் தவநாதன் றொபேட் அவர்களுக்கும் அவரது ஒன்பது மாணவப் பாடகர்களுக்கும் அதற்குப் பக்க வாத்தியம் வழங்கிச் சிறப்பிக்க இருக்கும் பக்க வாத்தியக் கலைஞர்களுக்கும் இப்பாடல்களை எழுத்தாக்கம் செய்த எமது ஈழத்துக் கலைஞர்களுக்கும் இதனுள் தொண்ணூறுக்கும் மேற்பட்ட பாடல்களைத் தனது இறையருள் கொடையினால் இசையைத் தன்வசப்படுத்தியுள்ள எனது அருமைத் தம்பி றொபேட்டுக்கும் எனது உளமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவிப்பதில் புளகாங்கிதம் அடைகின்றேன்.

எமது ஈழத்தின் அடையாளங்களை வெளிக் கொணர்வதின் பெருமை எம்மைப் போன்ற வெளிநாட்டில் வாழும் தமிழர்களுக்கு சிறந்த அடையாளத்தை வழங்கும் என நான் கருதுகின்றேன்.

**வாழ்க உங்கள் பணி வளர்க உங்கள் புகழ்**

நுண்கலைமானி,
**மோகனா பாலசுப்பிரமணியம்,**
இயக்குநர், நடனாலயா நடனப் பள்ளி,
கொலராடோ, அமெரிக்கா

# எதிர்காலத்தில் இசையாளர்களுக்கும் இசையாராய்ச்சியாளர்களுக்கும் பேருதவியாக இருக்கும்



ஈழத்தின் தமிழிசை அரங்கேற்று விழாவிற்கு வாழ்த்துரை வழங்குவதில் பேருவகை அடைகிறேன். ஈழத்திருநாடு நீண்டகால இசை வரலாறு கொண்டது இலங்கை வேந்தன் இராவணன் சாமகானம் பாடி சிவபெருமானை மகிழ்வித்தான் என்பது புராண வரலாறு. யாழ் வாசித்துப் பாடும் இசை மரபில் வந்த பாணன் ஒருவன் பாடிப் பரிசாகப் பெற்ற ஊரே யாழ்ப்பாணம் என்பர். இத்தகைய சிறப்பு மிக்கவர்கள் ஈழத்தவர்கள் என்பது பெருமைக்குரிய விடயம்.

எம்மவர்கள் தங்களது ஆக்கங்களை ஆவணப்படுத்தாததால் எத்தனையோ நல்ல பாடல்கள் காணாமல் போயின. இசைமுதுதத்துவமாணி தவநாதன் றொபேட் அவர்கள் ஈழத்துக் கவிராயர்களாலும் இசையாளர்களாலும் இயற்றப்பட்ட பாடல்களைத் தெரிவுசெய்து இரண்டு ஆண்டுகள் தனது மாணவர்களுக்குப் பயிற்சியளித்து நூறு பாடல்களை, தானும் மாணவர்களும் குரலோசை நுண்கலைகளின் தாயகம் என்னும் கலை நிறுவனத்தின் ஊடாக ஆற்றுகைப்படுத்தி ஆவணப்படுத்தும் நன்முயற்சி போற்றுதற்குரியது.

இவற்றுள் தொண்ணூறுக்கும் அதிகமான பாடல்களுக்கு அவரே இசையமைத்துள்ளமையும் பாராட்டுக்குரியது. ஈழத்துக் கவிஞர்களுக்குப் பெருமை சேர்க்கும் விதமாக முப்பதிற்கும் அதிகமான கவிராயர்களின் பாடல்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. இவற்றுள் தானவர்ணங்கள், பதவர்ணங்கள், கீர்த்தனைகள் பதங்கள் சௌக்ககாலக் கிருதிகள், துதிப் பாடல்கள், காவடிச்சிந்துகள், தில்லானாக்கள், திருப்புகழ் போன்ற இசைப்பாடல்கள் ஆற்றுகைப்படுத்தப்படவுள்ளன.

இம்முயற்சி எதிர்காலத்தில் இசையாராய்ச்சியாளர்களுக்கும் பேருதவியாக இருக்கும். திரு றொபேட் அவர்களுக்கும் பங்குபற்றும் அனைத்துக் கலைஞர்களுக்கும் சகல வழிகளிலும் இந்நிகழ்ச்சிக்கு உதவிய அன்பர்களுக்கும் நல்வாழ்த்துக்கள். இந்நிகழ்ச்சி சிறப்புற எல்லாம் வல்ல தில்லைக் கூத்தனையும் சிவகாமி அம்மையையும் வணங்கி நிற்கின்றேன்.

நாட்டியக் கலைமணி, இயக்குநர்,
**மு.அருள்மோகன்**
ஆடற் கலையகம்,
பாரிஸ்.

## இசை கற்பித்தலில்

# ஈழத்தின் தமிழிசை இடம் பிடிக்க வேண்டும்



பல நூற்றாண்டுகளாக ஈழத்தவர் கலைகளில் நாட்டம் கொண்டவர்களாக விளங்கி வருகின்றனர். அந்த வகையில் பல விதமான இசை நிகழ்வுகள் ஈழத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் நடந்து வருகின்றன. ஆனால் இப்படியானதொரு நிகழ்வு நடைபெறுவது இதுவே முதல் தடவையாகும். எனவே இந்நிகழ்வைத் தனது மனதில் பல ஆண்டுகளாகச் சுமந்து இப்போது நிகழ்த்த முற்பட்டிருக்கும் றொபேட் அண்ணாவை மனதாரப் பாராட்டுகின்றேன்.

இந்த வரலாற்று நிகழ்வானது முறையாக ஆவணப்படுத்தப்பட்டு எதிர்கால சந்ததியினரிடம் கையளிக்கப்பட வேண்டும் என்பதே அனைவரின் விருப்பமாகும். முக்கிய மாக ஈழத்தின் தமிழிசையானது இலங்கைத் தமிழ்ப் பாடசாலைகளில் கற்பிக்கப்பட வேண்டும்.

ஈழத்தில் தொடக்கப்பட்டிருக்கும் இந்த முயற்சி பெரு வெற்றி பெற வேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். ஈழத்தின் தமிழிசையை ஐரோப்பிய நாடுகளில் வளர்ப்பதற்கான முயற்சிகளை எதிர்காலத்தில் லயமதுரம் மேற்கொள்ளும் என்பதையும் இங்கு மகிழ்வுடன் குறிப்பிட விரும்புகின்றேன். இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்கும் அனைத்துக் கலைஞர்களுக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எமது லய மதுரத்தின் ஆலோசகரான றொபேட் அண்ணாவிற்கு என் குடும்பத்தாரின் சார்பிலும் லயமதுர மாணவர்கள் சார்பிலும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

*தண்ணுமை வித்தகர்*
**பிலிப் அன்றா,**
லயமதுரம், பிரான்ஸ்.

# நாட்டுப் பற்றோடு முகிழ்த்த பாட்டுப் பற்று



எங்கள் சேத்தின் மணம் கமழுமாறு எங்கள் கலைகள் யாவும் ஆற்றுகைப்படுத்தப்பட வேண்டும் என்ற சிந்தனையின் ஒரு பகுதி யாகவே இந்த அரங்கேற்றம் நிகழ்கிறது. ஈழத்தில், மூலையெங்கும் நிமிர்ந்து நிற்கின்ற ஆலயங்கள் மீதான பாடல்கள் ஆயிரம் ஆயிரம். அவற்றைப் பாடுகின்றபோது ஏற்படுகின்ற உணர்வை இங்கு எவரா லும் எழுதிவிட முடியாது. உணர மட்டுமே முடியும். "ஈழத்தின் தமிழிசை" என்னும் தேடலும் அவற்றை இசையுடன் பிசைந்து நுகர்ந்த போது ஏற்பட்ட பரவச நிலையும் எல்லையற்ற ஆன்மீக உணர்வின் உச்சத்தைக் கடந்து நிற்கிறது.

குறிப்பாகத் தவத்திரு யோக சுவாமிகளின் பாடல்களுக்கு இணை இந்த உலகில் இல்லை. அவர் கண்ட ஆன்மீக ஞானத்தை அவரது பாடல்களில் நாம் தரிசிக்க முடியும். இசையோடு அவரது பாடல்கள் இசைக்கின்ற போது எம்முள் அவர் குடிகொண்டுவிட்டார், ஆட்கொண்டுவிட்டார் போன்ற பிரமை ஏற்படுகிறது. உலகம் மறந்து போகிறது. இறை வனைப் போற்றுவதற்கு மட்டுமே உரிய கலை இசை என்ற இலக்கணத்தை யோக சுவாமி களின் பாடல்களைப் பாடுகின்ற போது, பாடுபவராலும் கேட்பவராலும் உணர முடியும். எமது மொழி வழக்கு, பண்பாடு போன்ற கூறுகளும் அவரது பாடல்களில் பொதிந்து கிடக்கின்றமை மேலும் அவரது பாடல்களை இசைக்கத் தூண்டுகிறது. ஏனைய கவிராயர்களின் பாடல்களும் எமது தனித்துவங்களை அழகாக வெளிப்படுத்தி நிற்கின்றன.

எங்களது பாடல்களை நாங்களே பாடவில்லை என்றால் இந்த உலகில் எவர் பாடப் போகின்றனர். தமிழ் மொழியையும் தமிழிசையையும் தமிழர்கள் போற்றவில்லை என்றால் எவர் தான் போற்றுவர், காப்பாற்றுவர். ஈழத்தின் செந்நெறி இசை என்பது எமது மயப்பட்டதாக ஆக்கப்பட வேண்டியதும் மாற்றப்பட வேண்டியதும் காலத்தின் கடமை. எமக்கென்றோர் இசைமரபைப் பேணுவத்குரிய வளங்கள் அனைத்தும் எம்மிடம் உள்ளன. இதை ஒவ்வொரு இசைக்கலைஞரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த இசைப் பயணம் மிகவும் நீண்டது. ஆழமான பல எண்ணங்களை அடித்தள மாகக் கொண்டது. இதன் வரலாறு தனியாக எழுதப்பட வேண்டியது. ஏனெனில் ஒவ்வொரு பாடலுக்கும் ஒரு வரலாறு இருக்கின்றது. அதைத் தேடிய விதம், அது கிடைத்த விதம், தெரிந்து கொண்ட காரணம், பொருத்தமான பண்கொண்டு இசையூட்டிய விதம், இசை அழகு பெறும் போது ஏற்பட்ட ஆனந்தம், இசைக் குறிப்புக்களை எழுதிய காலம், எழுதும் போது இருந்த புறச்

சூழல், கற்பித்தலில் கண்ட அனுபவங்கள், கற்றுக் கொண்டோர் வெளிப்படுத்திய உணர்வு கள், அவர்கள் தமை மறந்து இசைக்கும் போது ஏற்பட்ட மன நிறைவு, வசதிகள், வசதியின் மைகள், குழப்பங்கள், குழிபறிப்புக்கள், துரோகங்கள், என ஒவ்வொரு பாடலும் பலவிதமான எண்ணக் கோலங்களைக் கொண்டுள்ளது. அவை சுவை பொருந்தியவை.

எங்கள் தாய் நிலத்துக் கவிராயர்களின் பாடல்களை ஒன்று திரட்டி இசையூட்டிப் பாடும் இந்த நிகழ்வு "ஈழத்தின் தமிழிசை" என்னும் கருத்தியலின் தொடக்கப் புள்ளி ஆகும். இந்த எண்ணத்தை ஈழத்தின் அனைத்துக் கலைஞர்களும் உண்மையான மனதோடு ஏற்றுக் கொண்டு எங்கள் தமிழிசைக்காக ஓரணியில் திரள வேண்டும். ஈழத்தின் தமிழிசைப் பாடல் களைத் தனது இசையரங்கில் சேர்த்துக் கொள்ளும் மனப் பக்குவம் ஒவ்வொரு ஈழத்து இசையாளனுக்கும் வரவேண்டும். அப்போது தான் அந்தக் கலைஞனால் முழுமை பெற முடியும்.

எங்கள் கண் முன்னே காட்சி தருகின்ற ஆலயங்களையும் அங்கு எழுந்தருளி இருக்கின்ற தெய்வங்களையும் பற்றி எமது முன்னோர்கள் உளம் கனிந்து உருகிப் பாடிய பாடல்களை மனம் கொண்டு இசைத்து ஈழத்தின் தமிழிசையை உலகறியச் செய்வோம்.

உலகின் முதலிசை, தமிழிசை, உயரிசை, எங்கள் உயிரிசை என்னும் எனது குருநாதர் தண்ணுமை வேந்தன் மா.சிதம்பரநாதன் அவர்களின் பொன்னான வரிகளை ஈழத்துக் கலைஞர்கள் அனைவரும் மந்திர உச்சாடனம் செய்வோம்.

**த.றொபேட்**
(வசாவிளான் தவமைந்தன்)
இயக்குநர்,
குரலோசை - நுண்கலைகளின் தாயகம்
யாழ்ப்பாணம்.

# தமிழிசை கற்ற மாணவர்களின் கருத்துக்கள்



ஈழத்துக் கவிஞர்களின் நூறு பாடல்களைத் தனது மாணவர்களுக்குக் கள்ளங்கபடமற்ற உள்ளத்தோடும் செம்மையாகவும் சிறப்பாகவும் கற்பித்து தனது மாணவர்களின் அபரிமிதமான வளர்ச்சியில் அளவு கடந்த அக்கறை காட்டும் அர்ப்பணிப்பு மிகுந்த எம் குருநாதருக்கு மனம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

சங்கப் புலவர் பூதந்தேவனார் தொடக்கம் வசாவிளான் தவமைந்தன் வரையான பாடல்கள் ஈழத்தின் தமிழிசையாக இன்று அரங்கேறு கின்றமை ஈழத்தில் ஓர் வரலாற்றுச் சாதனை ஆகும். தமது இசை அரங்குகளில் பிரதான உருப்படிக்குப் பின்னரே ஈழத்துப் பாடல்களை ஒரு சில மிடற்றிசை யாளர்கள் மட்டுமே நீண்டகாலமாகப் பாடி வருகின்ற நிலையில் முழு இசையரங்கையும் ஈழத்தின் படைப்புக்களை வைத்து வெற்றிகரமாக நிகழ்த்தும் வளத்தை எதிர்காலத்தில் இந்த அரங்கேற்று நிகழ்வு தந்திருக்கின்றமை போற்றுதற்குரிய தாகும். ஈழத்தின் தமிழிசைப் பாடல் களைத் தனது இசையரங்கில் சேர்த்துக்கொள்ளும் பாடகன் ஒருவனே உண்மையான ஈழத் தமிழனாகவும் முழுமைபெற்ற கலைஞனாகவும் இருப்பான். எம் குரு தவமைந்தன் அவர் களின் பாதங்களைப் பணிந்து அரங்கேற்று விழா சிறப்புற இறைவனை வேண்டுகின்றேன்.

*நுண்கலைமாணி* **திரு. கந்தசாமி றஜீவன்**

---



இந்த நிகழ்வானது முற்றிலும் ஈழத்துப் படைப்பாளிகளின் பாடல் களைக் கொண்டமைந்திருக்கின்றது. தமிழிசையின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றும் என்பதில் ஐயமில்லை. எமது குருநாதரின் எண்ணத்தில் தோன்றிய தமிழிசையின் தாகம் எங்கள் ஊடாகக் கடத் தப்படும். இது நிச்சயம். இந்தச் செயற்பாடு எமது மனங்களில் உண்மையில் ஆனந்தத்தை உண்டாக்கியிருக்கின்றது. ஏனெனில் கச்சேரிகளில் பாடுவதற்கு ஏற்ப முப்பதிற்கும் மேற்பட்ட பாடலாசிரியர் களின் உருப்படிகள் பலவிதமான இராகங்களில் கனமான சங்கதி களுடன் காணப்படுகின்றன.

*முதுகலைமாணி* **திரு. முருகையா துஸ்யந்தன்**

---



இந்த இரண்டு ஆண்டு கால இசைப்பயணத்தைச் சாதாரணமானதாக நாம் எடுத்துக் கொள்ள இயலாது. எமது நாட்டில் பல பிரதேசங்களில், பல மாவட்டங்களில் பல புலவர்கள், வாக்கேயகாரர்கள், பண்டிதர்கள் வாழ்ந்ததுடன் அவர்கள் பல பாடல்கள், இசையுருக்கள், கவிதைகளை ஒருங்கிணைத்து நூல்களாகத் தந்துள்ளனர். இவற்றுள் பெரும் பாலானவற்றை எமது முன்னோர்கள் தனித்து எழுத்துருவிலும், கவிதைத் தொகுப்புக்களாகவுமே பாதுகாத்து வருகின்றனர். பல கீர்த்த னைகளுக்கு இசைவடிவங்கள், ஸ்வரக்குறியீடுகள் இல்லாது காணப் படுவதுடன் அவை தனித்து நூல்களிலே மட்டுமே காணப்படுகின்றது.

சில பாடல்கள் பலராலும் பல மெட்டுக்களில் பாடுவதனால் அவை மக்கள் மத்தியில் சென்றடைவதில் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. எனவே அதற்கான ஒரு முறையான உருவத்தையும், அழகையும் அதாவது தெளிவான பாடாந்தரத்தைக் கொடுத்து வெளிப்படுத்தும் அளப்பரிய பணியே இந்த அரங்கேற்ற நிகழ்வாகும். இந்த நிகழ்வு வெற்றிபெறும். எனவே இப்பயணம் இத்துடன் நிறைவுறாது தொடர்ந்தும் பல நிகழ்வுகளை நடாத்தி எமது மண்ணின் இசையுருவகைகளை மக்கள் மத்தியில் கொண்டு செல்ல வழி செய்ய வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக் கொள்கின்றேன்.

*முதுதத்துவமாணி* **செல்வி . ஸ்ரீஸ்கந்தராஜா மதுராங்கி**

---



என் இனிய தமிழ்மொழித் தாயே. உன்னைத் தேனிலும் இனிய தமிழிசையால் நாவாரப் பாடுவது, ஈழத்தமிழன் என்ற பெருமையையும் மிகுந்த மனமகிழ்வையும் தருகின்றது. தமிழிசையில் ஆறாக் காதல் கொண்ட என் குருநாதர் தவமைந்தன் அவர்களின் தமிழிசையை வளர்க்கும் பணியில் அவர்களுடைய மாணவர்கள் நாங்களும் இணைந்து இவ்விழாவை ஓர் வரலாற்றுச் சரித்திரமான தமிழிசை விழாவாக கொண்டாடுவது மட்டுமல்லாமல் இதனை அடுத்த சந்ததியினருக்கும் எடுத்துச் செல்வது எமது தலையாய கடமையாகும்.

தமிழிசையே நீ வாழ்க

*நுண்கலைமாணி* **திரு. அழகேசன் அமிர்தசிந்துஜன்**

---



தமிழ்மொழியை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழிசை நிகழ்வானது இசையினூடாக தமிழ்மொழியின் பெருமையை எடுத்துக்காட்டுவதாகவும் தமிழ்மொழியினூடாக இசையின் பெருமையை வெளிக்கொணர்வதாகவும் அமைகிறது. இசைக்களுக்கெல்லாம் ஆதிமூலமான தமிழர் இசை தற்காலத்தில் நலிவுற்று காணப்படுவதால் இத்தமிழர் இசை நிகழ்வானது தமிழிசை மீளெழுச்சிக்கு ஏதுவாக அமையும். ஈழத்து முன்னோர்களால் எழுதப்பட்ட எண்ணற்ற பாடல்கள் மெட்டமைப்புகள் இன்றியும் இசை வடிவமாக்கப்படாமலும் பயனற்று காணப்படுகிறது. அத்தகைய பாடல்களுக்கு புத்துணர்வு அளிப்பதாக இந்நிகழ்வு அமையும். குறுகிய கால எல்லைக்குள் நூறு பாடல்களை தெரிவு செய்தல், கற்றல், கற்பித்தல் என்பது இலகுவான விடயமல்ல. இருப்பினும் இலகுவான முறையிலும் பயனுள்ள வகையிலும் இசை பயிற்சிகளை வழங்கி அநேகமான பாடல்களுக்கு இசையமைப்பு செய்து கற்பித்த இசைஆசான் தவநாதன் றொபேட் அவர்களை வணங்கி மகிழ்கிறேன். அத்துடன் தமிழிசை நிகழ்வினை முன்னெடுத்து அதற்கான சிறந்த கட்டமைப்பை வழங்கி நம் எல்லோரும் பயனுறவேண்டும் எனும் தூரநோக்குடன் அர்ப்பணிப்புடன் செயலாற்றும் ஆசானின் சிந்தனை செயலுற எல்லாம்வல்ல விநாயகனின் தாழ் பற்றி தொழுகிறேன்.

“கலையின்பமே நிலையின்பம்”

*நுண்கலைமாணி* **செல்வி சிவநாதன் மதுஜா**



இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழின் நடுவே இயற்றமிழ்ப் பண்ணோடு புணர்ந்து தாளத்தோடு இணைந்து இசைத்தமிழாக மாறிய ஈழத்துத் தமிழிசையினை மீட்டெடுக்கவும் மீளுருவாக்கவும் முன்னெடுக்கப்பட்ட முயற்சியிலே தமிழிசையின் தீவிர பக்தனாக இருக்கும் எம் குரு தவமைந்தன் அவர்களால் இசை உருவாக்கம் செய்யப்பட்டு எம்மைப் போன்ற வளர்ந்து வரும் இளம் மாணவர் களுக்கு வாய்ப்பளித்து தந்த ஆசானுக்கு முதற்கண் குரு வணக்கத் தினை மனதாரக் குருவின் பாதங்களுக்குச் சமர்ப்பிக்கின்றேன். இந்த இசை நிகழ்வானது பூரண வெற்றி காண இறைவனை வேண்டிக் கொள்கின்றேன். உலகம் உள்ளவரை எம் தமிழிசையும் வாழும்.

என்றும் வாழ்க எங்கள் தமிழிசை

**நுண்கலைமாணி செல்வி நடராஜா சங்கீதவாணி**

---




இன்றைய காலகட்டத்திலே எமது கர்நாடக இசைக்கென ஒரு முக்கிய இடமுண்டு. எமது நாட்டிலே தமிழர் செறிந்து வாழும் எல்லா இடங்க ளிலுமே கச்சேரிகள் இடம்பெற்று வருகின்றன. அந்த வகையிலே மேடையேற்றப்படுகின்ற கச்சேரிகளிலே தமிழிசைக்கு என ஒரு தனித்துவத்தை என்றும் அதனை நிலை பெறச் செய்ய வேண்டும் என்பதே இந்த 100 தமிழிசைப் பாடல்கள் அடங்கிய நிகழ்வின் முக்கிய அம்சமாகத் திகழ்கின்றது.

"எங்கள் தமிழிசை உலகப் புகழ் பெற வேண்டும்"

**நுண்கலைமாணி முத்துவேலர் அனுச்சித்திரா**

---



ஈழத்தின் தமிழிசை - அரங்கேற்று விழாவிலே ஒரு குரலிசை யாளனாகக் கலந்து கொள்வதிலே மட்டற்ற மனமகிழ்வு அடைகின் றேன். இந்தத் தமிழிசை விழாவானது நம் நாட்டுக் கவிராயர்களின் ஆக்கங்களையே முழுமையாக உள்ளடக்கி அமைந்துள்ளது. எனவே எங்களை விட்டு நீங்கிச் சென்ற படைப்பாளிகளின் ஆக்கங் களை மீண்டும் ஈழத்தின் இசை அரங்குகளில் ஒலிக்கச் செய்வதே இந்த அரங்கேற்று விழாவின் நோக்கமாகும். இவ்விழாவில் மறைந்த எனது தாயார் சாரதா பரஞ்சோதி அவர்களால் இசைவடிவம் கொடுக்கப்பட்ட ஒரு பாடல் இடம்பெறுவதை எண்ணி எண்ணி நெகிழ்கின்றேன்.

**செல்வன் பரஞ்சோதி சாரங்கன்**



இன்றைய கால கட்டத்தில் ஈழத்தின் தமிழிசை மரபுகள் மழுங்கடிக்கப் பட்டு அதற்குப் பதிலாக இந்திய இசை வடிவங்களே அதிகமாகப் போற்றப்படுகின்றமை மனவருத்தத்திற்குரிய விடயமாகும். இவ்வா றான காலகட்டத்தில் ஈழத்துப் பாடல்களில் தெரிந்தெடுத்து நூறு தமிழிசைப் பாடல்களாக ஒரே அரங்கில் அரங்கேற்றம் காண்படுவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். எனது பாட்டனார் சங்கீதபூசணம் ச.பாலசிங்கம் அவர்கள் பல உருப்படிகளை இயற்றியுள்ளார். அவரது உருப்படிகளும் இவ்வரலாற்றுப் பெருமை மிக்க அரங்கேற்று விழாவில் இடம்பெறுவதையிட்டுப் பெரும் மகிழ்வடைகின்றேன். அந்த அரங்கேற்றமானது "ஈழத்தின் தமிழிசை" எக்காலத்திலும் அழியாமல் வேரூன்ற வழி செய்யும் அத்திவாரமாக அமையும் என்பதுடன் இந்நிகழ்வில் நானும் ஒருவனாக இணைவதையிட்டுப் பேரானந்தமும் பெருமையும் கொள்கின்றேன்

**செல்வன் கண்ணதாஸ் சுடரோன்**

---

## துணையிசைக் கருவியாளர்களின் கருத்துக்கள்



ஈழத்துப் பாவலர்களின் இசைத் தமிழ்ப் பாடல்கள் அரங்கேறும் தமிழிசை விழா நடைபெறவிருப்பது மகிழ்ச்சியைத் தருகின்றது. இவ் விழாவினை முன்னின்று எடுக்கும் திரு தவநாதன் றொபேட் அவர் களுக்கு எனது பாராட்டுக்கள். இசைக்கு மொழி இல்லை என்கின்ற னர் சிலர். ஆனாலும் தெரிந்த மொழியோடு குழைந்து வரும் இசை இதயத்தைத் தொட்டு இன்பம் தருவது போல் ஏனையவை தருவ தில்லை. அந்த வகையில் தமிழிசையைப் போற்றி வளர்க்க வேண்டி யது தமிழர்களாகிய நம் எல்லோரினதும் கடனாகும். தமிழிசை வளர்ச்சியில் ஆர்வம் காட்டும் எனது அன்பு மாணவர் றொபேட் அவர்களையும் விழாவில் பங்கு பெறும் ஏனைய கலைஞர்களையும் வாழ்த்துகின்றேன்.

**தண்ணுமை வேந்தன் திரு. மாரிமுத்து சிதம்பரநாதன்**

---



இப்படியான நிகழ்வு முதல் முறையாக நடைபெறுவது ஈழத்தமிழ் மக்களுக்குப் பெரும் மகிழ்ச்சியைக் கொடுக்கும் என நான் நம்பு கிறேன். நான் 40 ஆண்டுகளாக இசை நிகழ்ச்சிகளுக்கு பக்க வாத்தியம் வாசித்து வருகின்றேன். இதுவரையில் இப்படி ஒரு நிகழ்ச்சி நடக்கவில்லை. இந்த நிகழ்ச்சி ஒரு நல்ல முயற்சி. இதனைப் பாராட்டுகிறேன். மீண்டும் மீண்டும் ஒவ்வொரு வருடமும் தமிழிசை நிகழ்ச்சி நடைபெற்றால் மக்களுக்கு ஈழத்துக் கவிஞர்களின் பாடல் களைக் கேட்டு மகிழ்ச்சியடைவதுடன் இப்படியான பாடல்கள் எல்லாம் இருக்கின்றதையும் உணர்வார்கள் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சுருதிவேந்தன் திரு அம்பலவாணர் ஜெயராமன்**



எமது தேசம் காணாத வரலாற்று நிகழ்வு தான் "ஈழத்தின் தமிழிசை - அரங்கேற்று விழா" இது ஒரு சாதாரண விடயமல்ல. ஒரு அரசு அல்லது பாரியவளம் மிக்க நிறுவனம் இந்த நிகழ்வைச் செய்ய நினைத்திருந்தால் கூட பல சவால்களுக்கு முகம் கொடுக்க நேரிடும். ஆனால் தனியொரு மனிதனால் இந்த நிகழ்வைத் திறம்படச் செய்ய முடிந்திருக்கிறது என்றால் அதற்கு ஒரே ஒரு காரணம் தான் இருக்கின்றது. நிகழ்வைச் செய்கின்றவன் ஒரு மா பெரும் கலைஞன். ஒரு கலைஞனால் மட்டுமே இப் பெரு முயற்சியை வெற்றிகரமாக நிகழ்த்தி முடிக்க முடியும். இதுவரை காணாத, இனியும் காண முடியாத அளவிற்கு இந் நிகழ்வு சிறக்க எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். பெருகட்டும், வளரட்டும் ஈழத்தின் தமிழிசை

**நுண்கலைமாணி திரு சுந்தரமூர்த்தி கோபிதாஸ்**

---



காலத்தின் கட்டாயம் கருதிய காத்திரமான காரியம் இது. கனதியான பணி. நின்று நிலைக்கக் கூடிய செயற்பாடு.
எனது வாழ்த்துக்கள்

**முதுதத்துவமாணி**
**திரு கார்த்திகேசு குகபரன்**

---



ஈழத்தில் தோன்றிய தமிழிசை வடிவங்கள் ஈழத்தில் இடம்பெறும் அரங்கிசைக் கச்சேரிகளில் மிகக் குறைவாகவே இடம்பெற்று வருவது கண்கூடு. எனினும் இவ் இசை வடிவங்கள் இசை அரங்குகளிலும் நாட்டிய அரங்குகளிலும் முழுநேர நிகழ்வாக நடாத்தக் கூடிய அள விற்கு சிறப்புப் பெற்ற வடிவங்களாக உள்ளன. எமது இசையாளர்கள் இசைக்கு ஆற்றிய பங்கினையும் அவர்கள் படைத்த இசைவடிவங் களின் சிறப்புக்களையும் வெளிக்கொணர்வதோடு அரங்கிசையில் இவ் உருப்படி வகைகளைப் பிரசித்தமாக்குவது மிகவும் முக்கியமான விடயமாகும். அந்த வகையில் எமது குருநாதர் திரு.த.றொபேட் அருட்சேகரன் அவர்களின் இந்த முயற்சி தேவைப்பட்டான ஒன்றாகவும் பாராட்டுதற்குரியதுமாகும். எனவே இந்த நிகழ்வில் என்னையும் பங்கு பெறச் செய்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைவதோடு ஆசிரியர் திரு.றொபேட் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியினையும் தெரிவித்து இந்நிகழ்வு இனிதே சிறப்புற நிகழ இறைவனை வேண்டுகின்றேன்.

**முதுகலைமாணி திருமதி பிரவீனா மாதவன்**



எமது ஈழவள நாட்டின் பெருமைக்குரிய கவிஞர்கள், வாக்கேயக் காரர்களின் படைப்புக்களை வெளிக்கொணர்ந்து குரலிசை, விரலிசை யுடன் இணைத்து எம் மக்களுக்குப் பயனுறும் வண்ணம் அன்புக் குரிய றொபேட் அண்ணா அவர்களின்பெரு முயற்சியால் அரங்கேற் றப்படும் ஈழத்தின் தமிழிசை சிறப்புற அமைய இறைவனை வேண்டு கின்றேன். அத்துடன் எதிர்காலத்தில் எம் கலைஞர்கள் ஈழத்தின் தமிழிசைப் பாடல்களைத் தமது இசைக் கச்சேரிகளில் அதிகமாகச் சேர்த்து ஈழத்தின் வாக்கேயக்காரர்களுக்குப் பெருமை சேர்க்கவும் இத்தமிழிசை அரங்கேற்றம் வழிவகுத்துள்ளது. இப் பெருமுயற்சியா னது எமக்கும் எமது நாட்டுக்கும் உலகளாவிய ரீதியில் பெருமை சேர்க்கின்றது.

**இசைக்கலைமணி திரு. கேதீஸ்வரன் வேலதீபன்**

---



தமிழன் தனது சொந்தத் தாய் மொழிச் சொல்லில் இசையைக் கேட்க இச்சை கொள்வதே "தமிழிசை" என்பதன் தத்துவமாகும் என்ற நாமக்கல் கவிஞனாரின் கூற்றிற்கிணங்க தமிழிசையை அனுபவிக் கக் கிடைத்த சந்தர்ப்பத்திற்கு நன்றிகள்.

இந்த நிகழ்வின் மூலம் தமிழ் மொழியின் ஆழத்தையும் இனிமை யையும் அனுபவிக்க முடியும் என்பதில் எதுவித ஐயமும் இல்லை. இந்நிகழ்வு மிகச் சிறப்பாக அமைய இறைவனை வேண்டுகிறேன்.

**கலாவித்தகர் திரு. பத்மநாதன் சியாம்கிருஸ்ணா**

---



எங்களது மண்ணின் கவிராயர்களால் எங்கள் நாட்டில் இருக்கின்ற ஆலயங்கள் மீதான பாடல்களை அடிப்படையாகக் கொண்டு ஓர் இசைவிழாவை நடாத்துவது உண்மையில் வரவேற்கத்தக்கது ஆகும். ஈழத்தின் தமிழிசை அரங்கேற்று விழாவில் கலந்து கொள்வதில் மட்டற்ற மகிழ்வடைகின்றேன்.

**இசைக் கலைமணி**

**திரு. அண்ணாமலை செல்வரத்தினம்**

---



எங்களது இசைகற்கும் மாணவர்களுக்கு இந்நிகழ்வு ஓர் வரப் பிரசாதம் என்றே சொல்லலாம். அத்துடன் இப்படியான பாடல்களைக் கற்பது நம் நாட்டு மாணவர்களுக்கு முக்கியமானதும் ஆகும். இந்த முயற்சியானது மறைந்து கிடக்கும் எமது கலை வளங்களை வெளிக் கொணர்வதாகவும் அமைந்துள்ளது.

இசைக்கலையின் பெரியோர்களுக்கும் சிறியோர்களுக்கும் பெரு விருந்தாக இந் நிகழ்வு அமையும் என்பதில் சந்தேகமில்லை. அனை வருக்கும் வாழ்த்துக்கள்.

**லயவித்தகர் திரு. சதாசிவம் வேல்மாறன்**



தமிழரின் அடையாளம் தமிழிசை என்னும் வாக்கிற்கிணங்க, தமிழிசை மீது அதீத விருப்பம் கொண்ட எனது அருமை நண்பன் றொபேட்டினுடைய இசைப்பயணத்தின் ஓர் அங்கமாக "ஈழத்தின் தமிழிசை" அரங்கேற்றம் காண்பது பெரும் மகிழ்வைத் தருகின்றது. தமிழர்கள் ஆகிய நாங்கள் அனைவரும் இதனால் பெருமைப்பட்டுக் கொள்ளலாம். இது காலத்தின் தேவையும் கூட. அதைவிட இவ்விசை விழாவில் யாழ்ப்பாணத்தில் இருக்கின்ற அனைத்துக் கலைஞர் களும் ஒன்று சேர்ந்து விழாவைச் சிறப்பிப்பது மேலும் சிறப்பான விடயமாகும். இவ்வாறு கலைஞர்களை ஒன்றிணைத்து நூறு தமிழிசைப் பாடல்களைத் திரட்டி ஈழத்துத் தமிழிசை வளர்த்த பெரியார்களின் பெயர்களை வெளிக்கொணர்ந்தமை பாராட்டப்பட வேண்டியதாகும். இந்தப் பெரும் பணியை எத்தனையோ சிரமங்களுக்கு மத்தியில் உன்னதமாக முன்னெடுத்த நண்பர் றொபேட்டை மீண்டும் பாராட்டி விழா சிறப்புற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

**முதுகலைமாணி திரு. கணபதிப்பிள்ளை கஜன்**

---



செந்தமிழே எங்கள் உயிர் மூச்சு. தமிழைக் களைந்தெடுத்து இசை தொடுத்து தேன் மழையாய்ச் சமர்ப்பணம் செய்யும் தமிழிசை அரங்கேற்று விழா சிறக்க மனமார்ந்த வாழ்த்துக்கள். இன்றைய காலத்தின் தேவையும் இதுவே. இத்தகைய நிகழ்வை ஒழுங்கமைத்த எம் அண்ணன் திரு.தவநாதன் றொபேட் அவர்களின் இசைப்பயணம் மேலும் வளரவும் சிறக்கவும் இறைவனை வேண்டி வாழ்த்துகிறேன்.

**இசைக்கலைமணி திரு. வரதராஜசர்மா ரமணா**

---



திரு தவநாதன் றொபேட் அவர்களால் முன்னெடுக்கப்பட்டுள்ள தமிழிசை விழா மிகவும் போற்றத்தக்க விடயம். எமது நாட்டின் தமிழ்க் கவிஞர்களின் பாடல்களை நாம் மீட்டுப் பார்க்கவும் எமது அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லவும் இந்தத் தமிழிசை விழா ஒரு சிறந்த களமாக அமையும் என்பதில் ஐயமில்லை. எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் எனது பங்களிப்பையும் வழங்கி மகிழ்கிறேன்.

**கலாவித்தகர் திரு. கந்தசாமி நந்தகுமார்**

---



நாமும் நமக்கோர் நலியாக் கலையுடையோம் என செம் மொழியாம் எங்கள் தாய் மொழியில் தூய நற் சொல்லெடுத்து அதை நயம்பட நாவசைத்துப் பாடித் தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்வோம்

**நுண்கலைமாணி திரு. சிங்கராசா செந்தூரன்**



தமிழிசையில் ஈழத்தவர் நாளும் இன்னிசையால் நற்றமிழ் பரப்பி வளர்த்தெடுக்கப்பட்ட நம்மவர் இசைச் செல்வமாகிய தமிழிசையில் இருந்து கிளர்த்ததே ஏனைய இசை வடிவங்கள். அத்தகு நுணுக்கம் மிகு செவ்விசையாகிய தமிழரிசையில் ஈழத்தவர் பங்களிப்பை வாழ்வியலை இசையுலகம் அறியச் செய்வோம். எம் உயிரிசையை ஊக்கப் படுத்துவோம். உத்வேகம் கொடுப்போம்

**கலைமாணி திரு. நாகேஸ்வரசர்மா சிவசுந்தரசர்மா**

---



ஈழத்து இசை வளர்ச்சியில் தமிழிசைக்கு மிக முக்கியம் கொடுத்து தம்மை முழுமையாக அர்ப்பணித்து வருபவர்கள் ஒரு சிலரே. அந்த வகையில் தமிழிசையே முழு மூச்சென ஈழத்துத் தமிழிசைக்குப் பெருமை சேர்த்து வருபவர் றொபேட் அண்ணா அவர்கள். உலகில் எங்கெங்கும் தமிழிசையின் வளர்ச்சி காணப்பட்டாலும் ஈழத்துக் கவிஞர்களால் ஆக்கப்பட்ட தமிழிசை வடிவங்களுக்குத் தனிச் சிறப் புண்டு. அதனை இதுவரை காலத்தில் எவரும் நேர்த்தியாக இசை வடிவம் கொடுத்து வெளிக்கொணர்ந்ததை நாம் அறியவில்லை. றொபேட் அண்ணா அவர்கள் இரண்டு வருடங்களாகத் தமது சொந்த முயற்சியில் ஈழத்துத் தமிழிசை ஆக்கங்களில் சிறந்த 100 பாடல்களைத் தொகுத்து இசையமைத்துத் தமது மாணவர்களுக்குப் பயிற்றுவித்து இன்று அரங்கிற்கு சமர்ப்பணம் செய்கின்றார். இந்தத் தமிழிசை விழாவில் மிக முக்கிய விடயம் றொபேட் அண்ணாவினால் ஆக்கி இசையமைப்புச் செய்யப்பட்ட பல்வேறு ஆக்கங்கள் இசைக்கப்பட இருக்கின்றன. இதில் பதவர்ணம், தான வர்ணங்கள், கீர்த்தனைகள், பதங்கள், தில்லானாக்கள் என்பன இசைக் கப்படுகின்றன. எம் இளம் இசைச் சமூகத்தில் மதிப்புமிக்க ஓர் கலைஞனாகவும் எம்மை வழிப்படுத்தும் ஓர் குருவாகவும் இருந்து தமிழிசைக்குத் தொண்டாற்றி வருவது நாம் பெற்ற பேறாகக் கருதி நிற்கின்றோம். இந்த இசைநிகழ்வில் பல இசைக்கலைஞர்களோடு நாமும் ஒருமித்துப் பங்கெடுப்பது பெருமைக்குரிய விடயமாகும்.

**முதுதத்துவமாணி திரு. நாகரத்தினம் மாதவன்**

---



இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழில் நடு நாயகமாக விழங்குவது தமிழிசை ஆகும். நமது ஈழ மணித்திருநாட்டில் காலத்துக்குக் காலம் இசைப் பெருமக்கள் தோன்றித் தமிழிழசயை வளப்படுத்தி வந்துள் ளனர். அவர்கள் விட்டுச் சென்ற இசைப் பொக்கிசங்கள் எம்மவர் மத்தியில் இன்று வழக்கொழிந்து காணப்படுகின்றன. பாடுவோன் கருத்தை கேட்போன் பருக எண்ணமும் ஓசையும் இசைவதே இசையாம். அதிலும் அவரவர் மொழியில் அவரவர் கேட்பதே இன்பம் பயக்கும் என்பதை நன்கு உணர்ந்தவராய் திரு தவநாதன் றொபேட் அவர்கள் தமிழிசையில் உண்மை நாட்டம் கொண்டு எமது ஈழத்துக் கவிஞர்கள் ஆக்கிய அரும் படைப்புக்கள் என்றும் மறைந்து போகாது உலகறியச் செய்ய அயராது பாடுபட்டு சுமார் 34 கவிராயர்களது 100 பாடல்களை உள்ளடக்கி அதை ஈழத்தின் தமிழிசையாக அரங்கேற்றுவது என்றென்றும் போற்றுதற்குரிய நற் பணியாகும். முத்தான இப்பணியில் நாமும் சிறு துரும்பு போல் பங்களிப்பதில் மகிழ்வடைவதுடன் இப்பணி சிறக்கவும் மேலும் தொடரவும் நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கலாவித்தகர் திரு. குமாரசாமி ரவிசங்கர்**



அருகிச் செல்லும் பழந்தமிழ் இலக்கியங்களின் சிறப்பு மீண்டும் உயிர் பெற்று எழ வேண்டும் தமிழ்ப் பற்றுக்கொண்ட உள்ளங்களுக்கும் இசைமீது ஈடுபாடு கொண்ட உள்ளங்களுக்கும் "ஈழத்தின் தமிழிசை - அரங்கேற்று விழா" நிறைவைக் கொடுக்கின்றது எனலாம். ஈழத்தின் முதன்மைக் கவிராயராக இருக்கின்ற பூதந்தேவனார் தொடக்கம் இன்றுவரை எத்தனையோ இசைக் கவிஞர்கள் தோன்றி கவிதை இலக்கியத்தை வளர்த்தெடுத்திருக்கின்றார்கள். அந்தவகையில் தொடக்கத்தில் இருந்து இன்று வரை தோற்றம் பெற்ற கவிதை இலக்கியங்களில் தெரிவுசெய்யப்பட்ட நூறு பாடல்களுக்கு இசை வடிவம் கொடுத்து பல்வேறு கவிஞர்கள், கலைஞர்கள் சேர்ந்து அரங்கேற்றுவது தமிழ் உள்ளங்களின் மனதில் தேன் பாய்ச்சுவது போல் இருக்கின்றது. யாழ்.பல்கலைக் கழக இசைத்துறையின் முதுநிலை விரிவுரையாளர் தவநாதன் றொபேட் அவர்களின் இந்த மேலான முயற்சி தொடர்ந்தும் நடைபெற்று ஈழத்தின் இசையும் கல்வியும் உயர்ந்து வளர வேண்டும் என்று இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

**நுண்கலைமாணி திரு. நடராஜா சதீஸ்**

---



நாம் அன்றாடம் வணங்கும் ஆலயங்கள் மீது பாடப்பட்ட பாடல்களைக் கேட்கும் போது மனதிற்குப் பெரிதும் ஆனந்தமாக இருக்கின்றது. இவ்வாறான பணிகள் ஈழத்தில் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டும். குரலோசை - நுண்கலைகளின் தாயகத்திற்கு எனது நன்றிகளும் வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்

**கலாவித்தகர் திரு. வெங்கடேச ஐயர் இரட்ணப் பிரபாகரசர்மா**

---



ஈழத்து இசை வரலாற்றில் முதன் முறையாக யாழ்.பல்கலைக் கழக இசைத்துறையின் முதுநிலை விரிவுரையாளர் திரு. தவநாதன் றொபேட் அண்ணா அவர்களின் பெரு முயற்சியினால் தமிழுக்கும் தமிழிசைக்கும் விழாக் கோலம் பூண்டிருக்கின்ற "ஈழத்தின் தமிழிசை - அரங்கேற்று விழா" என்னும் இந்தக் கனிவான பொழுதில் நானும் ஓர் பங்காளன் என்பதில் பேருவகை கொள்கிறேன். திரு.தவநாதன் றொபேட் அவர்கள் ஈழத்தில் விரவிக் கிடக்கின்ற தமிழ் மணக்கும் பாக்களை எல்லாம் ஒருங்கு சேர எடுத்து அணைத்து உயிரூட்டி உற்பவித்து இசையால் சீராட்டி தாலாட்டி வளர்த்தெடுத்து தமிழிசைத் தாயாக எமது மண்ணிற்கு முதுசமாகத் தந்திருக்கின்றார் என்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

**முதுதத்துவமாணி திரு. மகேந்திரன் லோகேந்திரன்**



காலத்தால் முற்பட்ட தமிழிசையே இசைகளுக்கெல்லாம் தொடக்கம். இத் தமிழிசையை மூலமாகக் கொண்டே வேற்று மொழி இசைகள் எழுச்சியுற்றன. இத்தகைய பாரம்பரியத்தைக் கொண்ட தமிழிசை ஈழத்தைப் பொறுத்தவரை நலிவடைந்து காணப்படுவது வருத்தத்திற் குரியது. பெரும்பாலான இசைக்கலைஞர்கள் இசை ஆற்றுகைகளில் தமிழிசைக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. வேற்று மொழிகளில் அமைந்த பாடல்கள் பாடுவதில் கூடிய ஆர்வம் காட்டுதல் திறமை என்றும் பெருமை என்றும் எண்ணுகிறார்கள். இதன் பிரதிபலன் இசை இரசிகர்களும் இசை நிகழ்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுப்ப தில்லை. இந்நிலையில் தமிழிசை எனும் நிகழ்வானது இசை மரபுவழி பாடல்களை உலகுக்கு அறியத்தருவதாகவும் தமிழிசை எழுச்சிக்கு ஏதுவாகவும் அமையும்.

நாயன்மார்கள் விட்டுச்சென்ற இசை ஆவணங்களை மீண்டும் மீட்டிச்செல்லும் நோக்கில் இந்நிகழ்வு ஆற்றப்படுகிறது. இதன்மூலம் இசைபாரம்பரியங்கள் பற்றி நம் மாணவர்கள், ஆசிரியர்கள், இசை ஆர்வலர்கள் பயனுறுவர் என்பதில் ஐயம் இல்லை. இவ் அரிய நிகழ்விற்கு வித்திட்ட இசைக் கலைஞர் தவமைந்தன் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றிகள்.

**கலாவித்தகர் திரு. சரவணபவன் பிரணவன்**



இரண்டு ஆண்டுகளாக அயராது பாடுபட்டு உருவாக்கப்பட்டிருக்கும் ஈழத்தின் தமிழிசை - அரங்கேற்று விழா ஈழத்தின் இசை வரலாற்றில் முக்கியமான இடத்தைப் பிடிக்கும் என்பது திண்ணம். எங்கள் தமிழிசை உலகம் முழுவதும் ஒலிக்க வேண்டும்.

**வாத்தியக் கலைமணி திரு. கேதீஸ்வரன் பிரணவன்**



இந்த நிகழ்வு என்னைப் பொறுத்தவரையில் ஓர் வரலாற்று நிகழ் வாகும். அப்படியான தொரு நிகழ்வில் யாழ்ப்பாணத்தின் அனைத்துக் கலைஞர்களையும் ஒருங்கிணைத்தமை போற்றுதற்குரியதாகும். இலை மறை காயாக இருக்கும் கலைஞர்களை வெளிக் கொணரும் நிகழ்வாகவும் இந்நிகழ்வு அமைக்கப்பட்டமை என்னைப் பெரிதும் மகிழ்வடையச் செய்துள்ளது.

**நுண்கலைமாணி திரு. துரைசிங்கம் சுபேஸ்**



அருகிச் சென்றுகொண்டிருக்கும் ஈழத்தின் தமிழிசையை வளர்ச்சிப் பாதையில் கொண்டு சேர்ப்பது நம் அனைவரதும் பாரிய பொறுப் பாகும். இன்று நடைபெறும் ஈழத்தின் தமிழிசை அரங்கேற்று விழா வினை முன்னுதாரணமாகக் கொண்டு எமது இசையாளர்களும் தமது இசையரங்குகளில் ஈழத்து வாக்கேயக்காரர்களின் உருப் படிகளையும் குறிப்பிடத்தக்க அளவு ஆற்றுகைப்படுத்த முயற்சிக்க வேண்டும். அதுவே அவர்கள் தமது தாய் நாட்டிற்குச் செய்யும் உண்மையான கலைப்பணியாகும்.

**நுண்கலைமாணி திரு. விமலசிங்கம் ராகவன்**



ஈழத்து தமிழிசைக்கு மகுடம் சூட்டும் தமிழிசை அரங்கேற்ற விழா பெரும் வெற்றி பெற எனது மனப்பூர்வமான வாழ்த்துக்கள். ஈழத்தில் முதன்முறையாக முழுநேரத் தமிழ்இசை வேள்வி இடம் பெறுவதும் கலைஞர் பெருமக்கள் ஒன்றாக ஒரே மேடையில் இசை அர்ப்பணம் செய்வதும் சிறப்பு.மேலும் இவ் விழாவை அழகுற ஒழுங் கமைத்த முதுநிலை விரிவுரையாளர் திரு.தவநாதன் தவமைந்தன் அவர்களுக்கு எனது நன்றிகளும் பாராட்டுக்களும் உரித்தாகட்டும்.

**கலாவித்தகர் திரு. பாக்கியநாதன் ஞானவேல்**

---



"தமிழோடிசை பாடல் மறந்தறியேன்"… உயிர் தமிழோடு இசை வதுவும் நான் மறுத்திலேன்- இசைத்தமிழாகி மலர்வதுவே… இனிதென்பேன் உயர் தமிழிசைக்கோர் நன் நாளிது… இனிது இனிப் பெருமை கொள்வேன்…!

எம்மவர் நற்பணி சிறக்கும்… - புவி எங்கினும் ஈழத்தின் தமிழிசை செழிக்கும்…!!!

**லயச்செல்வன் திரு. அருமைநாதன் சண்முகப்பிரியன்**

---



கர்நாடக இசைக்கு ஆதாரமாக தமிழிசை உள்ளது என்பது, தமிழர் களாகிய எங்களைப் பெருமை கொள்ளச் செய்கின்றது. அத்தகு பெருமை கொண்ட தமிழிசைப் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்டிருக்கும் ஈழத்தின் தமிழிசை - அரங் கேற்று விழா அனைத்துக் கலைஞர்களையும் ஒன்று சேர்த்திருக் கின்றமை மகிழ்ச்சிக்குரியதாகும். இவ்வரங்கேற்ற நிகழ்வு சிறப்புற இறைவனைப் பிரார்த்தித்து இந்நிகழ்வின் ஏற்பாட்டாளர் தவமைந்தன் அவர்களை அன்புடன் பாராட்டுகின்றேன்.

**கலாவித்தகர் திரு. ஞானவேல் வசந்**

## நிகழ்வின் உரிமை

# நிகழ்ச்சித் தொகுப்பாளர்களது கருத்துரைகள்



ஈழத்தின் புகழ் பூத்த கவிராயர்களுடை இன்னிசைக் கவிகளை ஸ்வர தாள அங்கக் குறியீடுகளுடன் உருவாக்கி ஆவணப் படுத்தி வருபவரும் ஈழத்தமிழர்களின் ஆவல்கள், பண்பாடு, எம் தாய் மொழியின் செழுமை தமிழர் தம் நன்னெறி என்பன நிறைந்து விளங்குகின்ற நூறு இனிய பாடல்களை ஒரு நாளில் அரங்கேற்றம் செய்வதற்கு அரும் பணியாற்றிய தமிழ்த் தாயின் தவமைந்தன் அவர் களையும் அவர் தம் இசைவாரிசுகளையும் வாழ்த்தி மகிழ்கிறது என் நெஞ்சம்.

வாழ்க வளர்க எம் தமிழிசை

**நுண்கலைமாணி திரு லி.ரதீஸ்**

---



ஒரு இனத்தின் கலை பண்பாட்டு அம்சங்களில் ஒன்றாகத் திகழ்வது இசையாகும். உலகின் உள்ள அனைத்து இனங்களுமே தமக்கென் றோர் இசைப்பாரம்பரியத்தை கொண்டிருக்கின்றன. அவ்வகையில் தமிழினத்திற்கான தனி அடையாளமாகத் திகழ்வது தமிழிசையாகும். இத்தமிழிசையானது ஈழத்திலே மிகச் செழுமையான வளர்ச்சியைக் கொண்டிருந்தது. அத்தமிழிசையை வளர்த்தெடுத்த பெருமை ஈழத்துத் தமிழிசையாளர்கள், கவிராயர்கள், இலக்கியவான்களையே சார்ந்து நிற்கிறது. காலப்போக்கில் அன்னிய ஆதிக்கங்களால் மறைத் தொழிக்கப்பட்டு வீரியம் குறைக்கப்பட்ட எம் தாய்நிலத்து இசையானது தற்போது மிகவும் பிரயத்தனத்துடன் தன் எழுச்சியை ஆரம்பித்துள்ளது. ஈழத்து தமிழிசை அரங்கேற்று நிகழ் வானது ஈழத்துக் கவிராயர்கள் புனைந்த ஈழமணித்திருநாட்டிற்கே உரித்தான தமிழ் வாண்மை நிறைந்த பாடல்களை சுமந்து வருகிறது. இது இளம் தலைமுறையினரான எமக்கு கிடைத்திருக்கின்ற மிகப்பெரிய வரப்பிரசாதமாகும். முற்றத்து மல்லிகை மனதைக் கொள்ளை கொள்ளப் போகின்றது. இலக்கியவாதிகள் மறைந்தாலும் இலக்கியங்கள் மறைவ தில்லை என்றும் உயிர் வாழுகின்றன. இத்தகு ஈழத்து கவிகைளை ஒன்றாக்கி இசைதந்து மிகவும் கடினமான உழைப்புடன் வெளிவரும் இவ் அரங்கேற்ற நிகழ்வு பல அரங்குகளைக் காண ஆவல் கொள்கிறேன். இந்தத் தமிழிசைப் பயிற்சி நெறியில் கலந்து கொண்ட எனது கணவர் க.வர்ஜிகன் மேற்படிப்பிற்காகத் தமிழகத்தில் இருப்பதால் இந்த அரங்கேற்றத்தில் கலந்துகொள்ள முடியவில்லை. இருப்பினும் இப்பெருவிழாவில் தொகுப்பாளராக நான் கலந்து கொள்வது மிகவும் மனமகிழ்வோடு சேர்ந்த ஆறுதலைத் தருகிறது.

**திருமதி மாதங்கி வர்ஜிகன்**

# இசை அரங்குகளின் நிரல்

**முதலாவது இசை நிகழ்வு**

**1.** இனிதான தமிழ் பாடவே
இராகம் : பகுதாரி,
தாளம்: ஆதி,
இயலிசை அழகு :
வசாவிளான் தவமைந்தன் V24

குரலிசையாளர்கள் :
த.றொபேட், க.ரஜீவன், மு.துஸ்யந்தன்,
ஸ்ரீ.மதுராங்கி,அ.அமிர்தசிந்துஜன்,
சி.மதுஜா,மு.அனுச்சித்திரா,
ந.சங்கீதவாணி, ப.சாரங்கன்

துணையிசைக் கலைஞர்கள்
வயலின்: அ.ஜெயராமன்,
மிருதங்கம் : க.கஜன்,
கஞ்சிரா : நா.சிவசுந்தரசர்மா
முகர்சிங் : சி.செந்தூரன்,
தம்புரா : க.சுடரோன்

**இரண்டாவது இசை நிகழ்வு**

**2.** நினையாய் வாழி தோழி
இராகம் : சங்கராபரணம்
தாளம் : மிஸ்ரசாபு
இயலழகு :
சங்கப் புலவர் பூதந்தேவனார்
இசையழகு : வசாவிளான் தவமைந்தன்

**3.** ஆதாரம் நீயென்று அறிந்தேன்
இராகம் : வாசஸ்பதி
தாளம் : ஆதி
இயலழகு : அகத்தியர் அடிகள்
இசையழகு : வசாவிளான் தவமைந்தன்

**4.** ஏற்குமோ திருவருளுக்கு
இராகம் : தோடி
தாளம் : ஆதி
இயலழகு : யோக சுவாமிகள் (1)
இசையழகு : வசாவிளான் தவமைந்தன்

**5.** என்ன வேண்டுமோ
இராகம் : கதனகுதூகலம்
தாளம் : ஆதி
இயல் அழகு : அருட்கவி
சீ.விநாசித்தம்பிப் புலவர் (A)
இசை அழகு : வசாவிளான் தவமைந்தன்

**6.** பாதம் தூக்கி
இராகம் : ரீதிகௌளை
தாளம் : ரூபகம்
இயலிசை அழகு:வசாவிளான் தவமைந்தன்

**7.** வந்தனமே
இராகம் : கானமூர்த்தி
தாளம் : ஆதி
இயலழகு : பொன்னாலை சிவகுருநாதன்
இசையழகு : வசாவிளான் தவமைந்தன்

**8.** நிருமல பரசிவ சண்முகா
இராகம் : சுருட்டி
தாளம் : ஆதி
இயலழகு : ஆறுமுக நாவலர்
இசையழகு : வசாவிளான் தவமைந்தன்

குரலிசையாளர் : த.றொபேட்

துணையிசையாளர்கள்
வயலின் : சு.கோபிதாஸ்,
மிருதங்கம் : மா.சிதம்பரநாதன் ,
கஞ்சிரா : நா.சிவசுந்தரசர்மா,
கடம் : நா.மாதவன் ,
முகர்சிங் : சி.செந்தூரன்
தம்புரா : க.ரஜீவன்

**மூன்றாவது இசை நிகழ்வு**

**9.** தானவர்ணம்
இராகம் : பகுதாரி
தாளம் : ஆதி
இயலிசை அழகு :
வசாவிளான் தவமைந்தன் V23

**10.** நீ தா அருள்
இராகம் : சாருகேசி
தாளம் : மிஸ்ரசாபு
இயலிசை அழகு
சங்கீதபூசணம் ச.பாலசிங்கம்

**11.** இராஜாதி ராஜன்
இராகம் : காம்போதி
தாளம் : ஆதி
இயலழகு : யோக சுவாமிகள் (2)
இசையழகு : வசாவிளான் தவமைந்தன்

**12.** எத்தனை பிறவி இங்கு
இராகம் : சரஸ்வதி
தாளம் : ஆதி
இயலழகு : அருட்கவி சீ.விநாசித்தம்பிப்
புலவர்
இசையழகு : வசாவிளான் தவமைந்தன் (B)

**13.** நாதாநின்
இராகம் : கீரவாணி
தாளம் : மிஸ்ரசாபு
இயலிசை அழகு : வசாவிளான் தவமைந்தன்

**14.** ஓம் சிவாயநம
இராகம் : சுபபந்துவராளி
தாளம் : ஆதி
இயலழகு : அருட்கவி சீ.விநாசித்தம்பிப் புலவர்
இசையழகு : வசாவிளான் தவமைந்தன்

**15.** என் மனத்திலே ஆடிடும்
இராகம் : கரஹரப்பிரியா
தாளம் : கண்டசாபு
இயலிசை அழகு : வசாவிளான் தவமைந்தன்

குரலிசையாளர் : ஸ்ரீ.மதுராங்கி

துணைக் கலைஞர்கள்
வயலின் : கா.குகபரன்,
மிருதங்கம் : க.கஜன்,
கஞ்சிரா : அ.சண்முகப்பிரியன்,
கடம் : கு.ரவிசங்கர்,
தம்புரா : சி.மதுஜா

**நான்காவது இசையரங்கு**

**16.** அம்பா ஜெகதம்பா
இராகம் : கீரவாணி
தாளம் : ஆதி
இயலழகு : இயலிசை வாரிதி ந.வீரமணிஐயர்
இசையழகு : வசாவிளான் தவமைந்தன்

**17.** எனக் கின்பமே வா
இராகம் : ஆந்தோளிகா
தாளம் : ரூபகம்
இயலழகு : யோக சுவாமிகள்
இசையழகு : வசாவிளான் தவமைந்தன்

**18.** முத்தழகன் முருகனுடன்
இராகம் : ஹிந்தோளம்
தாளம் : மிஸ்ரசாபு
இயலழகு : ஆசுகவி செ.சிவசுப்பிரமணியம்
இசையழகு :
நுண்கலைமாணி சாரதா பரஞ்சோதி

**19.** நீயேகதி
இராகம் : கரஹரப்பிரியா
தாளம் : ஆதி
இயலிசை அழகு :
சங்கீதவித்துவான் பொன்.ஸ்ரீவாமதேவன்

**20.** பூவில் அமர்ந்த கலைமகளே
இராகம் : ரஞ்சனி
தாளம் : ஆதி
இயலழகு : மூளாயூர் தி.தவம்
இசையழகு : வசாவிளான் தவமைந்தன்

**21.** சரவணபவ சண்முககுக
இராகம் : ஸ்ரீ
தாளம் : ரூபகம்
இயல் அழகு : அருட்கவி விநாசித்தம்பிப் புலவர்
இசையழகு : வசாவிளான் தவமைந்தன்

குரலிசையாளர் : த.றொபேட்

வயலின் : அ.ஜெயராமன்,
மிருதங்கம் : நா.மாதவன் ,
கஞ்சிரா : அ.சண்முகப்பிரியன்,
கடம்: அ.செல்வரத்தினம் ,
தம்புரா : க.ரஜீவன்

**ஐந்தாவது இசை நிகழ்வு**

**22.** தானவர்ணம்
இராகம் : பிலஹரி
தாளம் : ஆதி
இயலிசை அழகு :வசாவிளான் தவமைந்தன்

**23.** வேண்டும் வரம் தருவாய்
இராகம் : ஹம்சத்வனி
தாளம் : ஆதி
இயலழகு : சங்கீதரத்தினம் க.ப.சின்னராசா
இசையழகு : வசாவிளான் தவமைந்தன்

**24.** உன் திருவடி நம்பினேன்
இராகம் : ஹேமவதி
தாளம் : கண்டசாபு
இயலிசை அழகு : வசாவிளான் தவமைந்தன்

**25.** சரவண பவகுகனே
இராகம் : வசந்தா
தாளம் : ஆதி
இயலழகு : ஏ.கே.ஏரம்பமூர்த்தி
இசையழகு : வசாவிளான் தவமைந்தன்

**26.** வாராத காரணம்
இராகம் : லதாங்கி
தாளம் : மிஸ்ரசாபு
இயலிசை அழகு : வசாவிளான் தவமைந்தன்

**27.** தாண்டவனே
இராகம் : சாருகேசி
தாளம் : ஆதி

இயலிசை அழகு :
வசாவிளான் தவமைந்தன்

**28.** ராமதூத ஹனுமானே
இராகம் : ஹம்சானந்தி
தாளம் : ஆதி
இயலிசை அழகு : வசாவிளான் தவமைந்தன் V14

குரலிசையாளர் : அ.அமிர்தசிந்துஜன்

துணையிசையாளர்கள்
வயலின் : அ.ஜெயராமன்,
மிருதங்கம் : நா.சிவசுந்தரசர்மா,
கஞ்சிரா : வி.ராகவன்,
கடம் : நா.மாதவன்,
தம்புரா : மு.துஸ்யந்தன்

**ஆறாவது இசை நிகழ்வு**

**29.** தானவர்ணம்
இராகம் : கம்பீரநாட்டை
தாளம் : ஆதி
இயலிசை அழகு: வசாவிளான் தவமைந்தன் V15

**30.** ஆனைமுகனே சரணம்
இராகம் : ஆபோகி
தாளம் : ஆதி
இயலிசை அழகு: வசாவிளான் தவமைந்தன் V16

**31.** வரவேண்டும் ஆறு
இராகம் : சிம்மேந்திரமத்திமம்
தாளம் : ஆதி
இயல் அழகு : ஏ.கே.ஏரம்பமூர்த்தி
இசை அழகு: வசாவிளான் தவமைந்தன்

**32.** அலங்கார வேலனை
இராகம் : கரஹரப்பிரியா
தாளம் : ஆதி
இயல் அழகு : அருட்கவி சீ.விநாசித்தம்பிப் புலவர்
இசை அழகு: வசாவிளான் தவமைந்தன் (E)

**33.** இன்னமும் வன் கண்மை
இராகம் : பூர்விகல்யாணி
தாளம் : ஆதி
இயல் அழகு : உடுப்பிட்டி சிவசம்புப் புலவர்
இசை அழகு : வசாவிளான் தவமைந்தன்

**34.** திருவடி சரணம் அம்மா
இராகம் : நாட்டைக்குறிஞ்சி
தாளம் : ஆதி
இயல் அழகு : இயலிசை வாரிதி ந.வீரமணி ஐயர் (*)

இசை அழகு: வசாவிளான் தவமைந்தன்

குரலிசையாளர் : சி.மதுஜா

துணையிசையாளர்கள்
வயலின் : ப.சியாம்கிருஸ்ணா,
மிருதங்கம் : ந.சதீஸ்குமார்,
கஞ்சிரா :ஞா.வசந்,
முகர்சிங் : க.நந்தகுமார்,
தம்புரா: ஸ்ரீ.மதுராங்கி

**ஏழாவது இசை நிகழ்வு**

**35.** அகரமும்
இராகம் : ஹம்சத்வனி
தாளம் : கண்டசாபு
இயல் அழகு : அருட்கவி சீ.விநாசித்தம்பிப் புலவர்
இசை அழகு : வசாவிளான் தவமைந்தன் (F)

**36.** சென்மம் எத்தனை
இராகம் : லலிதா
தாளம் : மிஸ்ரசாபு
இயல் அழகு : வசாவிளான் கல்லடி வேலுப்பிள்ளை
இசை அழகு: வசாவிளான் தவமைந்தன்

**37.** அழகா என்றால்
இராகம் : சாருமதி
தாளம் : ஆதி
இயல் அழகு : அருட்கவி சீ.விநாசித்தம்பிப் புலவர்
இசை அழகு: வசாவிளான் தவமைந்தன் (G)

**38.** இனிக்க இனிக்க
இராகம் : திலங்
தாளம் : ஆதி
இயல் அழகு : இயலிசை வாரிதி ந.வீரமணி ஐயர்
இசை அழகு : வசாவிளான் தவமைந்தன் (*)

**39.** வெள்ளைநிற மல்லிகையோ
இராகமாலிகை
தாளம் : ஆதி
இயலழகு : சுவாமி விபுலானந்த அடிகள்
இசையழகு : சங்கீதபூசணம் கே.ஆர்.நடராசா

குரலிசையாளர் : த.றொபேட்

துணையிசையாளர்கள்
வயலின் : கா.குகபரன்,
மிருதங்கம் : க, கஜன்,
கஞ்சிரா :பா.ஞானவேல்,
கடம்: நா.மாதவன்,
முகர்சிங் : சி. செந்தூரன்
தம்புரா : க.ரஜீவன்

**எட்டாவது இசை நிகழ்வு**

**40.** தானவர்ணம்
இராகம் : ஹம்சவினோதினி
தாளம் : ஆதி
இயலிசை அழகு : வசாவிளான் V10
தவமைந்தன்

**41.** பதசரணம்
இராகம் : நாகஸ்வராளி
தாளம் : ஆதி
இயலிசை அழகு : வசாவிளான் V11
தவமைந்தன்

**42.** வா வா என
இராகம் : சண்முகப்பிரியா
தாளம் : கண்டசாபு
இயலிசை அழகு : வசாவிளான் V12
தவமைந்தன்

**43.** மாதவாஹரே
இராகம் : கல்யாணவசந்தம்
தாளம் : ரூபகம்
இயல் அழகு : பொன்னாலை
சிவகுருநாதன்
இசை அழகு: வசாவிளான் தவமைந்தன்

**44.** வரம்தர வேண்டும்
இராகம் : நளினகாந்தி
தாளம் : ஆதி
இயல் அழகு : கவிஞர் க.மயில்வாகனம்
இசை அழகு : வசாவிளான் தவமைந்தன்

குரலிசையாளர் : மு.துஸ்யந்தன்

துணையிசையாளர்கள்
வயலின் : கே.வேலதீபன் ,
மிருதங்கம் : கு.ரவிசங்கர்,
கஞ்சிரா : பா.ஞானவேல்,
முகர்சிங் : து.சுபேஸ்,
தம்புரா : அ.அமிர்தசிந்துஜன்

**ஒன்பதாவது இசை நிகழ்வு**

**45.** வேழமுகனின்
இராகம் : நாட்டை
தாளம் : ரூபகம் V13
இயலிசைஅழகு: வசாவிளான் தவமைந்தன்

**46.** ஆனந்த தாண்டவம்
இராகம் : கல்யாணி
தாளம் : ரூபகம்
இயல் அழகு : அருட்கவி
சீ.விநாசித்தம்பிப் புலவர் (H)
இசை அழகு: வசாவிளான் தவமைந்தன்

**47.** உருகாதா உனது மனம்
இராகம் : தேஸ்
தாளம் : ஆதி
இயலிசை அழகு : சங்கீதபூசணம்
ச.பாலசிங்கம்

**48.** வேத முதல்வனே
இராகம் : பந்துவராளி
தாளம் : ஆதி
இயல் அழகு : சங்கீதரத்தினம்
க.ப.சின்னராசா
இசை அழகு: வசாவிளான் தவமைந்தன்

**49.** வாராய் கிளியே
இராகம் : வலஜி
தாளம் : ஆதி
இயல் அழகு : மு. கணபதிப்பிள்ளை
இசை அழகு: வசாவிளான் தவமைந்தன்

**50.** குருநாதா
இராகம் : லதாங்கி
தாளம் : ஆதி
இயல் அழகு : அருட்கவி
சீ.விநாசித்த்பிப் புலவர்
இசை அழகு: வசாவிளான் தவமைந்தன்

குரலிசையாளர் : க.ரஜீவன்

துணையிசையாளர்கள்
வயலின் : ப.சியாம்கிருஸ்ணா
மிருதங்கம் : சி.செந்தூரன்,
கஞ்சிரா : அ.சண்முகப்பிரியன்,
முகர்சிங் : க.நந்தகுமார்,
தம்புரா : த.றொபேட்

**பத்தாவது இசை நிகழ்வு**

**51.** முழுமுதற் பொருளே
இராகம் : ஹம்சத்வனி
தாளம் : ஆதி
இயல் அழகு : சிற்பி சரவணபவன்
இசை அழகு :
சங்கீதவித்துவான் பொன்.ஸ்ரீவாமதேவன்

**52.** பதவர்ணம்
இராகம் : ஹம்சாநந்தி
தாளம் : ஆதி
இயலிசை அழகு : வசாவிளான் V14
தவமைந்தன்

**53.** பூசிக்க வேண்டுமையே
இராகம் : ஆபோகி
தாளம் : ஆதி
இயல் அழகு : வரகவி பொன்னாலை
வே.க.கிருஸ்ணபிள்ளை

இசை அழகு: வசாவிளான் தவமைந்தன்

54. தமிழிசை தனைக்காத்து
இராகம் : கௌளை
தாளம் : ஆதி
இயலிசை அழகு : சங்கீதபூசணம்
எல்.திலகநாயகம் போல்

**55.** எண்ணி எண்ணி
இராகம் : சந்த்ரகௌன்ஸ்
தாளம் : ஆதி
இயல் அழகு : தமிழ்மணி அகளங்கன்
இசை அழகு : வசாவிளான் தவமைந்தன்

குரலிசையாளர் : த.றொபேட்

வயலின் : கே.வேலதீபன்
மிருதங்கம் : நா.சிவசுந்தரசர்மா
கஞ்சிரா: வி.ராகவன்
கடம்: கு.ரவிசங்கர்
தம்புரா : மு.துஸ்யந்தன்

**பதினோராவது இசை நிகழ்வு**

**56.** சந்தத் திருப்புகழால்
இராகம் : தர்மவதி
தாளம் : ஆதி
இயல் அழகு : சங்கீதரத்தினம
க.ப.சின்னராசா
இசை அழகு : வசாவிளான் தவமைந்தன்

**57.** சதாசிவனை சதா துதிக்க
இராகம் : மோகனம்
தாளம் : ஆதி
இயல் அழகு :
அருட்கவி சீ.விநாசித்தம்பிப் புலவர்
இசை அழகு: வசாவிளான் தவமைந்தன்

**58.** நீலாயதாட்சி
இராகம் : பூர்விகல்யாணி
தாளம் : ஆதி
இயல் அழகு : பொன்னாலை சிவகுருநாதன்
இசை அழகு: வசாவிளான் தவமைந்தன்

**59.** கதிதருவாய்
இராகம் : பிலஹரி
தாளம் : ரூபகம்
இயல் அழகு :
அருட்கவி சீ.விநாசித்தம்பிப் புலவர்
இசை அழகு: வசாவிளான் தவமைந்தன்

**60.** காணும் இடமெல்லாம்
இராகம் : ஆபேரி
தாளம் : மிஸ்ரசாபு
இயல் அழகு :
முள்ளியவளை சிவனேசன் கந்தையா
இசை அழகு: வசாவிளான் தவமைந்தன்

குரலிசையாளர்கள் : ந.சங்கீதவாணி,
மு.அனுச்சித்திரா

வயலின் : மா.பிரவீனா,
மிருதங்கம் : ச.பிரணவன்,
கஞ்சிரா : நா.சிவசுந்தரசர்மா,
முகர்சிங் : சி.செந்தூரன்,
தம்புரா : சி.மதுஜா

**பன்னிரண்டாவது இசை நிகழ்வு**

**61.** தொட்டதினால்
இராகம் : ஆரபி
தாளம் : ஆதி
இயல் அழகு :
முள்ளியவளை சிவனேசன் கந்தையா
இசை அழகு: வசாவிளான் தவமைந்தன்

**62.** சங்கரசிவ
இராகம் : அமிர்தவர்சினி
தாளம் : ரூபகம்
இயல் அழகு : பொன்னாலை
சிவகுருநாதன்
இசை அழகு: வசாவிளான் தவமைந்தன்

**63.** ரங்கனின்
இராகம் : பிருந்தாவனி
தாளம் : மிஸ்ரசாபு
இயல் அழகு : யோக சுவாமிகள்
இசை அழகு: வசாவிளான் தவமைந்தன்

**64.** ஆடுமயிலே
இராகம் : ஹம்சாநந்தி
தாளம் : ஆதி
இயல் அழகு : யோக சுவாமிகள்
இசை அழகு: வசாவிளான் தவமைந்தன்

குரலிசையாளர்கள் : த.றொபேட்,
ப.சாரங்கன், க.சுடரோன்
வயலின் : அ.ஜெயராமன்,
மிருதங்கம் : வ.ரமணா,
கடம் : வெ.பிரபாகரசர்மா,
முகர்சிங் : து.சுபேஸ்,
தம்புரா : அ.அமிர்தசிந்துஜன்

**பதின்மூன்றாவது இசை நிகழ்வு**

**65.** வீரமாமயில்
இராகம் : கௌரிமனோஹரி
தாளம் : ஆதி
இயல் அழகு : யோக சுவாமிகள்
இசை அழகு: வசாவிளான் தவமைந்தன்

**66.** மோகன லாவண்ய
இராகம் : மோகனம்
தாளம் : ரூபகம்

இயல் அழகு :
இயலிசை வாரிதி ந.வீரமணி ஐயர்
இசைஅழகு: வசாவிளான் தவமைந்தன்

**67.** சிற்றம்பலத்துள் ஆடும்
இராகம் : பிலஹரி
தாளம் : ஆதி
இயல் அழகு :
அருட்கவி சீ.விநாசித்தம்பிப் புலவர்
இசை அழகு: வசாவிளான் தவமைந்தன்

**68.** உனைப் பாடும் பாடல்
இராகம் : கல்யாணவசந்தம்
தாளம் : ஆதி
இயல் அழகு : சங்கீதபூசணம்
முழக்கர் முருகப்பா
இசை அழகு: வசாவிளான் தவமைந்தன்

**69.** கமல மலருறை
இராகம் : கர்நாடக தேவகாந்தாரி
தாளம் : ஆதி
இயல் அழகு : ஏ.கே.ஏரம்பமூர்த்தி
இசை அழகு: வசாவிளான் தவமைந்தன்

**70.** சொல்லெடுத்து
இராகம் : கருணாரஞ்சனி
தாளம் : ஆதி
இயல் அழகு : கவிஞர் கண.எதிர்வீரசிங்கம்
இசை அழகு: வசாவிளான் தவமைந்தன்

குரலிசையாளர்கள்
ஸ்ரீ.மதுராங்கி, சி.மதுஜா
வயலின் : மா.பிரவீனா,
மிருதங்கம் : கே.பிரணவன்,
கஞ்சிரா : வி.ராகவன்,
முகர்சிங் : க.நந்தகுமார்,
தம்புரா: ந.சங்கீதவாணி

**பதினான்காவது இசை நிகழ்வு**

**71.** இராகம் தானம் பல்லவி
இராகம் : கல்யாணி
தாளம் : ஆதி
இயல் அழகு :
தண்ணுமைவேந்தன் மா.சிதம்பரநாதன்
இசை அழகு: வசாவிளான் தவமைந்தன்

குரலிசையாளர் : த.றொபேட்

வயலின் : சு.கோபிதாஸ்,
மிருதங்கம் : க.கஜன்,
கஞ்சிரா : நா.சிவசுந்தரசர்மா,
கடம்: நா.மாதவன்,
முகர்சிங்: சி.செந்தூரன்,
தம்புரா : க.ரஜீவன்

**பதினைந்தாவது இசை நிகழ்வு**

**72.** ஞாலமென்னும்
இராகம் : சரசாங்கி
தாளம் : ஆதி
இயல் அழகு :
கலைத்தூது நீ.மரியசேவியர் அடிகள்
இசை அழகு: வசாவிளான் தவமைந்தன்

**73.** மழலை இன்
இராகம் : ஹம்சவினோதினி
தாளம் : ஆதி
இயல் அழகு : கவிஞர் நீலாவணன்
இசை அழகு : வசாவிளான் தவமைந்தன்

**74.** புகுவாய் தமிழில்
இராகம் : நாசிகாபூசணி
தாளம் : ஆதி
இயல் அழகு : கவிஞர் இ.முருகையன்
இசை அழகு: வசாவிளான் தவமைந்தன்

**75.** ஈழநாடே
இராகம் : சங்கராபரணம்
தாளம் : ஆதி
இயல் அழகு : மஹாகவி உருத்திரமூர்த்தி
இசை அழகு: வசாவிளான் தவமைந்தன்

குரலிசையாளர் : த.றொபேட்

வயலின் : ப.சியாம்கிருஸ்ணா
மிருதங்கம் : வ.ரமணா
தபேலா : சதா.வேல்மாறன்
கடம் : கு.ரவிசங்கர்
தம்புரா : க.ரஜீவன்

**பதினாறாவது இசை நிகழ்வு**

**76.** வா சகியே
இராகம் : ஹாபி
தாளம் : மிஸ்ரசாபு
இயலிசை அழகு:
வசாவிளான் தவமைந்தன்

**77.** எப்படி மறந்தானோ
இராகம் : சிந்துபைரவி
தாளம் : ஆதி
இயலிசை அழகு :
வசாவிளான் தவமைந்தன்

**78.** அந்திமயங்கும் நேரம்
இராகம் : நீதிமதி
தாளம் : ஆதி
இயல் அழகு : அகத்தியர் அடிகள்
இசை அழகு: வசாவிளான் தவமைந்தன்

**79.** பரிமளமே துயில்
இராகம் : மோஹனாங்கி
தாளம் : ஆதி (திஸ்ரநடை)
இயல் அழகு : கலாநிதி க.சொக்கலிங்கம்
இசை அழகு : வசாவிளான் தவமைந்தன்

குரலிசையாளர்கள் : ஸ்ரீ.மதுராங்கி, சி.மதுஜா, ந.சங்கீதவாணி, மு.அனுச்சித்திரா

வயலின் : கா.குகபரன்
மிருதங்கம் : ம.லோகேந்திரன்
கஞ்சிரா : அ.சண்முகப்பிரியன்
கடம்: கு.ரவிசங்கர்
தம்புரா : க.சுடரோன்

**பதினேழாவது இசை நிகழ்வு**

**80.** சொல்லடா வாய்திறந்து
இராகம் : தேஸ்
தாளம் : ஆதி
இயல் அழகு : நுண்கலைமாணி மோகனா பாலசுப்பிரமணியம்
இசை அழகு: வசாவிளான் தவமைந்தன்

**81.** மனதினில் நிறைந்த
இராகம் : ஹமீர்கல்யாணி
தாளம் : ஆதி
இயலிசை அழகு :
வசாவிளான் தவமைந்தன் V7

**82.** எல்லை மீறிய
இராகம் : பிருந்தாவனி
தாளம் : ஆதி
இயலிசை அழகு :
வசாவிளான் தவமைந்தன் V6

**83.** தாலாட்டு
இராகம் : நீலாம்பரி
தாளம் : மிஸ்ரசாபு
இயல் அழகு :
நவாலியூர் சோமசுந்தரப் புலவர்
இசை அழகு : வசாவிளான் தவமைந்தன்

குரலிசையாளர்கள் : த.றொபேட், க.ரஜீவன் மு.துஸ்யந்தன், அ.அமிர்தசிந்துஜன், ப.சாரங்கன், க.சுடரோன்
வயலின் : கே.வேலதீபன்,
மிருதங்கம் :க.நந்தகுமார்,
கஞ்சிரா : ஞா.வசந்
தம்புரா : க. சுடரோன்

**பதினெட்டாவது இசை நிகழ்வு**

**84.** நல்லூரான் கிருபை
இராகம் : சிந்துபைரவி
தாளம் : மிஸ்ரசாபு
இயல் அழகு : யோக சுவாமிகள்
இசை அழகு : வசாவிளான் தவமைந்தன்

**85.** நாராயணா நமோ
இராகம் : தேஸ்
தாளம் : ஆதி
இயல் அழகு : ஏ.கே.ஏரம்பமூர்த்தி
இசை அழகு : வசாவிளான் தவமைந்தன்

**86.** ஞான ஊஞ்சல்
இராகம் : கல்யாணி
தாளம் : ஆதி (திஸ்ர நடை)
இயல் அழகு :
அருட்கவி சீ.விநாசித்தம்பிப் புலவர்
இசை அழகு: வசாவிளான் தவமைந்தன்

**87.** ஓம்நமோ நாராயணா
இராகம் : வகுளாபரணம்
தாளம் : ஆதி (7)
இயல் அழகு : யோக சுவாமிகள்
இசை அழகு: வசாவிளான் தவமைந்தன்

**88.** ஓம் ஓம் ஓமென்றே
இராகம் : யமன்கல்யாணி
தாளம் : ஆதி (திஸ்ர நடை)
இயல் அழகு : செல்வி கா.மங்களாதேவி
இசை அழகு : வசாவிளான் தவமைந்தன்

குரலிசையாளர்கள் : த.றொபேட், க.ரஜீவன், மு.துஸ்யந்தன், ஸ்ரீ.மதுராங்கி, அ.அமிர்தசிந்துஜன், சி.மதுஜா, மு.அனுச்சித்திரா, ந.சங்கீதவாணி, ப.சாரங்கன், க.சுடரோன்
வயலின் : அ.ஜெயராமன்,
மிருதங்கம் : நா.மாதவன்,
தபேலா : சதா.வேல்மாறன்,

**பத்தொன்பதாவது இசை நிகழ்வு**

**89.** தில்லானா ததீம்த
இராகம் : நிரோஸ்ரா
தாளம் : ஆதி
இயலிசை அழகு:
வசாவிளான் தவமைந்தன்

**90.** த்ருதோம் னனனதீம்
இராகம் : வர்ணரூபிணி
தாளம் : ஆதி
இயலிசை அழகு : V5
வசாவிளான் தவமைந்தன்

**91.** ஜெணுததீம், தக ஜெணுததீம்
இராகம் : ஜனசம்போதினி
தாளம் : ஆதி
இயலிசை அழகு V4
வசாவிளான் தவமைந்தன்

குரலிசையாளர்கள் :
த.றொபேட், க.ரஜீவன், மு.துஸ்யந்தன், ஸ்ரீ.மதுராங்கி, அ.அமிர்தசிந்துஜன், சி.மதுஜா, மு.அனுச்சித்திரா, ந.சங்கீதவாணி, க.சுடரோன், ப.சாரங்கன்

வயலின் : அ.ஜெயராமன்,
மிருதங்கம் : வ.ரமணா,
கஞ்சிரா : நா.சிவசுந்தரசர்மா,
கடம் : கு.ரவிசங்கர்,
முகர்சிங் : சி.செந்தூரன் ,

**இருபதாவது இசை நிகழ்வு**

**92.** சிகரம்தடவுகதிர்
இராகம் : ஹரிகாம்போதியின் சாயல்
தாளம் : ஆதி (மிஸ்ர நடை)
இயல் அழகு : கவிஞர் சோ.பத்மநாதன்
இசை அழகு: வசாவிளான் தவமைந்தன்

**93.** புள்ளி மயில்
இராகம் : மாயாமாளவகௌளை
தாளம் : ஆதி (மிஸ்ர நடை)
இயல் அழகு : கவிஞர் சோ.பத்மநாதன்
இசை அழகு: வசாவிளான் தவமைந்தன்

**94.** தூவி மயில்
இராகம் : சிந்துபைரவி
தாளம் : மிஸ்ரசாபு
இயல் அழகு : கவிஞர் சோ.பத்மநாதன்
இசை அழகு :
சங்கீதவித்துவான் பொன்.ஸ்ரீவாமதேவன்

**95.** ஆறுமுகமாட
இராகம் : மோகனகல்யாணி
தாளம் : ஆதி (கண்ட நடை)
இயல் அழகு :
நவாலியூர் சோமசுந்தரப் புலவர்
இசை அழகு : வசாவிளான் தவமைந்தன்

**96.** நாலானவேத
இராகம் : சல்லாபம்
தாளம் : ஆதி
இயல் அழகு : கவிஞர் சோ.பத்மநாதன்
இசை அழகு: வசாவிளான் தவமைந்தன்

**97.** அருகு மல
இராகம் : ஹம்சநாதம்
தாளம் : சதுஸ்ர ஏகம் (கண்ட நடை)
இயல் அழகு :
அருட்கவி சீ.விநாசித்தம்பிப் புலவர்
இசை அழகு: வசாவிளான் தவமைந்தன்

**98.** அரியொடு பிரமன்
இராகம் : பெஹாக்
தாளம் : ஆதி
இயல் அழகு :
நவாலியூர் சோமசுந்தரப் புலவர்
இசை அழகு : வசாவிளான் தவமைந்தன்

குரலிசையாளர்கள் :த.றொபேட், க.ரஜீவன், மு.துஸ்யந்தன், ஸ்ரீ.மதுராங்கி, அ.அமிர்தசிந்துஜன், சி.மதுஜா, மு.அனுச்சித்திரா, ந.சங்கீதவாணி, க.சுடரோன், ப. சாரங்கன்

வயலின் : கா.குகபரன்,
மிருதங்கம் : க.கஜன்,
கஞ்சிரா : நா.சிவசுந்தரசர்மா,
கடம் : கு.ரவிசங்கர்,
முகர்சிங் : சி.செந்தூரன்,
தம்புரா : க.சுடரோன்

**இருபத்தோராவது இசை நிகழ்வு**

**99.** நந்திக் கடல் அருகமர்ந்த கண்ணகியம்மா
இராகமாலிகை
தாளம் : ஆதி
இயலிசை அழகு:
வசாவிளான் தவமைந்தன்

**100.** நூறு பாட்டிசைக்கும்
இராகம் : கீரவாணி
தாளம் : ஆதி
இயலிசை அழகு : வசாவிளான் தவமைந்தன்

மங்களம்
இராகம் : மத்தியமாவதி
தாளம் : ஆதி
இயலிசை அழகு : வசாவிளான் தவமைந்தன்

**நிகழ்வின் அனைத்துக் கலைஞர்களாலும் ஆற்றுகை செய்யப்படும்.**

# நன்றியுரை

- என்னை இந்த உலகில் ஈன்றெடுத்து ஆளாக்கி அழகு பார்க்கும் எனது அம்மாவிற்கு நன்றிகள்
- என்னுள் கலையுணர்வூட்டி தமிழிசையைக் குருதியாய் என் நாடி நரம்புகளில் ஓடச் செய்து கடவுளாகிவிட்ட எனது அப்பாவிற்கு நன்றிகள்
- இந்த மலருக்கான ஆசியுரைகளையும் வாழ்த்துரைகளையும் வழங்கி மகிழ்ந்த குருமார்கள், பேராளர்கள் அனைவருக்கும் நன்றிகள்
- குரலோசை - நுண்கலைகளின் தாயகத்திற்குரிய சின்னத்தை அழகுற வரைந்து தந்த ஓவியர் ரமணி அவர்களுக்கு நன்றிகள்
- தனது பாடல்கள் அனைத்தையும் வழங்கியதுடன் இந்நிகழ்வு பற்றிப் பல தடவைகள் கலந்துரையாடிய கவிஞர் சோ.பத்மநாதன் அவர்களுக்கு நன்றிகள்
- முள்ளியவளை கவிஞர் சிவனேசன் கந்தையா அவர்களின் பாடல்களை பாதுகாத்து வைத்திருந்த அருணா செல்லத்துரை அவர்களுக்கும் அப்பாடல்களின் பிரதியை அனுப்பி வைத்த இசையாசிரியர் திருமதி சாந்தி கமலகாந்தன் அவர்களுக்கு நன்றிகள்
- சுவாமி விபுலானந்தர் அவர்களின் பாடலை ஒலிப்பதிவு செய்து அனுப்பியிருந்த விரிவுரையாளர் பிரியதர்சினி அவர்களுக்கு நன்றிகள்
- மட்டக்களப்பு முழக்கர் முருகப்பா அவர்களின் பாடல்களை வழங்கிய சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவக இசைத்துறைத் தலைவர் நண்பர் தெ.பிரதீபன் அவர்களுக்கு நன்றிகள்
- ஆறுமுக நாவலரின் பாடல்களை வழங்கிய மாணவர்களான ந.சஞ்சீவன், க.வர்ஜிகன் ஆகியோருக்கு நன்றிகள்
- திருகோணமலையைச் சேர்ந்த செல்வி கா. மணிமேகலா அவர்களின் பாடல்களை வழங்கிய மாணவி அஸ்வினி அவர்களுக்கு நன்றிகள்
- மட்டக்களப்பு க.மயில்வாகனம் அவர்களின் பாடல்களை வழங்கிய மாணவர் அ.கல்யாண்சரண் அவர்களுக்கு நன்றிகள்
- சங்கீதபூசணம் திரு.எல்.திலகநாயகம் போல் அவர்களின் பாடல்களை வழங்கிய மாணவி செல்வி கு.மயூரதி அவர்களுக்கு நன்றிகள்
- தமிழிசைக் கற்கை நெறியில் தம்மை இணைத்து அர்ப்பணிப்புடன் பணியாற்றி பல பணிகளிலும் ஈடுபட்ட எனது அன்பு மாணவர்களுக்கு நன்றிகள்
- இசை ஆசிரியர்களுக்கு அழைப்பிதழ்களை வழங்குவதற்கு ஆலோசனை வழங்கிய நுண்கலைமாணி சிவசிவா அவர்களுக்கும் வடமராட்சிப் பிரதேச அழகியற்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஜமுனா அவர்களுக்கும் நன்றிகள்
- எந்த ஆலயத்தில் நின்றபோது ஈழத்தின் தமிழிசை கருக்கொண்டதோ அந்த ஆலயமாகிய சிதம்பரம் நடராஜர் ஆலயத்தில் இன்றைய நிகழ்வு சிறக்க வேண்டி சிறப்பு வழிபாடு மேற்கொண்ட தமிழிசை மாணவர் க. வர்ஜிகனுக்கு நன்றிகள்

- நிகழ்விற்கான பணிகளில் உடனிருந்த தம்பி மாதவன், செந்தூரன் மற்றும் தமிழிசை மாணவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் நன்றிகள்
- இந்த நிகழ்வினை நடாத்துவதற்கு இலங்கை வேந்தன் மண்டபத்தை வழங்கிய திரு திருமதி இராதாகிருஸ்ணன் இணையருக்கு நன்றிகள்
- ஊடக சந்திப்பிற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த யாழ். ஊடக அமைத்தாருக்கு என் நன்றிகள்
- இந்த விழா பற்றிய எனது முகநூல் பகிர்வுகளைத் தங்கள் முகநூல்களில் பகிந்து கொண்ட முகநூல் நண்பர்களுக்கு நன்றிகள்
- இந்த அரங்கேற்று விழா பற்றிய செய்திகளை வெளியிட்ட அச்சு, இலத்திரனியல் ஊடகங்களுக்கு நன்றிகள்
- இந்த மலரின் இணை அனுசரணையாளர்களான நாட்டியக் கலைமணி மு.அருள்மோகன், தண்ணுமை வித்தகர் பிலிப் அன்றூ (பிரான்ஸ்)ஆகியோருக்கு நன்றிகள்
- இந்த அரங்கேற்ற நிகழ்விற்கு இணை அனுசரணை வழங்கிய நுண்கலைமாணி திருமதி . மோகனா பாலசுப்பிரமணியம் (அமெரிக்கா) அவர்களுக்கு நன்றிகள்
- இந்த நிகழ்விற்கான ஒலியமைப்பை மேற்கொண்ட தம்பி ப.குமணன் அவர்களுக்கு நன்றிகள்
- பல பேராளர்கள் வாழ்த்துரைகள் வழங்கியிருப்பினும் நாடகப் பேராசான் குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்கள் எனது கடந்த காலக் கலை வரலாற்றின் முக்கியமான தருணங்களை நினைவு கூர்ந்து மிகவும் விரிவான முறையில் தனது வாழ்த்துரையை வழங்கியிருந்தார். “இது என்னைப் புகழ்வது போல் இருக்கின்றது” என்று நான் கூறிய போது “ இல்லை, இது தேவையானது; அப்படியே இருக்கட்டும்” என்று அன்புக் கட்டளை யிட்டார். அவரது அன்புக்கும் பண்புக்கும் நன்றிகள்
- இந்த நிகழ்வின் ஆற்றுகை பற்றிச் சிந்திக்கத் தொடங்கிய காலத்தில் இருந்து என்னோடு தோள் நின்றதுடன் ஆலோசனைகளையும் வழங்கி முழுமையாக அருகில் நின்றவர் அன்புத் தம்பி ரமணரகு. இந்த அரங்கேற்று விழாவை ஆர்வத்துடனும் அர்ப்பணிப்புடனும் ஆவணப்படுத்தும் தம்பி ரமணரகு அவர்களுக்கு நன்றிகள்
- இந்த நிகழ்விற்காக நூற்று இருபதிற்கும் மேற்பட்ட வகுப்புக்களை எனது கலையகத்தில் நிகழ்த்த வேண்டியிருந்தது. அந்த வேளைகளில் மாணவர்களை இன்முகத்துடன் வரவேற்று உபசரித்ததுடன் எனது இந்தக் கலைப் பயணத்தில் துணையாய் நின்ற எனது மனைவி மயூராவிற்கு நன்றிகள்

நிறைவாக

இந்தத் தமிழிசை அரங்கேற்று விழாவிற்கான வகுப்புக்கள், செயற்பாடுகள் போன்ற அனைத்தையும் வருமானத்தை நோக்காகக் கொண்டு செயற்படாமல் எனது தனிப்பட்ட முயற்சியில் இந்த அரங்கேற்று விழாவை முன்னெடுக்கும் மன உறுதியையும் உளப்பாங்கையும் நிறைவாக எனக்கு அருளிய இறைவா.........

**நன்றி நன்றி நன்றி.**

# தமிழிசை அரங்கேற்றத்தின் குரலிசையாளர்கள்



தவநாதன் றொபேட், முதுநிலை விரிவுரையாளர்,
இசைத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.



க.ரஜீவன், இசையாசிரியர்,
யாழ்.மத்திய கல்லூரி.



மு.துஸ்யந்தன், முன்னாள் உதவி விரிவுரையாளர்,
இசைத்துறை, யாழ்.பல்கலைக் கழகம்.



ஸ்ரீ.மதுராங்கி, உதவி விரிவுரையாளர்,
இசைத்துறை, யாழ்.பல்கலைக் கழகம்.



அ.அமிர்தசிந்துஜன், உதவி விரிவுரையாளர்,
நடனத்துறை, யாழ்.பல்கலைக் கழகம்.



சி.மதுஜா, முன்னாள் உதவி விரிவுரையாளர்,
இசைத்துறை, யாழ்.பல்கலைக் கழகம்.



ந.சங்கீதவாணி, முன்னாள் உதவி விரிவுரையாளர்,
இசைத்துறை, யாழ்.பல்கலைக் கழகம்.



மு.அனுச்சித்திரா, முன்னாள் உதவி விரிவுரையாளர்,
இசைத்துறை, யாழ்.பல்கலைக் கழகம்.




ப.சாரங்கன், பழைய மாணவர்,
யாழ்ப்பாணக் கல்லூரி.



க.சுடரோன், மாணவர்,
பரி.யோவான் கல்லூரி.

# துணை இசைக் கலைஞர்கள்


அ.ஜெயராமன்


சு.கோபிதாஸ்


கா.குகபரன்


மா.பிரவீனா


ப.சியாம்கிருஷ்ணா


கே.வேலதீபன்


மா.சிதம்பரநாதன்


அ.செல்வரத்தினம்


சதா.வேல்மாறன்


க.கஜன்


வ.ரமணா


க.நந்தகுமார்


சி.செந்தூரன்


நா.மாதவன்


நா.சிவசுந்தரசர்மா


கு.ரவிசங்கர்


ந.சதீஸ்குமார்


வெ.பிரபாகரசர்மா


ம.லோகேந்திரன்


கே.பிரணவன்


து.சுபேஸ்


வி.இராகவன்


பா.ஞானவேல்


ஞா.வசந்


ச.பிரணவன்


அ.சண்முகப்பிரியன்

எவகிறின் அச்சகம். கே.கே.எஸ். றோட். யாழ்ப்பாணம். 021 221 9893